
# முஸ்லிம் காங்கிரஸ் தேசிய மாநாட்டுப் பேருரைகள்!



எம்.எச்.எம். அஷ்ரஃப்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்

தேசிய மாநாட்டுப் பேருரைகள்!

# (வெளிச்ச வீடுகள்)

எம். எச். எம். அஷ்ரஃப்

வெளியீடு

தாருஸ்ஸலாம் வெளியீட்டகம்

DSP NO: 30

| | |
|---|---|
| Title | : Sri Lanka Muslim Congress Maanaddu Perruraigal (Valecha Vedugal) |
| Pages | : IV + 110 |
| Pubished by | : "Dahrussalam" Publication "Shanthi Illam" Vauxhall Lane, Colombo - 02 |
| Cover Design by | : M. Fowser |
| First Edition | : 21 November 1999 |
| Price | : 100/= |

# வெளிச்ச வீடுகள்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் றஹீம்

முஸ்லிம் காங்கிரசின் 16வது தேசிய மாநாட்டில் மிகப்பெரும் பணியொன்றை மேற்கொள்கின்றோம். அந்த வகையில், 6வது மாநாட்டிலிருந்து 15வது மாநாடு வரை நடைபெற்ற மாநாடுகளில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஆற்றிய உரைகளை தொகுத்து வெளியிட எண்ணினோம். இருப்பினும் கூட எல்லா உரைகளையும் இதனுள் கொண்டுவர முடியாது போய்விட்டது. காரணம் சில ஆவணங்கள் தற்காலிகமாக கைசோர்ந்து விட்டன.

முஸ்லிம் காங்கிரஸ் பலம்வாய்ந்த ஒரு அரசியல் கட்சியாக இருந்த போதிலும் கூட அதன் மிகப்பெரிய பலவீனங்களில் ஒன்றுதான் கட்சி நடவடிக்கைகளை "ஆவணப்படுத்துவதில்" இருந்த அக்கறையின்மையாகும். அவற்றை இச் சந்தர்ப்பத்தில் ஆராய்வது அழகுமல்ல, அம்முயற்சியால் எவ்வித பயனும் கிடைக்கப் போவதுமில்லை. இருப்பினும் கூட, தனது பலவீனங்களை தரிசிக்கின்ற வல்லமை பிந்தியாவது எமக்குக் கிடைத்துள்ளது என்பதற்காகவாவது நாம் சந்தோசப்பட வேண்டும்.

பத்து வரலாற்று முக்கியத்துவம் மிக்க தலைவரின் மாநாட்டுரைகள் கடந்த ஒரு தசாப்தகாலமாக இக்கட்சியை வழிநடத்திச் சென்றுள்ளது. ஒவ்வொரு தேசிய மாநாட்டுரையும் ஒவ்வொரு வெளிச்ச வீடாக தொழில்பட்டுள்ளது. எதிர்காலப் பயணத்தை பக்குவப் படுத்திக் கொள்ளவும் கடந்தகாலப் பயணத்தில் இருந்த

கஷ்டங்களை உணர்ந்து கொள்ளவும் இத்தொகுப்பு உதவுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

மனிதவாழ்வு – நிரந்தரமாய் என்றும் நீடிக்கப்போவதில்லை. தலைவரின் மறைவுக்குப் பின் இப்பொறுப்புகளை சுமக்க உள்ளவர்களுக்கும் இப்பதிவுகள் நிச்சயம் பயனளிக்கும்.

முஸ்லிம் சமூகத்தின் தொலைந்து போன முகவரியை கண்டெடுத்தது எமது சாதனை என்ற போதும்கூட, அம்முகவரி எதிர்காலத்தில் தொலையாமல் தொடர்ந்தும் வெளிச்சத்தில் இருப்பதற்கு இத்தகைய வெளிச்ச வீடுகள் நிச்சயம் துணை செய்யும். தவறிப்போன வெளிச்ச வீடுகளை கண்டுபிடிக்க உதவும் போராளிகளுக்கு நாம் கடமைப்பட்டிருப்போம்.

பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் இத்தொகுப்பை வெளிக்கொண்டு வரும் "தாருஸ்ஸலாம்" வெளியீட்டுப் பணிப்பாளர் சகோதரர் எம். பௌஸர் அவர்களுக்கும், கணனி மயப்படுத்திய பஸிஹா சாலிஹ், வே. மாதவி பிழைதிருத்தம் பார்த்த சகோதரர் எஸ். எச். நிஃமத் ஆகியோருக்கும் கட்சியின் சார்பில் எமது நன்றிகளும் பிரார்த்தனைகளும் என்றும் உரித்தாகும்.

**எம். எச். எம். அஷ்ரஃப்**
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர்
தேசிய ஐக்கிய முன்னணி ஸ்தாபகர்
துறைமுக அபிவிருத்தி,
புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர்

# வேது மாநாட்டு உரை

## 21 நவம்பர் 1986 – "பரஷாவிலா" மண்டபத்தில்

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.**

அனைத்துலக ரட்சகனும், அரசர்களுக்கெல்லாம் அரசனுமாகிய அல்லாஹ்வைப் புகழுந்தவனாகவும் அவனது ஹபீப் ஸர்தாரே ஆலம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் ஓதியவனாகவும், உங்கள் அனைவர் மீதும் சகோதர வாஞ்சையில் ஸலாம் சொன்னவனாகவும் தொடங்குகின்றேன்

எனதன்புள்ள சகோதரர்களே! பெரியார்களே! நண்பர்களே! தம்பிகளே! அஸ்லாமு அலைக்கும், வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு!

என் இனிய சகோதரர்களே! இந்நன்னாளின் மீது இறைவன் நன்மாராயம் சொல்வானாக! அவனது நல்லடியார்கள் நடந்தவழியில் நமது கால்களையும் பலப்படுத்துவானாக! இலங்கை முஸ்லிம்கள் அனைவர்மீதும் அவனது ரஹ்மத் எனும் கருணை பொழிவதாக!

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை நாம் இன்று இங்கு தொடங்கி வைக்கின்றோம். இந்த புதிய ஏட்டின் முதற்பக்கத்தில் எம் அனைவரினதும் பெயர்கள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எல்லாப் புகழும் இறைவனுக்கே! அவனே நமக்கு நல்லெணணங்களையும் உயர்ந்த இலட்சியங்களையும் உதிக்கச் செய்து நேர்வழியைக் காட்டுகின்றான்.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் இவ்வாறான ஒரு திசை திருப்பம் நீண்ட காலமாக எதிர் பார்க்கப்பட்ட ஒன்றுதான் என்பதை நாம் அனைவரும் அறிந்திருக்கின்றோம். அத்தகைய ஒரு திசைதிருப்பத்தை விரும்பிய ஆத்மாக்களின் கூட்டமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆறாவது வருடாந்த மாநாட்டை அமைத்துத் தந்த இறைவனுக்கே அனைத்துப் புகழும்.

இலங்கை முஸ்லிம்கள் தமது கடந்த காலத்தை எண்ணிப்பார்க்க தொடங்கிய காலத்தில் முதல்முறையாக அவர்களது அரசியல் அறிவு விழித்துக் கொண்டது. அவர்கள் தமது இறந்த காலத்தை ஏங்கிப் பார்க்கத் தொடங்கிய காலத்தில் அவர்களது அரசியல் அறிவு எழுச்சிபெறத் தொடங்கியது. சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளுக்கு பழுதுவரத் தொடங்கியதும் இலங்கை முஸ்லிம்களது அரசியல் அறிவு இயங்கத் தொடங்கியது.

இந்த இயக்கம் கடந்த பல ஆண்டுகளாக வளர்ச்சியடைந்து, நாட்டின் நாலா பகுதிகளிலும் வேகமடைந்து வந்துள்ளது. சிதறியும் பரவியும் கிடந்த புதிய உணர்வுகளைக் கூட்டுச் சேர்த்து-அதற்கு மொத்த வடிவம் வழங்கக் கூடிய தைரியம் யாருக்குமே இருக்க வில்லை. 'பூனைக்கு மணிகட்டுவது யார்' என்ற கேள்விக்கு தைரியத்துடன் மேடையேறி பதில்கூற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடந்த ஆறு ஆண்டுகளாகத் தன்னை ஆயத்தம் செய்து வந்தது. அந்த முயற்சியின் புதிய பரிமாணமே இன்றைய எமது சந்திப்பாகும்.

இலங்கை முஸ்லிம்களிடையே-அவர்களுக்கான அரசியல் கட்சியொன்றின் தேவைப்பாடு இன்று நேற்று உணரப்பட்ட ஒன்றல்ல. பிரஜா உரிமைச் சட்டத்தாலும், சிங்களம் மாத்திரமே உத்தியோக மொழி என்ற கொள்கையாலும் பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகம்-அந்த இரண்டு பெரிய நடவடிக்கைகளையும் சிறுபான்மை இனங்கள் சந்தித்தபோது-அவற்றை ஆரம்ப சவால்களாகவே கருதின. அவற்றிற்குப் பின்னும் ஒன்றன் பின் ஒன்றாக பேரினவாதப் போக்குகள் தொடர்வதற்கான தெளிவாகத் தென்பட்ட அறிகுறிகளினால்-முஸ்லிம் சமூகம் விழித்துக் கொள்ளத் தவறவில்லை. தமது அடிப்படை உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கவும்-தமது அடக்கப்பட்ட உணர்வுகளை வெளிக்காட்டவுமான பலமுள்ள சாதனமாக ஒரு தனி அரசியல் கட்சியை முஸ்லிம் சமூகம் எப்போதும் வேண்டி வந்திருக்கின்றது.

**முதல் அரசியல் ஸ்தாபனம்:**

முதல் அரசியல் ஸ்தாபனமாக 1957-10-17ல் கல்முனை நகரமண்டபத்தில்-இந்தியாவைச் சேர்ந்த மௌலவி எஸ்.எம்.மஷூர் மௌலானா அவர்களின் தலைமையில் கூடிய கிழக்கிலங்கை பேராளர்களின் மாநாட்டில் 'இஸ்லாமிய ஐக்கிய முன்னணி' என்ற ஓர் அரசியல் ஸ்தாபனம் உருவாக்கப்பட்டது. இந்த மாநாட்டில் 275 பேராளர்கள் கலந்து கொண்டனர். இவர்களில் ஏறத்தாழ பதினாறு பேர் கையெழுத்துக்கூட வைக்க முடியாமல்-தமது பெருவிரல் அடையாளங்களை பதித்தவர்கள் என்றால்-எழுதப் படிக்கத் தெரியாதவர்களிடம் கூட அப்போது மேலோங்கியிருந்த அரசியல் எழுச்சியையும் சமூக உணர்ச்சியையும் நம்மால் இனம் கண்டு கொள்ள முடியும்.

இந்த இஸ்லாமிய ஐக்கிய முன்னணிதான் 1960ம் ஆண்டு ஜுலை தேர்தலுக்காக தேர்தல் கமிஷனர் அவர்களால் "உதய சூரியன்", சின்னத்துடன் அங்கீகரிக்கப்பட்ட முதலாவது அரசியல் கட்சி என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

முஸ்லிம்களுக்கு தனிக்கட்சி வேண்டுமென்ற எண்ணம் கடந்த முப்பது ஆண்டுகளாக வெவ்வேறு பரிமாணங்களையும் பெயர்களையும் பெற்று வந்துள்ளது. இஸ்லாமிய ஐக்கிய முன்னணி - இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி - மாக்ஸிய எதிர்ப்பு முன்னணி - கொழும்பு முஸ்லிம் ஐக்கிய முன்னணி - கிழக்கிலங்கை முஸ்லிம் ஐக்கிய முன்னணி - என்று, சமூகத்தின் மத்தியில் பிரபல்யம் அடைந்த எல்லா அரசியல் ஸ்தாபனங்களும் - முஸ்லிம்களுக்கு மத்தியிலிருந்து தனி கட்சி என்ற உணர்வின்மீது கட்டி எழுப்பப்பட்டவை என்பதனை மறந்துவிட முடியாது.

ஏற்கனவே இருந்த சமூகசேவை இயக்கங்களும், இப்போது இருக்கும் சமூகசேவை இயக்கங்களும் சமூகசேவா சங்கங்களாக அல்லது சமூக சேவை மாத்திரம் செய்பவையாக அல்லது அரசியல் கலப்புத் தொனிக்கும் பெயர்களில் அரசியல் ரீதியில் மழுங்கிய சமூக சேவை ஸ்தாபனங்களாக தேர்தலில் தொழிற்பட்டு வருகின்றன. ஆயினும் இவைகளில் எதுவும் முஸ்லிம்களுக்கென்று பிரத்தியேகமாக - தனித்துவமுடைய ஓர் அரசியல் இயக்கமாக இருந்ததில்லை. சிங்கள - அதி பெரும்பான்மையான தேசியக் கட்சிகளில் ஒன்றுடனோ அல்லது மற்றையதொன்றுடனோதான் கூட்டுச் சேர்ந்திருந்தன. முஸ்லிம் ஐக்கிய முன்னணி மாத்திரம் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் கூட்டுச் சேர்ந்திருந்தது. ஆனால் இந்த அரசியல் கூட்டை முஸ்லிம் ஐக்கிய முன்னணி போட்டியிட்ட நான்கு தொகுதிகளிலும் முஸ்லிம்கள் நிராகரித்தனர்.

**முஸ்லிம் பிரதிநிதிகள் என்ற பொம்மைகள்:**

சிங்கள - அதிபெரும்பான்மையான கட்சி, அரசாங்கத்தை அமைக்கும் போது, அக்கட்சியோடிருந்த முஸ்லிம் பிரதிநிதிகள் முஸ்லிம்களாலோ அல்லது முஸ்லிம்கள் அல்லாதோராலோ தெரியப்பட்டிருந்தாலும் - அவர்கள் முஸ்லிம்களுக்கான ஒரு கட்சியின் பிரதிநிதிகளாக ஒருபோதும் இருந்ததில்லை. அவர்களெல்லாம் பதவியில் இருந்த போதும், இருக்கின்ற போதும் தான் - முஸ்லிம்கள்

ஏற்கனவே அனுபவித்து வந்த உரிமைகளும் சலுகைகளும் மிக வேகமாக மறையத் தொடங்கின. அதாவது, இலங்கை முஸ்லிம்கள் பங்குபற்றிய அரசாங்கத்திலிருந்த கட்சிகளின் போக்குகளாலேயே தமது உரிமைகளை இழந்து வந்துள்ளனர். தேசியக் கட்சிகளின் அரசியல் நடவடிக்கைகளையும் போக்குகளையும் தடுத்து நிறுத்தக் கூடிய திராணி அவர்களுக்கு ஒருபோதும் இருக்கவில்லை. அதிபெரும்பான்மைத் தேசியக் கட்சியில் சேர்ந்திருக்கும் முஸ்லிம் பிரதிநிதிகள் அத்தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் முஸ்லிம்களின் அபிலாசைகளுக்குப் புறம்பான - பேரின நன்மைக்கான போக்கையே மறைமுகமாக ஆதரிக்கக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். சிங்கள தேசிய கட்சியில் அடைக்கலம் பெற்று அதிலிருந்தவாறே அக்கட்சியின் சிறுபான்மை விரோதச் செயல்களுக்கு எதிர்த்துக் குரல் கொடுப்பதென்பது இயலாத காரியம். அவர்களால் இப் பொறுப்பை ஒரு போதும் செய்யவே முடியாது. ஆயினும் கூட அற்ப சலுகைகளுக்காக அரிய உரிமைகளை இழக்க அறியாக் குழந்தைகளைப் போல் ஆயத்தமாக இருக்கிறார்கள். அத்தகைய பிரதிநிதிகளால் எஞ்சியுள்ள உரிமை களைக்கூட காக்கவோ அல்லது இஸ்லாமிய எழுச்சிக்கு தூபமிடவோ ஒருபோதும் முடியப் போவதில்லை.

ஆதலால், முஸ்லிம்கள் இலங்கையில் தமது கௌரவத்தையும் உரிமையையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்று விரும்பினால், தங்களது உரிமைகளுக்கு உத்தரவாதம் கூறும் உறுப்பினர்களையும் தாங்களே தெரிந்து கொள்வதுதான் சாத்தியமான ஒரே வழி என்பதனை அவர்கள் இப்போது புரிந்து கொண்டுள்ளனர்.

**நம்பிக்கை தளர்ந்தது:**

பழம்பெரும் அரசியல்வாதிகளும், பழுத்த இயக்கங்களும் இருக்கும்போது அவர்களும், அவைகளும் முன் வந்து முஸ்லிம்களுக்கான ஒரு கட்சியை உருவாக்குவார்கள் என்று நாமெல்லோரும் நம்பிக்கொண்டிருந்தோம். நாட்களைக் கடத்திக் கொண்டும் நாடகம் நடித்துக் கொண்டும் அவர்கள் செல்வதைத் தவிர வேறொன்றும் உருப்படியாக நடக்கவில்லை. ஆயுதப் போராட்டத்தின் மூலம் உரிமைகளைப் பெறுகின்ற நிலைமைக்கு நாம் தள்ளப்படவில்லை என்பதற்காக, வாய் திறந்தாவது நாம் நமது உரிமைகளைத் தட்டிக் கேட்கக் கூடாதா? எமது சமூகத்தின் உரிமைக்

குரலை இத்தகையவர்கள் இனிமேலாவது எழுப்புவார்கள் என்ற நம்பிக்கையை இளைய தலைமுறை இழந்து கொண்டிருக்கின்றது.

பேரினவாத தலைவர்களிடம் நல்ல பிள்ளைகள் என்ற பெயர் பெறுகின்ற ஒரே இலட்சியத்துடனும்-தங்கள் பதவிகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடனும் இருக்கும் இவர்களின் கரங்களிடம் இன்னும் நாம் எமது சந்ததிகளின் எதிர்காலத்தை அடவு வைக்கப்போகிறோமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். முஸ்லிம் சமூகத்தின் உரிமைகள் ஒன்றன் பின் ஒன்றாக பறிபோவதைப் பார்த்துக் கொண்டிருக்கும் தலைவர்களும், அவர்கள் கட்டிக் காக்கின்ற இயக்கங்களும் முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுக்க வெளியே வரப்போவதில்லை என்பதையும் நாம் சரியாகப் புரிந்து வைத்திருக்கிறோம்.

கட்சியில் இருப்பவர்களும் - கட்சி இல்லாமல் இருப்பவர்களும்-கட்சி தேடி அலைபவர்களும் என்ற எல்லா ரீதியான பிற்போக்கு முஸ்லிம் அரசியல்வாதிகளும் முஸ்லிம்களுக்கான ஒரு கட்சியிலோ-முஸ்லிம்களுக்கான ஒரு கட்சி தேடியோ இருப்பவர்கள் அல்லர். இன்னுமின்னும் ஆசை, பதவித் தவிசில் இருந்து பார்க்க-தொடர்ந்து இருக்க உள்ள ஆசைதான் முஸ்லிம் தலைமைத்துவத்தின் முதற் கொள்கையாகவுள்ளது.

இந்த நிலைமை மாறாத வரையில்-இந்த நிலைமையை மாற்றாத வரையில்-இலங்கை முஸ்லிம்கள் தமது சந்ததிகளின் கரங்களில் விலங்குகளை மாட்டுவதை யாரும் தவிர்க்க முடியாது.

இலங்கை முஸ்லிம்கள் மிருகங்களோ காட்டுமிராண்டிகளோ மூடர்களோ இல்லை.

சுதந்திர உணர்ச்சியில்லாத மனிதன் வெறும் மிருகம். சம உரிமைகளை பேணாத-வேண்டாத மனிதன் ஒன்றில் காட்டுமிராண்டி அல்லது மூடன்.

ஆனால், இலங்கை முஸ்லிம்கள் வெறும் மிருகங்களும் இல்லை; காட்டுமிராண்டிகளும் இல்லை; மூடர்களும் இல்லை.

நட்சத்திர யுத்தம் பற்றியும், ஆயுதப் பரிகரணம் பற்றியும் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காலம் இது. உலகெங்குமுள்ள

பாதிக்கப்பட்ட மக்கள் குலம்-தமது உரிமைப் போர்களுக்காய் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்து போரிட்டு-தம் உரிமைகளை நிலைநிறுத்தும் காலம் இது. ஒரு புறம் அமெரிக்க ஏகாதிபத்திய கூடாரமும், மறுபுறத்தில் கம்யூனிஸக் கூடாரமும் உலக முஸ்லிம்களின் ஒற்றுமையைக் கூறுபோட்டு முஸ்லிம் உலகின் முன்னேற்றத்தை பிளவுபடுத்திக் கொண்டிருக்கின்ற காலம் இது. மனிதாபிமான அடிப்படையில் எழுந்த சர்வதேச சட்டங்களையும், சமாதானத்திற்காய்-நீதி நியாயத்திற்காய் குரல் எழுப்பும் ஐக்கிய நாடுகள் சபையையும் ஒரு புறத்திலும்-அவற்றைத் தம் லாபத்திற்காய் மீறும் ரத்ததிகார சக்தியுள்ள இஸ்லாமிய விரோத வல்லரசுகள் மறு புறத்திலுமாக-உலக அதிகாரத்துக்கான போட்டி நடைபெறுகின்ற காலம் இது. ஏகாதிபத்திய-நவகாலனித்துவ சர்வதேச சக்திகள் சமத்துவத்திற்காய் உரத்த குரல் எழுப்பிக் கொண்டே எஜமான்-அடிமைச் சமூகத்தை ஆதரித்து வளர்த்து வரும் காலம் இது.

இந்த சர்வதேச அரங்கில் எழும்புகின்ற அலைகளால் தேசங்கள் தோறுமுள்ள சிறுபான்மைச் சமூகங்களே பெரிதும் பலியாகி வருவதனை நாம் இன்று கண்கூடாக கண்டு வெகுண்டு வந்துள்ளோம்.

சர்வதேச நீச சக்திகளின் கரங்களில் அகப்பட்டு வல்லமை இழந்து வருகின்ற இஸ்லாமிய உலகிற்காய் இங்கு நாம் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றோம். ஈராக்-ஈரான் யுத்தமும், பலஸ்தீன உரிமைப் போராட்டமும், லிபியா மீதான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அத்துமீறல் பேய்க்கூத்து போன்றவையும் நம் நெஞ்சங்களில் ரணங்களை ஏற்படுத்தியுள்ளன. மறுபுறம், தாய்நாடான இலங்கையில் நமது சமூகமான முஸ்லிம்கள் தமது உரிமைகளை இழந்து வருவது நம் இதயத்தே ஆற்றொணாப் புண்ணாக புரையோடிப் போயிருக்கிறது. இந்த உள்நாட்டு வெளிநாட்டு அக்கிரமங்களுக்கு இலங்கை முஸ்லிம்கள் பகடைக் காய்களாகப் பாவிக்கப்பட்டு வருகின்றனரா என்ற சந்தேகமும் நம்மிடையே வலுத்து வருகிறது.

**பேரினவாதச் செயற்பாடுகள்:**

சிறுபான்மை இனங்களின் கால்களைத் தறித்து பேரினவாத அரசாங்கம் தனது சாய்மனைக் கதிரைகளைச் செய்துள்ளதாகத் தோன்றுகிறது. சிறுபான்மை இனங்களை ஒன்றோடொன்று மோத

விடுவதன் மூலம்-தமது ஒரு பக்க லாபத்தை அடைய பேரினவாதிகள் சதித்திட்டம் தீட்டியுள்ளதையும் காண முடிகிறது.

இந்த நிலைமைகள் எல்லாம் இலங்கை வாழ் முஸ்லிம்களை தனித்துப் போகவே நிர்ப்பந்தித்துள்ளதை நாம் அடையாளம் கண்டுள்ளோம். நாட்டுப் பிரிவினையை நாம் கோரவில்லை. பயங்கரவாதத்தை, பிரச்சினையைத் தீர்க்கும் ஒரே வழியாக நாம் அங்கீகரிக்கவில்லை. ஆயினும், நாம் இன்று வற்புறுத்த வேண்டி வந்துள்ளது-முஸ்லிம்கள் தமது உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதற்கான சிறந்த உபாயம் ஒன்றையே. இந்த உபாயம் மூலம் ஒற்றுமைக்குள் ஒற்றுமையாய் இருக்க வேண்டுமென்று நாம் விரும்பியிருந்தோம். ஆனால் அது எல்லை மீறி-நமது கரங்களைத் தாண்டி வெகுதூரம் விலகிச் சென்று மறைந்து விட்டதை அறிய முடிகிறது. இனிமேல் நமக்குள்ள ஒரே உத்தி வேற்றுமையில் ஒற்றுமை காண்பதுதான்! இங்கு நாம் பேசப் போவதும் வேற்றுமையில் ஒற்றுமை பற்றித்தான்! இவைதான், நாம் முஸ்லிம் களுக்கென ஒரு தனிக் கட்சி அமைப்பதற்காக நிர்ப்பந்தித்த சூழ்நிலைகளாகும்.

**தாய் மொழி:**

சிங்களம் மட்டும்தான் உத்தியோக மொழிச்சட்டம் என்ற கோட்பாட்டை முன் வைத்ததிலிருந்து தேசிய அரசியல் கட்சிகள், பேரினவாதப் போக்குகளைக் கடைப் பிடிக்கத் துவங்கின. இந்தப் போக்குகள் சிறுபான்மை சமூகங்களை நசுக்குவதற்காக ஆரம்பிக்கப்படாமல் இருந்தாலும் கூட-அரசியல் அதிகாரங்களைப் பற்றிப் பிடிப்பதற்கும் அரசியல் அதிகாரங்களை கைமாற்றுவதற்கும் சிறுபான்மை சமூகங்களின் அபிலாஷைகள் பலியாக்கப்பட வேண்டியிருந்ததை யாரும் மறுக்க முடியாது.

ஆங்கிலேய ஆட்சியின் போதும்-சுதந்திரம் கிடைக்கின்ற தறுவாயிலும்-இலங்கை முஸ்லிம்கள் தமிழையே தாய் மொழியாக உபயோகித்தனர். தமிழைத் தாய் மொழியாக வைத்துக் கொண்டதன் காரணத்தினாலேயே இலங்கை முஸ்லிம் சமூகம் தனது தனித்துவத்தைப் பேணக் கூடியதாக இருந்தது.

அந்நியர் ஆட்சியுடன் இலங்கையில் ஆரம்பித்த ஆங்கிலக் கல்வியின் தாக்கமும், கிறிஸ்தவ மதமாற்றமும் முஸ்லிம் சமூகத்தின்

தனித்துவத்துக்கு பெரும் சவாலாக அமைந்தன. முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பாதுகாப்பதிலும், இஸ்லாமிய வாழ்வு நெறியிலிருந்து பிறழாமல் முஸ்லிம் சமூகத்தின் கட்டுக்கோப்பைப் பேணிப் பாதுகாப்பதிலும் உலமாப் பெருமக்கள் பெரும் பங்கு வகித்தனர். ஆங்கில மொழியைக் கற்று முன்னேறுவதை விட சமூகத்தின் அடிப்படையையும் தனித்துவத்தையும் காப்பதையே மிகவும் முக்கியம் என நாம் கருதினோம். இதனால் சிங்கள, தமிழ் சமூகங்களைவிட பல தசாப்தங்கள் கல்வியில் நாம் பின்னடைய வேண்டியேற்பட்டது.

பின்னர் முஸ்லிம் சமூகம் இஸ்லாமிய தனித்துவத்தை இழக்காமல் ஆங்கில மொழியைப் படிக்கத் தொடங்கியது. ஆங்கிலத்தைப் படிக்க வேண்டும், ஆனால் ஆங்கிலக் கலாசாரம் எமது தனித்துவத்தைப் பாதிக்கக் கூடாது என்ற சரியான நிலைப்பாடு இருந்ததாலேயே ஆங்கிலத்தைப் படித்தபோதும் இலங்கை முஸ்லிம்கள் தமது சமூகத்தின் கட்டுப்பாட்டை காக்கக்கூடியதாக இருந்தது.

உத்தியோக மொழி என்பதற்காக ஆங்கிலத்தைப் படித்த போதும்-நாம் ஒருபோதும் எமது தாய் மொழியும், வீட்டு மொழியுமாயிருந்த தமிழை மாற்றிக் கொள்ளவில்லை. அரபும் தமிழும் அரபுத் தமிழும் தெரிந்தவர்களாக முஸ்லிகள் இருந்தனர். பள்ளிக்கூடம் சென்று கற்காத பாமரன் ஒருவன் கூட அரபையும் அரபுத்தமிழையும் வாசிக்கக் கூடிய வனாகவும் தமிழைத் தெரிந்தவனாகவும் இருந்து வந்திருக்கிறான். ஆங்கில மொழியறிவு மேலதிக மொழியாகத்தான் இருந்து வந்துள்ளது.

ஆனால், சிங்களம்-தமிழ் பேசும் மக்களின் மீது திணிக்கப்பட்டதன் விளைவாக முஸ்லிம்கள் சிங்களத்தைப் படிக்க வேண்டியேற்பட்டது. சிங்களம் இந்த நாட்டின் உத்தியோக மொழி என்ற அடிப்படையில் சிங்களத்தை ஒவ்வொரு முஸ்லிமும் கட்டாயம் படித்தேயாக வேண்டும். ஆனால் சிங்கள மொழியை மாத்திரம் படித்துக் கொண்டு தமிழ் மொழியை இலங்கை முஸ்லிம் சமூகம் புறக்கணிப்பது எமது தனித்துவத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துமென்பதை நாம் மறந்து விடக்கூடாது.

**அபாய மணி:**

சிங்களம் அரசமொழியாக ஆக்கப்பட்டு ஏறத்தாழ 30 ஆண்டுகள் போனதன் பின்னர் இன்று இலங்கை முஸ்லிம் சமூகம் தமிழ் முஸ்லிம்கள்-

சிங்களமுஸ்லிம்கள் என்ற வெவ்வேறு கூறுகளுக்குள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அபாயத்தைப் பற்றி நாம் கவலையுடன் சிந்திக்க வேண்டும். இலங்கை முஸ்லிம் சமூகத்தின் அரசியல் முதுகெலும்பான கிழக்கிலங்கை முஸ்லிம்களின் இன்றைய தலைமுறைக்கு ஆங்கிலத்தையும் சிங்களத்தையும் படிப்பதற்கு உரிய வசதியைச் செய்து கொடுக்காத பொறுப்பையும் பாவத்தையும் கடந்த 30 ஆண்டு காலமாக இலங்கை முஸ்லிம்களுக்கு அரசியல் தலைமைத்துவத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும் தலைவர்களே பங்கிட்டுக் கொள்ள வேண்டும்.

அது மாத்திரமின்றி, கிழக்கிலங்கைக்கு வெளியே வாழும் சிங்களம் மாத்திரம் பயின்ற இளம் சமூகத்தை, இஸ்லாமிய கலாச்சார பண்பாட்டுப் பாரம்பரியங்களின் உணர்வு அற்றவர்களாகவும்-வெறும் சமய சடங்குகளை நிறைவேற்றுபவர்களாகவும் மாற்றியதற்கான பொறுப்பையும் அதே தலைவர்களே பொறுப்பெடுக்க வேண்டும்.

சிங்களம் உத்தியோக மொழியாக மாறி முப்பதாண்டுகளின் பின்னர் இன்று நாம் நின்று கொண்டிருக்கும் இம்முச்சந்தியில் உத்தியோக மொழியென்றதன் பேரில் முஸ்லிம் சமூகம் மீண்டும் சேரமுடியாத இரு கூறுகளாக மாறிக் கொண்டிருக்கும் அபாயமணி-தாராளமாக நமது காதுகளில் ஒலித்துக் கொண்டிருப்பதை எமக்கு கேட்கக் கூடியதாக உள்ளது.

முஸ்லிம் சமூகத்தை மொழி எனும் கோடரியால் வெட்டுகின்ற கொடுமை ஒரு புறம். அதே ஆயுதத்தாலும் வேறு முக்கிய அம்சங்களாலும் பாதிக்கப்பட்ட தமிழ் மொழியை பேசுகின்ற சகோதர சமூகம் நாட்டையே பிரித்துக் காட்டுமளவுக்கு முன்னேறியுள்ள நிலை மறுபுறம்!

முஸ்லிம் சமூகம் ஒரு புறமும் இந்த நாடு மறுபுறமும் கூறு பட வேண்டிய நிலைக்கு காரணமாக இருந்தவை பேரினவாதக் கட்சிகளின் கொள்கைகளாகும். எனவே தான் வேறுபடும் முஸ்லிம் சமூகத்தை ஒன்று சேர்ப்பது மாத்திரமின்றி வேறுபடும் இந்த நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பதுவும் இன்றைய காலகட்டத்தில் எமது கடமைப்பாடென்பதை உணர்ந்து விழித்துக் கொள்ளும் ஒரு சமூகத்தின் பிரதிநிதிகளாக இங்கு நாம் கூடியிருக்கின்றோம்.

இந்தப் பாரிய பிரச்சினைகளுக்குத் தேசிய அரசியல் கட்சிகளில் அங்கம் வகிக்கும் எந்த முஸ்லிம் நாடாளுமன்றப் பிரதிநிதியும் தீர்வுகளைக் கூறப்போவதில்லை. எவ்வாறு - நாட்டைப் பிளவு படுத்தாமலிருப்பதற்கான வழிவகைகளை தெரிந்தும் தெரியாதவர்களாக தேசிய அரசியல் கட்சித் தலைவர்கள் பாசாங்கு செய்கின்றனரோ-அதே போல் இலங்கை முஸ்லிம் சமூகம் கூறுபட்டுக் கொண்டு கலாசாரக் கூட்டழிவில் சிக்கிக் கொண்டிருப்பதை கண்டும் காணாதவர்களாக முஸ்லிம் அரசியல் தலைவர்கள் நடந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் பிரச்சனைகளை தெளிவாக இனம் காணக்கூடியவர்கள் ஏன் கண்டும் காணாத குருடர்களாகவும் தெரிந்தும் தெரியாத நடிகர்களாகவும் இருக்க வேண்டும்? அவ்வாறு இருப்பதற்கு எவ்வித நியாயமான காரணமும் கிடையாது.

**புதிய அரசியல் கட்சியின் அவசியம்:**

எனவேதான் இவற்றை காண்பவர்கள் அந்தப் பிம்பங்களைக் காணாதவர்களுக்கு எடுத்துக் காட்டும் கண்ணாடியாகவும்-தெரிந்த மருந்துகளை எழுதிக் கொடுக்கும் மருந்துச் சிட்டையாகவும் ஒரு புதிய அரசியல் கட்சி உருவாக வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

இந்த நாடு பிரிக்கப்படாமல் இருப்பதற்கும் - இந்த நாட்டு முஸ்லிம் சமூகம் தனது தனித்துவத்தை இழக்காமலிருப்பதற்கும் முதலாவது பரிகாரமாக-இந்த நாட்டின் உத்தியோக மொழியாக தமிழும் இருக்க வேண்டும் என்பதை தைரியமாக பிரகடனப்படுத்துவதில் நாம் பெருமைப்படுகிறோம்.

இந்த நாட்டிலுள்ள சிங்கள, தமிழ் சமூகங்களை போன்று முஸ்லிம்களும் ஒரு தனித்துவமான சமூகம் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். முஸ்லிம் சமூகம் தனித்துவமான சமூகம் இல்லை என்ற முடிவுக்கு நாம் வந்தால் இந் நாட்டிலுள்ள 10 லட்சத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் தம்மை தமிழர்களாக அல்லது சிங்களவர்களாக இனம் காணவேண்டும், அவ்வாறு இல்லை, நாமும் இந்த நாட்டின் தனித்துவம் உள்ள சமூகம்தான் எனில், அந்த சமூகம் எந்த அடிப்படையில் தனது தனித்துவத்தைப் பெறுகின்றது என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

அல்குர்ஆனும்-அல்லாஹ்வின் தூதராம் பெருமானார் ரசூலே கரீம்(ஸல்) அவர்களது வாழ்வு முறையும் தான் நமது சமூகத்தை ஒரு தனியினமாக அடையாளம் காட்டும் அடிப்படையெனில்-முஸ்லிம் சமூகம் ஒரு போதும் மொழி ரீதியில் தனது தனித்துவத்தை வரையறை செய்ய முடியாது. தமிழும் சிங்களமும் உத்தியோக மொழியாகும் பட்சத்திலேயே-இந்த நாட்டின் சாபக் கேடாக மாறியுள்ள இனப் பிரச்சினைக்கான வித்தினை எம்மால் கிள்ளியெறிய முடியும்.

எனவே தான் ஒவ்வொரு பிரஜையும் தமிழையும் சிங்களத்தையும் கட்டாயமாகப் படிக்கக் கூடிய சட்ட மாற்றங்களை ஏற்படுத்துவது அவசியம் என்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் நம்புகிறது.

**எமது நம்பிக்கை:**

நாங்கள் முஸ்லிம்கள், அல்லாஹ்வின் சட்டதிட்டங்களையும் வாழ்வு நெறிகளையும் பின்பற்றுவதில் பெருமைப்படுபவர்கள். அல்லாஹ்வின் கட்டளைகளின் அடிப்படையில் ஒரு சமூக மாற்றம் ஏற்படும் போதுதான்-இந்த நாட்டில் மட்டுமல்ல, உலகம் முழுவதுமே நிரந்தர சமாதானத்தையும் சௌஜன்யத்தையும் ஏற்படுத்தலாம் என்று நாம் நம்புகிறோம்.

எம்மைப் பொறுத்தவரை இனம், மொழி என்பவற்றின் பேரில் மனித சமூகம் கூறுபடுவதையும் இரத்தம் சிந்துவதையும் நாம் வெகுவாக கண்டிக்கிறோம். உலகமும், உலகத்திலுள்ள சகல சொத்துக்களும் இறைவனுக்கே சொந்தமானது, என்பது நமது நம்பிக்கையாகும்.

மொழி-அது எதுவாக இருப்பினும் சரியே-எல்லா மொழிகளும் அல்லாஹ்வுக்கே சொந்தமானவை. அல்லாஹ்வின் சிருஷ்டிகள் என்ற அடிப்படையில் எல்லா மொழிகளும் எல்லா மனிதர்களுக்கும் சொந்தமானவை. இந்தப் பரந்த அடிப்படையில் சிங்களவர்கள் தமிழையும், தமிழர்கள் சிங்களத்தையும் தத்தமது மொழிகளாகக் கருதி வரையறை செய்ய முடியாது. அதுமாத்திரமல்ல, நமது ஆத்மீக நம்பிக்கைகளின் அடிப்படையில் நமது தனித்துவத்துக்கான முத்திரையைப் பதிக்க வேண்டியது இன்று நாம் செய்ய வேண்டிய வரலாற்று ரீதியான பொறுப்பாகும். அரசியல் ரீதியாக அங்கீகாரம் கிடையாத ஒரு சமூகம்-இந்த நாட்டில் தனித்துவமுடைய சமூகமாக

வாழ முடியாது. எனவே தனித்துவமான, தேசிய சமூகமாக நாம் அங்கீகரிக்கப்படுவதென்றால்-அரசியல் ரீதியான ஒரு தேசிய சமூகமாகவும் நாம் அங்கீகரிக்கப்படல் வேண்டும். இன்றைய கால கட்டத்தில் தனியான அரசியல் கட்சியாக அன்றி-அத்தகைய அங்கீகாரத்தைப் பெறமுடியாது என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

ஏற்கனவே தமிழர்களில் சிலர், முஸ்லிம்களும் தமிழர்கள் தான் என்ற கோஷத்தை முன்வைத்துள்ளார்கள். வட கிழக்கு பிரதேசம் தமிழ் பேசுபவர்களுக்கு சொந்தமான இடம் என்ற வாதத்தை நிறுவுவதற்காக இவ்விதம் எடுத்துக் கூறப்பட்ட போதும், இந்த சித்தாந்த உச்சாடனம் செய்கின்றவர்கள் முஸ்லிம்கள் தனித்துவமான ஒரு சமூகம் என்பதை ஏற்க மறுக்கின்றனர்.

சிங்கள அரசியல்வாதிகளும்-சிங்கள அரசியல்வாதிகளின் வால்களாக இருந்து கொண்டு முஸ்லிம்கள் மத்தியில் தரகர்களாக இருப்பவர்களும்-இலங்கை முஸ்லிம்கள் சிங்களவர்கள்தான் என்று நாக்கூசாமல் சொல்லவும் முற்பட்ட-முற்படுகின்ற சங்கதிகள் நமது சமுதாய வரலாற்றில் தடயங்களாக உள்ளன.

**நாங்கள் யார்:**

நாங்கள் யார்? நாங்கள் தமிழர்களா? அல்லது சிங்களவர்களா? முஸ்லிம்கள் இந்நாட்டின் தேசிய இனங்களில் ஒன்றாக அங்கீகாரம் பெறும் உரிமையுள்ளவர்களா? அல்லது எங்களை தமிழர்கள் என அழைத்தாலும் பரவாயில்லை-சிங்களவர் என்று அழைத்தாலும் பரவாயில்லை-ஏனைய இனங்கள் எங்களை எவ்வாறு வேண்டு மென்றாலும் அழைக்கட்டும். நாங்கள் ஆத்மீக நோக்கங்களுக்காக மாத்திரம் முஸ்லிம்கள் அரசியல் நோக்கங்களுக்காக நாங்கள் தமிழர்களும்தான், சிங்களவர்களும்தான்-என்று, இன்னுமின்னும் குழம்பிய குட்டையில் தொடர்ந்தும் நாற்றமெடுக்கப் போகிறோமா?

இந்த வினாக்களுக்கு விடைகாண முடியாத நிலையில்-புதிய முஸ்லிம் தலைமுறை திக்கற்று மயங்கியிருக்கும் நிலையில்-இந்த அடிப்படை வினாக்களுக்கு எங்களால் விடையளிக்க முடியும் என்று தைரியத்துடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த நாங்கள் ஒவ்வொருவரும் முன்வந்திருக்கிறோம்.

நாங்கள் சிங்களவர்களுமல்ல, நாங்கள் தமிழர்களுமல்ல, நாங்கள் இந்த நாட்டில் வாழும் சமூகங்களில் சுயமரியாதையுள்ள, தனித்துவமான, தேசிய இனங்களில் ஒன்றாகும்.

நாங்கள் தமிழர்களுக்குச் சார்பாக இருந்து-சிங்களவர் சமூகத்திற்கு எதிராக போர்க்கொடி தூக்கும் சமூகமல்ல, தமிழர்களுக்கு எதிராக சிங்களவர் சமூகத்தால் உபயோகிக்கக் கூடிய துப்பாக்கிக் குண்டுகளுமல்ல.

இந்த நாட்டு முஸ்லிம்கள் நாட்டின் சகல பாகங்களிலும் சிதறி வாழ்கின்றனர். தமிழர்களும் எங்களது சகோதரர்களே - சிங்களவர்களும் எங்களது சகோதரர்களே - நாங்கள் எந்தவொரு குறிப்பிட்ட சமூகத்திற்கும் பகைவர்கள் அல்லர். இறைவனின் சிருஷ்டிகளான ஒவ்வொரு இனமக்களும் எங்களது சகோதரர்களே! இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு இனமும் முஸ்லிம் சமூகத்தின் நட்புக்குப் பாத்திரமானவர்களே என்பதை நினைவூட்டிக் கொள்வதில் நாம் பெருமைப்படுகிறோம்.

**எங்கள் கடனாகும்:**

முஸ்லிம் சமூகம் நடுநிலைமிக்க ஒரு சமூகம்; மற்ற சமூகங்களுக்கு சரியான பாதையைக் காட்டுவது, இருண்ட பாதையில் ஒளிபாய்ச்சுவது என்பன எங்களது கடனாகும். இருதுருவங்களில் நின்று கொண்டிருக்கும் சிங்கள-தமிழ் சமூகங்களிடையே அரசியல் தூதுவர்களாகவும் பலமிக்க பாலமாகவும் எம்மால் பணியாற்ற முடியும் என்பதை நாம் நிச்சயமாகவும் ஆணித்தரமாகவும் நம்புகிறோம்.

இந்த நாட்டை விழுங்கி விடும் கொடும் அரக்கனாகவும் பெரும் புற்றுநோயாகவும் இனப்பிரச்சினை மாற்றம் பெற்று விட்டது. நியாயமான அதிகார பங்கீட்டின் மூலம் தான் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதையும் எல்லோரும் நம்புகின்றனர். ஆனால் இந்த அதிகார பங்கீடு எந்த மட்டத்தில் அமையவேண்டும் என்ற வினாவிற்கு விடை கிடைக்காததாலேயெ இனப்பிரச்சினை இவ்வளவு தூரம் இழுபறிபட்டுக் கொண்டு செல்கிறது.

வடகிழக்கு பகுதிகளில் இன்று ஒலித்துக் கொண்டிருக்கும் வெடிகளும் குண்டுகளும் நிலக்கண்ணிகளும் விடுதலை கோரும்

இனம் ஒன்றின் வேட்கைகளையும் அந்த வேட்கைகளை கட்டுப்படுத்தி முறியடிக்க முனையும் அரச முயற்சிகளையும் வெளிக்காட்டுகின்றது.

இந்த வெடிகளும் ஓலங்களும் அன்றாடம் இழக்கப்படும் விலைமதிக்க முடியாத உயிர்களும் சிந்தப்படும் இரத்தமும் முழுச் சர்வதேச உலகின் கவனத்தையும் தேசத்தின் பக்கம் ஈர்த்துள்ளன.

இப்பிரச்சினை தீர்க்கப்படாத பட்சத்தில் நமது நாடு துண்டாடப்படும் அபாயமுள்ள அதேவேளை பொருளாதார ரீதியாக குட்டிச்சுவராக வேண்டியும் ஏற்படும் என்பதை நான் சொல்லி நீங்கள் அறிய வேண்டியதில்லை. அதிகார பகிர்வு வடகிழக்கு இணைந்த பிரதேச அடிப்படையில் இருக்க வேண்டும் என்று தமிழ் சமூகத்தின் பேச்சாளர்களும், அவ்வாறு அல்ல மாகாணமே அதிகார பரவலாக்களின் அடிப்படையாக இருக்க வேண்டுமென அரசாங்கமும் கூறிக் கொண்டிருக்கிறது.

**மாகாண சபைகள் :**

மிகவும் அண்மையில் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகளின் படி கிழக்கிலங்கைக்கான மூன்று மாகாண சபைகளை உருவாக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் பார்க்கும் போது கிழக்கிலங்கை கயும் கிழக்கிலங்கையில் வாழும் முஸ்லிம்களும் மூன்று கூறுகள் ஆக்கப்படுவார்கள். தற்போதுள்ள அம்பாறை மாவட்டத்தை அடிப்படையாக வைத்து ஒரு முஸ்லிம் மாகாண சபை அமைய முடியாது. 1986ம் ஆண்டின் அதாவது தற்போதைய புள்ளிவிபரங்களின் படி அம்பாறை மாவட்டம் சிங்கள பெரும்பான்மை மாவட்டமாகவே இருக்கிறது. எனவே அம்பாறையை அடிப்படையாக வைத்து ஒரு மாகாண சபையை அமைப்பதென்பது நிச்சயமாக கிழக்கிலங்கையில் இரண்டு முஸ்லிம் மாகாண சபைகளை அமைப்பதாகவும் கிழக்கிலங்கை முஸ்லிம்களுக்கு ஒரு மாகாண சபை கிடைக்காத நிலையையுமே ஏற்படுத்தும்.

இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாக ஏற்பட்டிருக்கும் இழுபறி நிலையில் பாதிக்கப்படுகின்றவர்கள் வடகிழக்கு மண்ணை தம் நிரந்தர தாயகமாக கொண்டவர்கள் ஆவர்.

இரத்தம் சிந்தப்படுகின்ற போது அது தமிழர்களின் இரத்தமாக இருந்தாலும் சரி, சிங்களவர்களின் இரத்தமாக இருந்தாலும் சரியே

முஸ்லிம்களின் இரத்தமாக இருந்தாலும் சரியே அது விலை மதிக்க முடியாத மனித உயிர் ஒன்றிற்கு உரியது என்பதை நாம் மறந்துவிட முடியாது.

## இரத்தம் சிந்துவதை நாம் விரும்பவில்லை!

வடகிழக்கு பிரதேசங்களிலோ அல்லது வேறு எந்த பிரதேசத்திலுமோ யாரும் இரத்தம் சிந்துவதை நாம் விரும்பவில்லை. வடகிழக்கு பிரதேசங்கள் இன்று அமைதி இழந்ததற்கான காரணங்கள் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களும் அரசாங்கத்தின் மொழி கொள்கையுமேயாகும்.

இப்பிரதேசங்களில் மீண்டும் அமைதி நிலவவேண்டுமானால் அந்த அமைதி சர்வதேச அடிப்படைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீதி நியாயங்களை மையமாக வைத்து உருவாக்கப்படவேண்டும் என்பதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுதியாக நம்புகிறது.

இனப்பிரச்சனைக்கான தீர்வை வடகிழக்கு பிரதேசங்களில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த, வாழ்ந்து வருகின்ற தமிழ் முஸ்லிம் இரண்டு சமூகத்தினதும் சம்மதத்துடனும் ஆசிர்வாதத்துடனுமே காணமுயற்சிக்க வேண்டும் என்பதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்த விரும்புகின்றது.

எந்த காரணம் கொண்டும் கிழக்கிலங்கையில் வாழும் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பலம் பிரிக்கப்படக் கூடாது என்பதை நாம் வலியுறுத்த விரும்புகின்றோம். தற்போதுள்ள மட்டக்களப்பு, திருமலை அம்பாறை மாவட்டங்களில் வாழும் முஸ்லிம்கள் வெவ்வேறு மாகாண சபைகளின் அதிகார எல்லைகளுக்குள் கொண்டுவரப்பட்டால் இந்த மூன்றுமாவட்டங்களிலும் கிழக்கிலங்கை முஸ்லிம்கள் சிறுபான்மையினர் ஆக்கப்படுவார்கள்.

எனவே கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பலத்தை கூறுபோடும் சகலவித முயற்சிகளையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாக கண்டிக்கவிரும்புகிறது. இனப்பிரச்சனை தீர்வில் நாம் வடகிழக்கு தமிழர்களின் எதிர்காலத்தைப் பற்றி மாத்திரம் சிந்திக்க வில்லை.

அப்பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத்தையும் கூடவே சேர்த்து சிந்திக்கின்றோம் என்பதை இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய தலைவர்களுக்கும் தெளிவாக்க விரும்புகின்றோம்.

**கிழக்கிலங்கை முஸ்லிம்கள்:**

கிழக்கிலங்கை முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகளை புறக்கணித்து விட்டு இனப்பிரச்சனையை தீர்க்க முனைவது அர்த்தமற்றது மட்டுமன்றி ஆபத்தானதும் கூட. இது வரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இனப்பிரச்சனை தீர்வில் முஸ்லிம் சமூகத்தின் கருத்து குறிப்பாக கிழக்கிலங்கை முஸ்லிம்களின் அபிலாஷைகள் கருத்தில் எடுக்கப்பட்டு இருக்க வேண்டும்.

இனப்பிரச்சனைக்குரிய தீர்வு கிழக்கிலங்கை முஸ்லிம்களின் எண்ணங்களை கருத்தில் கொள்ளப்படாமல் எடுக்கப்படும் பட்சத்தில் அதனால் ஏமாற்றமடையும் இளைய முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு யாரும் பொறுப்பாக இருக்க முடியாது.

மாறிமாறி வந்த சிங்கள பேரினவாத அரசாங்கங்களின் கீழ் தமிழ் சமூகம் பெற்ற கசப்பான உணர்வுகளையும் அனுபவங்களையும் ஏற்பட விருக்கின்ற புதிய மாகாண சபைகளின் கீழ் முஸ்லிம் சமூகம் தமிழர்களை பெரும் பான்மையாக கொண்ட ஒரு ஆட்சியின் கீழோ சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு ஆட்சியின் கீழோ பெறமுடியாது.

ஏற்படப்போகும் புதிய மாகாண சபை ஆட்சியின் பின்விளைவாக முஸ்லிம் சமூகம் பாதிக்கப்படுவதையும் - புதிய போராட்டங்கள் தொடர்வதையும் - வட்டமேசை - சதுர மேசை பேச்சுக்கள் நடைபெறுவதையோ - முஸ்லிம் வாலிபர்கள் ஆயுதமேந்தி போராட வேண்டிய நிலைக்கு தள்ளப் படுவதையோ நாங்கள் ஒருபோதும் விரும்பவில்லை.

**எமது கோரிக்கை:**

ஆகவேதான் அதிகார பங்கீடு செய்யும் போது முஸ்லிம் சமூகத்தவர்களின் நியாயமான பங்கை தருமாறு கேட்கின்றோம். பெரும் பான்மை சிங்கள சமூகத்திற்காக எட்டு மாகாண சபைகளும்

தமிழ் சகோதரர்களின் அபிலாஷைகளுக்காக இரண்டு மாகாண சபைகளும் உருவாக்கப்படுவதும் நியாயமெனில் வடகிழக்கில் வாழும் முஸ்லிம்களின் அபிலாஷைகளை அடைவதற்காக முஸ்லிம்களுக்கென தனியான மாகாண சபையைக் கோருவதில் என்ன தவறு இருக்கிறது?

இன்றுவரை கிழக்கிலங்கை முஸ்லிம்களின் அபிலாஷைகளை தீர்க்கக்கூடிய ஒரு வழியாக முஸ்லிம் மாகாண கோரிக்கையை முன்வைத்துள்ளோம். இக்கோரிக்கைக்கு கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பரவலான ஆதரவு கிடைத்து வருகின்றது.

நாம் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் என்ற பிடிவாதத்துடன் இராமல்-இதைவிடவும் சிறந்த யோசனைகளை முன்வைக்க முடியுமா என்பதையும் சிந்திக்கின்றோம்.

தனி முஸ்லிம் மாகாண கோரிக்கைக்கு மாற்றமானதும் கிழக் கிலங்கை முஸ்லிம்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான இதைவிடச் சிறந்த வேறெந்த தீர்வையும் பரிசீலிப்பதற்கும் அதற்கு ஆதரவு தருவதற்கும் - முஸ்லிம் காங்கிரஸ் எப்போதும் தயாராகவே உள்ளது.

போராளிகளின் சார்பில் தெரிவிக்கப்படும் எந்தவொரு தீர்மானமும் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் - அபிலாஷைகளை உள்ளடக்கியதாக அமைய வேண்டுமென்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

கிழக்கிலங்கை முஸ்லிம்களும் தமிழர்கள்தான் என்ற அடிப்படையில் முன் வைக்கப்படும் எந்தவொரு தீர்வும் - கிழக்கிலங்கை முஸ்லிம்களால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதைத் தெளிவாக்க விரும்புகிறோம்.

மாறாக, முஸ்லிம் சமூகம் தனித்துவமுள்ள அரசியல் சமூகம் என்ற அடிப்படையில் தீர்வுகளை தமிழர்களால் முன்வைக்க முடியுமென்றால் - நிச்சயமாக அது முஸ்லிம் சமூகத்தின் ஆதரவைப் பெற்றே தீருமென்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இதுவரை தமிழர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்ட சகல தீர்வுகளும் முஸ்லிம்களை தமிழர்கள் என்று கருதியதன் அடிப்படையிலேயே முன்வைக்கப்பட்டுள்ளன. இத்தீர்வுகளில்

ஒன்றாவது முஸ்லிம் சமூகத்தின் ஆதரவைப் பெற வில்லையென்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

கிழக்கிழங்கை முஸ்லிம் சமூகத்தின் ஆதரவைப் பெறக் கூடிய ஒரு தீர்வை இலங்கை இந்திய அரசுகள் முன்வைக்க முடியுமென்றால் அத்தீர்வு நிச்சயம் வெற்றியடையுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகளை நடாத்துவது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு தூரம் - தமிழ்த் தலைவர்களும், தமிழ்ப் போராளிகளும் கிழக்கிழங்கை முஸ்லிம்களுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி - இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வுக்கு வருமாறு இந்திய அரசாங்கம் தமிழ்த் தலைவர்களையும் போராளிகளையும் வற்புறுத்துவதும் அவசியமே என்பதை இந்திய அரசுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

**வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாநாடு**

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க இந்த ஆறாவது மாநாடு நடைபெறும் இன்றைய காலகட்டம் இலங்கை முஸ்லிம் சிறுபான்மை சமூகத்தின் வரலாற்றில் மிகவும் முக்கியமானது. எமது சமூகத்தை அரசியல் ரீதியாக அடையாளம் காணுவதற்கு அமைந்துள்ள ஒரே ஏதுவான எமது மத நம்பிக்கையில் கைவைக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது பற்றி முஸ்லிம் சமூகம் விழிப்புடனிருக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தில் வடபகுதி தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் எந்தவொரு பிரதிநிதியும் இல்லாத சூழ்நிலையில - வட பகுதி மக்களின் விசேட தேசவழமைச் சட்டத்தை இல்லாமற் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை எமக்குத் தெரியும். தேசவழமையை இல்லாமல் செய்யும் சட்டநெறி நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட போது எகலிய கொடை எம். பி. கலாநிதி விமல் விக்கிரமசிங்க அவர்கள் தேசவழமைச் சட்டம் ஒழிக்கப்படுவதைப் போல் முஸ்லிம் சட்டத்தையும் வலுவற்றதாக்க வேண்டுமென்ற கருத்தை முன்வைத்தார் இக்கருத்தை எதிர்த்துப் பேசுவதற்கு ஒரு முஸ்லிம் எம்.பி

கூட நாடாளுமன்றத்தில் இருக்கவில்லை. அதன் பின்னர் கூட இவ்விடயம் நாடாளுமன்றத்தில் எடுக்கப்படவுமில்லை.

இப்போக்கிற்கு முத்தாரம் வைப்பதுபோல், இந்நாட்டில் உள்ள எல்லா இனமக்களுக்கும் பொதுவான ஒரு சட்டம் அவசியமா? என்ற வினாக்கள் எழுப்பப்படுகின்றன, கௌரவ நீதிஅமைச்சர் அவர்கள் தனியார் சட்டங்கள் பற்றி ஆலோசிக்கவும் அவற்றில் மாற்றங்கள் அவசியமா என்பதைப் பற்றியும் தீர்மானிப்பதற்காகவும் ஒரு குழுவை நியமித்துள்ளார். இவ்வாறு தீர்மானிக்கப்படவுள்ள தனியார் சட்டங்களுள் முஸ்லிம் தனியார் சட்டமும் அத்தோடு தொடர்புள்ள ஷரிஅத் சட்டமும் உள்ளடங்கியுள்ளமை முஸ்லிம்கள் மத்தியில் இன்று அச்சத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

**தெய்வீக நம்பிக்கை**

சிங்கள, தமிழ் இனங்களை தேசிய இனங்களாக அடையாளம் காண்பதற்கு தெய்வீகநம்பிக்கை காரணமாக இல்லாத வேளை - முஸ்லிம் சிறுபான்மை சமூகத்தின் முழுஅரசியல் அடையாளமே தெய்வீக நம்பிக்கையிலேயே தங்கியுள்ளது. முஸ்லிம் சமுதாயம் மற்றைய சமூகங்களில் இருந்து வேறுபடுவதற்கு காரணிகளாக அமைந்தவை ஷரிஅத் சட்டங்களும் சட்டங்களின் மீது அமைந்துள்ள முஸ்லிம் சமூகத்தின் கலாசாரம் பண்பாட்டு வேறுபாடுகளுமாகும். அதனை வேறுவார்த்தைகளில் கூறுவதானால் - முஸ்லிம் சமூகத் தனித்துவத்தின் அடி வேர்கள் முழுவதும் ஷரியத் சட்டங்களிலேயே தங்கியிருக்கின்றன என்று கூறலாம். இன்றுள்ள முஸ்லிம் தனியார் சட்டங்களில் ஷரியத் சட்டங்கள் இல்லாமல் முஸ்லிம் சமூகம் இருக்க முடியாது.

ஷரியத் சட்டங்கள் முழுவதும் இடம் பெறவில்லை என்பதில் நாம் தெளிவு பெற வேண்டும். ஷரியத்திற்கு முரண்பட்ட கலாச்சாரங்கள் முஸ்லிம் சட்டமென்ற பேரில் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. ஷரியத்திற்கு முரணான சம்பிரதாயங்களும் மரபுகளும் முஸ்லிம் சமூகத்தின் ஜீவனையே இன்று கொஞ்சமாக கொஞ்சம் உறிஞ்சிக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய பின்னணியில் முஸ்லிம் சமூகம் என்ற விருட்சம் உறுதியுடன் நிலைத்து நிற்க வேண்டும் எனில் இலங்கை முஸ்லிம்

சமூகம் எனும் மரத்தின் வேர்கள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். தற்போதுள்ள ஷரியத் அம்சங்கள் மாத்திரமன்றி - இயன்ற அளவு முழுமையான ஷரியத் வாழ்வு முறைக்குள் முஸ்லிம் சமூகத்தை சட்டரீதியாக கொண்டு செல்வதற்கான முயற்சிகளை உடனடியாக செய்யவேண்டியது இன்றைய சமகால வரலாற்றுத் தேவையாகும்.

இப்பெறும் முயற்சியை ஐக்கிய தேசிய கட்சியோ ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியோ, மத நம்பிக்கையற்ற இடது சாரி கட்சிகளோ செய்ய முடியாது. உலமாக்களும், சட்ட அறிஞர்களும், சட்ட மேதைகளும், சட்ட சபை உறுப்பினர்களும் சேர்ந்து செய்ய வேண்டிய இப்பணியை இன்றைய அரசியல் சமூக அமைப்பில் செய்ய முடியுமா? என்பதை சிந்தித்து பாருங்கள்.

**தேவையான அடிப்படைமாற்றங்கள்:**

தேசிய அரசியல் கட்சிகள் என்ற போர்வையில் பேரின வாத கொள்கைகளை கடைபிடித்துவரும் அரசாங்கங்கள் இருக்கும் வரை - அந்த அரசாங்கத்தின் முகவர்களாக முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கும் வரை - உயர் பதவியில் உள்ள அந்த எஜமான்களுக்கு எதிராக குரல் எழுப்ப முடியாத சின்ன குழந்தைகளாக உலமாக்களின நிலை தொடரும் வரை - உலமாப் பெருமக்கள் அத்தகைய அரசியல்வாதிகளின் கூட்டங்களுக்கு "பாத்திஹா" ஓதுபவர்களாகவும் 'து ஆ' பிரார்த்தனை புரிபவர்களாகவும் இருக்கும் வரை - இந்த சமூக மாற்றத்தை நாம் ஏற்படுத்த முடியாது.

அடிப்படை சமூக மாற்றங்களே இன்றைய உடனடி தேவையாகும். யாருக்கும் அஞ்சாத, அடிபணியாத அரசியல் தலைமைத்துவத்தை ஏற்படுத்தும் போதுதான் இன்று அரசியல் அடிமைப் படுத்தப்பட்டிருக்கும் உலமாக்களையும் அரசாங்க உத்தியோகத்தர்களையும் பேரினவாத கட்சிகளில் இருந்து விடுதலை செய்ய முடியும்.

இந்த அடிப்படையில் நாம் சிந்திக்கும் போது சமூக மாற்றம் தேவையானால் அரசியல் மாற்றம் அடிப்படையென்பதை உணரலாம்.

இந்த அரசியல் மாற்றத்தையும் புதிய அரசியல் தலைமைத்துவத்தையும் ஒரு தனியான அரசியல் கட்சியின் மூலமே நாம் ஏற்படுத்த முடியும் என்பதை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பரிபூரணமாக நம்புகின்றது.

முஸ்லிம்களுக்கு தனியான ஒரு அரசியல் கட்சி அவசியமா என்ற கேள்வி பல வருடங்களாக எழுப்பப்பட்டு வருகின்றது. சிலர் அவ்வாறான ஒரு கட்சி அவசியம் தான் என்றும் வேறு சிலர் அவசியம் இல்லையென்றும் சொல்லிவருகின்றனர்.

இன்னும் சிலரோ அரசியல் கட்சியொன்று அவசியம் தான், ஆனால் அதனை இன்றைய கால கட்டத்தில் செய்வது பொருத்தமில்லை என்றும் கூறிக்கொள்கின்றனர்.

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்:**

இத்தகைய பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியில் முஸ்லிம்களுக்கு தனியான ஒரு அரசியல் கட்சி அவசியம் தான் - உடனடியாக இன்றைய கால கட்டத்தில் இதை செய்தே ஆகவேண்டும் என்ற குரலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் துணிச்சலுடன் முன்வைக்கிறது.

பேரினவாத அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளில் முஸ்லிம் சமூகம் சளைக்கின்ற போதெல்லாம்- முஸ்லிம்களுக்கென தனியான அரசியல் கட்சி தேவையென்றும் கூறுகின்றவர்கள் - முஸ்லிம் இளைஞர்களை ஓர் அரசியல் கட்சியை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் சேர்த்து வைத்துக் கொண்டு - பின்னர் அவர்களை ஏமாற்றுவதும் - அதே இளைஞர்களை கொண்டு அக்கட்சிகளின் தேவைகளுக்காக கூஜாக்களை தூக்கச் செய்வதும் எமக்குத் தெரிந்தவையே.

முஸ்லிம்களுக்காக தனியான அரசியல் கட்சி தேவையில்லை என்பவர்களிடமும் - தேவைதான் என்று கூறிக்கொண்டு மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் வேடதாரிகளிடமும் - கிழக்கிலங்கை மக்கள் மத்தியில் கட்டாயம் ஓர் அரசியல் கட்சி வேண்டும்; மற்ற பிரதேசங்களுக்கு அவசியமில்லை எனக் கூறிகொள்பவர்களிடமும் நம்பிக்கை இழந்து தமது சொந்தக் காலில் நிற்பதற்கும் தமது எதிர்காலத்தை தாமே நிர்ணயிப்பதற்கும் தயாரான இளைஞர் கூட்டத்தின் இயக்க வடிவமே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்ஆகும்.

கட்சித் தொடர்பற்ற இயக்கங்களிலும் நடுநிலை இயக்கங்களிலும் நம்பிக்கையற்று தனிக்கட்சியின் மூலமாவது எமது குரலை நாடாளுமன்றத்துக்கு உள்ளே இல்லையெனினும் கூட

வெளியேயாவது உலகம் முழுவதும் கேட்கக் கூடியதாக ஒலிக்க வேண்டுமென திடசங்கற்பம் பூண்டவர்களாக இன்று நாம் கூடியிருக்கின்றோம்.

இலங்கை முஸ்லிம்களுக்காக ஓர் அரசியல் கட்சியை உருவாக்க வேண்டியது இன்றைய தசாப்தத்தின் தவிர்க்க முடியாத தேவையாகும். தேசிய அரசியல் ரீதியில் இன ரீதியான கொள்கைகளை எடுத்துச் செல்லும்போக்கு இருக்கும் வரை - முஸ்லிம்கள் தனித்து நின்று தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முயல்வதை யாரும் பிழை எனக் கூற முடியாது.

நாங்கள் ஒரு தேசிய சமூகம்; தேசிய அரசியலில் மனப்பூர்வமாக சேர்ந்து உழைக்க விரும்புகின்றோம். ஒரு சிறுபான்மை சமூகம் என்ற ஒரேயொரு காரணத்துக்காக நாம் புறக்கணிக்கப்படும்வரை ஒரு தனி அரசியல் கட்சியின் வளர்ச்சியை யாரும் கட்டுப்படுத்த முடியாது. பேரினவாத போக்குகளின் மத்தியில் எமது உரிமையைப் பாதுகாக்க நிச்சயமாக நமக்கு உதவக்கூடிய சமாதான ரீதியான ஒரே கேடயம் தனிக்கட்சியாகும். பேரினவாதப் போக்குகளைக் கைவிட்டு தேசிய அரசியல் ரீதியில் செயல்படுகின்ற முற்போக்கு அரசியல் சக்திகளுடன் கைகோர்த்து உழைப்பதற்கு இத்தனிக் கட்சி ஒருபோதும் பின்னிற்காது. எனவே, ஒரு தனிக்கட்சி அமைப்பால் பேரினவாதக் கட்சிகளின் முகமூடிகளைக் கிழிக்க முடியுமென்பதையும் - இந்நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தக்கூடிய தேசிய கட்சிகளை உருவாக்க முடியுமென்பதையும் நாம் ஆணித்தரமாக நம்புகிறோம். இலங்கை முஸ்லிம்களுக்கான ஒரு தனிக்கட்சியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை பிரகடனம் செய்யும் போது முஸ்லிம்கள் இந்நாட்டின் எட்டுத் திக்குகளிலும் சிதறிக் கிடப்பதை நாம் பூரணமாக உணர்ந்தவர்களாகவே - சமகால வரலாற்றின் இத்தேவையை பூரணமாக்கி வைக்கின்றோம்!

முஸ்லிம்களுக்காக தனிக்கட்சி அமைத்துவிட்டால் கிழக்குக்கு வெளியே வாழும் முஸ்லிம்களுக்கு ஆபத்து ஏற்படுமென்று சிலர் இன்று பூச்சாண்டி காட்டுகின்றார்கள். நெஞ்சில் உரமற்ற பலவீனமான இந்த நெஞ்சங்களுக்கு நாம் சில உண்மைகளை எடுத்துக்கூற விரும்புகிறோம்.

**விடுதலை வெளிப்பாடு:**

ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக சிங்கள மக்களுடன் நாம் சமாதானமாக வாழ்ந்து வந்துள்ளோம். இன்னும் ஆயிரக் கணக்கான ஆண்டுகள் சமாதானமாக சிங்கள பெரும்பான்மை மக்களுடன் மாத்திரமன்றி தமிழ் சிறுபான்மைச் சகோதரர்களுடனும் சமாதானமாக வாழ்வதற்கு நாம் திடசங்கற்பம் பூண்டு இருக்கின்றோம். எமது உறுதியை பூச்சாண்டி காட்டும் புல்லுருவிகள் அசைத்துவிட முடியாது. தனிக்கட்சி என்பது சிங்களப் பெரும்பான்மை சமூகத்துக்கு எதிராக எழுப்பப்படும் போர்க் கொடியல்ல என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம். தனிக்கட்சி என்பது இந்த நாட்டை பிரித்துக் கேட்பதுமல்ல. தனிக்கட்சியானது தமிழர்களோடு; சிங்களவர்களோடும் சேர்ந்து வாழ முடியாது என்ற பிரகடனமுமல்ல என்பதைத் தெளிவாக்க விரும்புகிறோம்.

முஸ்லிம்களுக்கான தனிக்கட்சி என்பது பேரினவாதக் கட்சிகளின் போக்குகளினால் அடக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு சமூகத்தின் விடுதலை வெளிப்பாடாகும்.

தனிக்கட்சி என்பது எங்களையும் இந்த நாட்டின் தேசிய சமூகமாக அங்கீகரியுங்கள் என்ற பணிவான விண்ணப்பமாகும். தனிக்கட்சி என்பது எங்களின் மத நம்பிக்கைகளுக்காக அல்லது நாம் பேசும் மொழிக்காக எங்களை ஓரக் கண்ணால் ஒதுக்கிப் பார்க்காதீர்கள் என்று கூறும் விரக்தியுற்ற நெஞ்சின் வீராவேசக் கூற்றாகும். நாங்கள் ஒரு சிறுபான்மை சமூகம், எங்களையும் தேசிய நீரோட்டத்திலிருந்து விரட்டியடித்து விடாதீர்கள் என்ற அபாயமணியின் அறிவிப்பே தனிக்கட்சி என்ற இப்பிரகடனமாகும்.

எங்கள் உயிர்கள் - எங்கள் உடமைகள் - எங்கள் உணர்வுகள் - எங்கள் அபிலாஷைகள் என்பவற்றைப் பாதுகாக்க வேண்டியவர்களும் - எங்களை இந்த நாட்டின் தேசிய அரசியலில் ஈடுபடுத்த வேண்டிய பொறுப்பும் பெரும்பான்மை சமூகங்களின் தோள்களின்மீது இருக்கின்றது என்பதை சொல்லிக்காட்டுவதே - ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை தனிக்கட்சியாகப் பிரகடனம் செய்வதன் பின்னணியிலிருக்கும் தத்துவமாகும் என்பதை சொல்லிக் காட்ட விரும்புகிறோம்.

**முஸ்லிம் சமூகத்துக்குள்ள பொறுப்புணர்ச்சி:**

இந்த நாடு எமக்குச் சொந்தமானது. நாங்கள் "வந்தான் வரத்தான்" களல்லர். இந்த நாட்டின் ஒருமைப்பாட்டைக் கட்டிக்காப்பதிலும் - இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு சிறுபான்மை பிரஜையின் கௌரவத்தையும் கண்ணியத்தையும் உறுதிப்படுத்துவதிலும் முஸ்லிம் சமூகத்துக்குள்ள பொறுப்புணர்ச்சியின் வெளிப்பாடாகவே இன்று நாங்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் 6 வது வருடாந்த மாநாட்டை இந்த நாட்டின் தலைப்பட்டினமாகிய கொழும்பிலே கூட்டியிருக்கிறோம்.

**இஸ்ரேலியப் பிரச்சினை**

முஸ்லிம் சமூகம் இந்த நாட்டில் பேரினவாதக் கட்சிகளால் நடாத்தப்படும் விதம் மிகவும் கண் டிக்கத்தக்தாகும். இஸ்ரேலியர்களை இந்த நாட்டில் வைத்திருப்பது குறித்து முஸ்லிம் மக்களின் உணர்வு உலகம் அறிந்த ஒன்றாகும். நான் கூறித்தான் இதனை நீங்கள் தெரிய வேண்டிய நிலையில் இல்லை என்பதை நான் அறிவேன்.

இலங்கையில் இஸ்ரேலிய நலன்காப்புப் பிரிவு அமைப்பு உருவாக வேண்டுமென்ற தீர்மானத்தை அரசாங்கம் எடுத்தபோதும் முஸ்லிம் தலைவர்கள் குதித்தெழுந்தார்கள். அவர்களின் தலைமைத்துவத்தில் இன்னும் நம்பிக்கை வைத்திருந்த முஸ்லிம் இளைஞர்கள் போர்க் கொடி தூக்கினார்கள். எந்தத்தலைவர்கள் படைகளை ஏவிவிட்டார்களோ அதே தலைவர்கள் படை யுத்தக்களத்தில் நின்று கொண்டிருந்த போது குத்துக் கரணமடித்தார்கள்.

இஸ்ரேலின் நலன் காப்பு விடயத்தில் இலங்கை முஸ்லிம்களின் உணர்வுகளை வெளிக்காட்டும் கண்ணாடியாக புத்தளம், கிழக்கிலங்கை வாழ் முஸ்லிம் இளைஞர்கள் முன்வந்தார்கள். சாத்வீக ரீதியில் தமது எதிர்ப்பை தெரிவித்த முஸ்லிம் இளைஞர்கள் நாய்களைப் போன்று சுட்டுத்தள்ளப்பட்டனர். ஆயினும் கூட துப்பாக்கி ரவைகளை கண்டு பின்னோக்கி வருபவர்கள் நாங்கள் அல்லர் என்பதை புத்தளம் கிழக்கிலங்கையின் முஸ்லிம் இளைஞர்கள் நிரூபித்துக்காட்டினார்கள். ஆனால் அவர்கள் சிந்திய இரத்தத் துளிகளை துடைப்பதற்கு எந்த ஒரு முஸ்லிம் தலைவரும் முன்வரவில்லை.

முஸ்லிம் சமூகத்தின் உணர்வுகளை எடுத்துக் கூறச்சென்ற முஸ்லிம் எம்.பிக்.களின் தூதுக்குழுவிடம் மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் ஹ ஹவாயைத்திறக்கக் கூடாது. கட்சியில் இருந்து வெளியேற்றி விடுவேனீ என்றார். எமது முஸ்லிம் பிரதிநிதிகள் நல்லது சாமி என்று தலையாட்டி விட்டு வீட்டுக்குள் சுருண்டு கிடந்தனர். இதுதான் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் எமது பிரதிநிதிகளின் பலமும் பலவீனமுமாகும்.

இன்று என்ன நடைபெற்றுள்ளது? சொல்லாமல் பேசாமல் இஸ்ரேலிய ஜனாதிபதி அவர்கட்கு இந்த நாடு விருந்தளித்து கௌரவித்துக் கொண்டிருக்கின்றது. இத்தகைய போக்கினை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். எமது உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கும்படி வேண்டுறோம்.

இந்த நாட்டின் சபாநாயகராக இருந்த ஒரு முஸ்லிம் எந்தவொரு காரணமுமின்றி தூக்கி வீசப்பட்டார்.இன்று வேலையற்ற மந்திரி என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். இவ்வாறு தொடர்ந்தும் முஸ்லிம் சமூகம் அவதிப்படக்கூடாதென்பதை தெளிவாகவே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வற்புறுத்துவதற்காகத்தான் இலங்கை முஸ்லிம்களின் தனிக்கட்சி என்ற பிரகடனமாகும்.

ஆகவே-

எனது தலைமையுரையின் இறுதியாக நான் சொல்லிக் கொள்வதெல்லாம் இது ஒன்றைத்தான். ஒரு கட்சியின் உருவாக்கம் ஒரு தனி மனிதனாலேயே முதன் முதலில் அறிமுகப் படுத்தப்படுகின்றது என்பது உண்மைதான். ஆனால் அவ்வாறான ஒரு கட்சி ஒரு தனி மனிதன் அல்ல. ஒரே நோக்குள்ள பல மனிதர்கள் ஒரே சிந்தனையினராக ஒருமித்தும் ஊக்கத்தோடும் விடாமுயற்சியோடும் தியாகத்தோடும் உழைக்கும் போதுதான் அந்தக்கட்சி பல கிளைவிட்டு படர்ந்து செழிக்கிறது.

நல்லெண்ணமும், தீர்க்கதரிசனமும் சரியான செயல்பாடும் இடையறாத இயக்கமும் காலதேச வர்த்தமானங்களை அனுசரித்த போக்கும் இலட்சியங்களை அடைவதற்கான உறுதியும் இன்னல்களையும் இடையூறுகளையும் கண்டு சலிப்புறாத மனமும் அங்கத்தவர்களிடையே பொது நோக்கங்களின் பேரில் ஒற்றுமையும் கூட்டு முயற்சியும் எதிரிகளினதும் சதிகாரர்களினதும் தந்திரோபாயங்களை அடையாளங் காணும் சாமர்த்தியமும் சூழ்ச்சிகளை சமூகமாக

முறியடித்து முன்னேறும் சாணக்கியமும் எடுத்த கருத்தை முடித்து வைக்கும் ஆத்ம பலமும் இறை நம்பிக்கையும் முன்னோடிகளான நல்லடியார்களின் மீது நேசமும் பற்றும் இருக்குமானால் நமது கட்சி நிச்சயமாக தனது பாதையிலும் பயணத்திலும் பரிபூரண வெற்றியடையும் என்பதை நான் உங்களுக்கு வலியுறுத்த விரும்புகிறேன்

இன்னும் நான் உங்களுக்கு தலைவனாக செயல்படும் காலமெல்லாம் உங்கள் தொண்டனாக செயல் படும் எண்ணத்திலேயே செயற்படுகிறேன் என்றே நம்பிக்கை கொண்டு நான் பணி புரிகிறேன். எனது பாதையில் இஸ்லாமிய விரோத போக்குகள் ஏதேனும் என்னையறியாது நுழைந்து விடுமாயின் என்னைத்திருத்தும் பொறுப்பை உங்களின் மீதே சுமத்துகின்றேன்.

இன்னும் திருமறைக்கும் திருநபிமொழிக்கும் விரோதமான செயல்களை- இந்த தலைமை பீடத்தை உபயோகித்து நான் அறிந்தோ அறியாமலோ செயற்பட முனைவதனை நீங்கள் காணும் போது என்னைப் பின் தொடர்வதை உடனே நீங்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் நான் உங்களை கேட்டுக் கொள்கிறேன்

ஒற்றுமை என்னும் கயிற்றைப் பற்றிபிடித்தவர்களாகவும் பற்றிப்பிடிக்க அழைப்பவர்களாகவும் அதற்காக உழைப்பவர்களாகவும்- நாம் நம்மிலிருந்து பிரிந்து விடாதவர்களாக இலங்கை முஸ்லிம்களின் சுபிட்சத்துக்காக இணைந்து செயற்பட எல்லோரும் முழுமனதாய் ஒன்று பட வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கை அரசியலில் முஸ்லிம்கள் தமது தனித்துவத்தை பேணிக் கொள்வதற்கான ஒரு சந்ததர்ப்பத்தை உறுதிப் படுத்துவதே முஸ்லிம்களுக்கான ஒரு தனிக் கட்சியின் நோக்கம் என்பதை நீங்கள் புரிந்து கொண்டுள்ளீர்கள்.

இன்னும் ஒரு முஸ்லிம் கட்சியை இலங்கையில் உருவாக்க அனுமதிப்பது படு முட்டாள் தனமாகும் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

எனது தலைமையின் மீதோ அல்லது இக்கட்சியின் மத்திய குழுவின் மீதோ உங்களுக்கு நம்பிக்கை அற்றுப்போயின் எனது தலைமையையும் மத்திய குழுவின் பொறுப்புக்களையும் உங்களுக்கு

நம்பிக்கை உள்ளவர்களைக் கொண்டு நிரப்புங்கள். நீங்களோ வேறுயாருமோ வேறு ஒரு முஸ்லிம் கட்சியை வேறு எந்த தலைவருக்காகவும் அமைக்க வேண்டிய அவசியம் எதுவுமில்லை.

இக்கட்சியிலேயே சேர்ந்து, இக்கட்சியை வழிநடாத்தி இக்கட்சியை பொறுப்பேற்று, இக்கட்சி மூலமே உங்கள் நியாயங்களை பெறுவதற்கு நானோ, வேறுயாருமோ தடையாய் ஒருபோதும் இருக்க மாட்டோம் என்பதை இந்த நிறைந்த மண்டபத்தின் சாட்சியாக உங்களுக்கு வாக்களிக்கிறேன்.

எனவே சகோதரர்களே!

நமது இலட்சியங்களை அடையவும் நமது இழந்த உரிமைகளை மீட்கவும் நமக்கு உரித்தான உரிமைகளை நிலைநிறுத்தவும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை இலங்கை முஸ்லிம்களுக்கான ஓர் அரசியல் கட்சியாக சம்பிரதாய பூர்வமாக அங்கீகரித்து ஏற்று பிரகடனப் படுத்துமாறும் உங்களை அழைக்கிறேன்.

*வஸ்ஸலாம்.*

## 8வது மாநாட்டு உரை

### 10 டிசம்பர் 1988 – சுகததாஸ அரங்கில்

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.**

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்காக இன்னும் ஒன்பது நாட்களே இருக்கும் இந்த அவசரமான காலகட்டத்தில் நாமெல்லாம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் எட்டாவது வருடாந்த மாநாட்டில் கூடியிருக்கின்றோம்.

முஸ்லிம் காங்கிரஸின் வருடாந்த மாநாடுகள் இலங்கை வாழ் 13,00,000 முஸ்லிம்களின் வருடாந்த சந்திப்பாகவும் முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகளைத் திரட்டி வெளியிடும் பேரிகையாகவும் மாறி உள்ளது.

**எங்களிடமுள்ள ஆயுதம்**

இலங்கையின் அரசியல் வரலாற்றில் வேறெந்தக் கட்சியும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் போல் துரிதமாக வளர்ந்த வரலாறு கிடையாது. அரசியல் கட்சியாகப் பிரகடனம் செய்யப்பட்டு 13 மாத காலத்தில் முஸ்லிம் காங்கிரஸுக்கு தேர்தல் ஆணையாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அங்கீகாரம் கிடைத்த இரு வாரங்களுக்குள் எவ்வித ஆயத்தங்களும் இல்லாமல் மாகாண சபைத் தேர்தல்களில் முதலாவது கட்டத்தை சந்திக்க வேண்டிய சவாலை நாம் எதிர்நோக்கினோம். வழமையாக பொய்முட்டைகளை அவிழ்த்து விட்டு, இலஞ்சம் வழங்கி சாராயம், கஞ்சா, குடு என்பனவற்றை இளைஞர்களுக்கு அறிமுகம் செய்து வாக்குக்கேட்கும் சம்பிரதாயத்துடனும், பாரம்பரியத்துடனும் போட்டியிட்டு நின்று பிடிக்கக்கூடிய திராணி எமக்கிருக்கவில்லை. இந்நாட்டுக்கு விமோசனம் அளிக்கும் பாதையை குர்ஆன், ஹதீஸ் அடிப்படைகளில் கோடிட்டுக் காட்டப் புறப்பட்ட நாம், இளைஞர் சமுகத்திற்கு சாராயம் வழங்குவதையோ கஞ்சா, குடு, என்பவற்றை அறிமுகப்படுத்துவதையோ கற்பனை கூடப் பண்ணியிருக்க முடியாது.

எங்களிடமிருந்தது இரண்டே இரண்டு ஆயுதங்கள். அல்லாஹ்வின் உதவி ஒரு புறம், எமது வாய்மை மறுபுறம். இந்த இரண்டையும் நம்பி பிரிந்து நின்ற முஸ்லிம் சமூகத்தின் முன்னிலையில் ஒற்றுமைக் கீதமாக ஓங்கி இசைக்க நாம் ஆரம்பித்தோம்.

ஆட்சியிலிருக்கும் கட்சியினரின் அட்டகாசம் ஒரு புறம், முஸ்லிம் காங்கிரஸ் ஓர் இனவாதக் கட்சியென கூக்குரலிடுவோர் இன்னொரு புறம், முஸ்லிம் காங்கிரஸோடு இணைந்தால் சிங்களவர்கள் முஸ்லிம்களை அழித்துவிடுவார்கள் என அச்சுறுத்தி நின்றோர் வேறொரு புறம், மாகாண சபை தேர்தல்களைப் பகிஷ்கரியுங்கள் என்றோர் இன்னொரு புறம், பகிஷ்கரியுங்களென உத்தியோக நிலைப்பாட்டை எடுத்த பின்னருங் கூட முஸ்லிம்கள், ஒற்றுமைப்படக் கூடாதென்பதற்காக வேறு கட்சிகளையும் ஏன் ஐக்கிய தேசியக் கட்சியைக் கூட ஆதரிக்கச் சித்தமாயிருந்தோர் மறுபுறம்; இந்தச் சிக்கல்களுக்கு மத்தியில் ஒன்றையும் செய்து தருவதாக வாக்குறுதி செய்ய எம்மால் முடியாது. முஸ்லிம் சமூகத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தும் ஒரே நோக்கத்துக்காக அல்லாஹ்வை மாத்திரம் நம்பி எமது கட்சியை ஆதரியுங்கள் என நாம் விடுத்த கோரிக்கையை முஸ்லிம் சமூகம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டது.

குருநாகலை மாவட்ட முஸ்லிம்கள் 75% வீதமும், புத்தளம் மாவட்ட முஸ்லிம்கள் 78% வீதமும் பதுளை மாவட்ட முஸ்லிம்கள் 80% வீதமும் முஸ்லிம் காங்கிரஸிற்கு ஆதரவு வழங்கினார்கள்.

இந்த மூன்று மாவட்ட முஸ்லிம்களினது வழிகாட்டலையும் பின்பற்றிய களுத்துறை, கம்பஹா, கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டத்து முஸ்லிம்களும் எங்களைக் குதூகலத்துடன் ஆதரித்தார்கள்.

இந்த வரிசையில் இந்த நாட்டின் தலைநகரான கொழும்பு மாவட்டத்து முஸ்லிம்களில் ஏறத்தாழ 40,000 பேர் தமது விலை மதிக்க முடியாத பொன்னான வாக்குகளை எமக்களித்து நாட்டின் முழு முஸ்லிம் சமுதாயத்திற்குமே முன்மாதிரியாய்த் திகழ்ந்தார்கள்.

கடைசியாக நடந்து முடிந்த கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் கிழக்கிலங்கை முஸ்லிம்கள் ஏறத்தாழ 95% வீதம் முஸ்லிம் காங்கிரஸின் சின்னமான விருட்சத்தின் நிழலை நம்பி வந்துள்ளார்கள்.

முஸ்லிம் ஒற்றுமை சிறுதுளி பல துளிகளாகி, பேரலையாகி இன்று மடை திறந்த வெள்ளமாய் மாறியுள்ளது. இலங்கை முஸ்லிம்களின் ஒற்றுமையை இனி எந்த ஒரு சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது.

முஸ்லிம்களின் அரசியல் ஒற்றுமையிலேயே முஸ்லிம் சமூகத்தின் மத, கலை, கலாச்சார பாரம்பரியங்களின் பாதுகாப்புத் தங்கியிருக்கின்றது. முஸ்லிம் சமூகத்தின் தனித்துவத்தை அழிப்பதற்கும், முஸ்லிம்களின் மத, கலாச்சார, பாரம்பரியத்தை பூண்டோடு அழிப்பதற்கும் பேரினவாதக் கட்சிகள் கடந்த 40 ஆண்டுகளாக முயன்று வந்திருக்கின்றன.

முஸ்லிம்களின் அரசியல் சுதந்திரம், பணத்தாலும் அரசியல் அதிகாரமுள்ள பதவிகளாலும், அரசியல் அதிகாரமற்ற பதவிகளாலும் விலை கொடுத்து வாங்கப்பட்டுள்ளன. முஸ்லிம் அரசியல் வாதிகள் எனப்படும் முஸ்லிம் அமைச்சர்களும் அரசியலில் சுதந்திரமில்லாத முஸ்லிம் பேரினவாத ஆட்சியாளர்களின் தலையில் சூட்டப்பட்ட கிரீடத்தில் பதிக்கப்பட்ட உயிரற்ற வெறுங்கற்களாகவும் மாறியுள்ளார்கள்.

**பேரினவாதமெனும் கோடரிக்காம்பு**

இந்த நாடு சுதந்திரம் பெற்றபோது இந்த நாட்டில் வாழ்ந்த சிங்கள, தமிழ் முஸ்லிம் சமூகங்கள் எல்லாமே ஒரே நேரத்தில் சுதந்திரப் பட்டயத்தைக் கைப்பற்றின. ஆனால் சுதந்திரம் கிடைத்தவுடன் பெரும்பான்மைச் சமூகம் சிறுபான்மைச் சமூகங்களை வெறுக்கத் தொடங்கின. ஒரே மண்ணின் மைந்தர்களைப் பேரினவாதமெனும் கோடரிக் காம்பு ஆளுகின்றவர்களாகவும், ஆளப்படுகின்றவர்களாகவும் பிரித்து வைத்தது. விளைவு சிங்களப் பேரினவாதத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக சாத்வீக வழியில் போராட்டத்தை ஆரம்பித்த தமிழர்களும், அந்தப் போராட்டம் இன்று ஆயுதம் ஏந்திய தமிழ் இளைஞர்களின் இரத்தங்களாலும் - சதைகளாலும் தோய்ந்து கிடப்பதாகும்.

தமிழருக்கெதிராக ஆரம்பிக்கப்பட்ட சிங்களப்பேரினவாதம் தமிழர்களை அழித்ததுடன் நின்றுவிடவில்லை. சிங்கள சமூகத்திற்கே வேட்டுவைக்க முனைந்தது. சிங்கள சமூகத்தின்

மத்தியில் இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்குமிடையே இருந்த இடை வெளியை இன்னும் கூர்மைப்படுத்தியது.

தனது நடவடிக்கைகளின் எதிர் விளைவுகளை சிங்களப் பேரினவாதம் தெற்கிலே இரத்தம் சிந்தும் ஆயுதம் தாங்கிய சிங்கள வாலிபர்களின் இரத்தங்களிலும், சதைகளிலும் தரிசனம் செய்து கொண்டிருக்கும் ஒரு கால கட்டத்திலேயே முஸ்லிம் காங்கிரஸ் அங்கத்தவர்களினதும், ஆதரவாளர்களினதும் இந்த அரிய சந்திப்பு நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

வரலாறு தன்னை மீட்டிக் கொண்டிருப்பதாக சொல்வார்கள். ஒரு சமூகத்தின் வரலாறு இன்னுமொரு சமூகத்திற்குப் படிப்பினைகளை வழங்கவேண்டும். ஒரு நாட்டின் வரலாறு இன்னுமொரு நாட்டிற்கு முன்மாதிரியைக் காட்ட வேண்டும். வரலாறுகளிலிருந்தும் பாடங்களைப் படிக்க விரும்பாத சமூகம் நாகரீகமென்ற அடைமொழியைத் தனக்குமுன்னே உபயோகிக்கும் அடிப்படை உரிமையை இழந்துவிடுகின்றது.

**முஸ்லிம்கள் தமிழர்களின் அபிலாசைகளுக்கு விரோதிகளாக இருந்ததில்லை**

1983ம் ஆண்டின் இனக்கலவரங்களின் பின்னர் வட- கிழக்கில் வாழ்ந்த முஸ்லிம்கள் அனுபவித்து வந்த அவலங்களை எண்ணிப்பாருங்கள். இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாய் ஆக்கப்பட்டதையும், ஆயிரக்கணக்கான மக்கள் தமது உயிர்களையும் உடைமைகளையும் இழந்ததையும் நாம் இலகுவில் மறந்துவிட முடியாது.

என்று தனிச் சிங்களம் உத்தியோக மொழிச்சட்டமாகக் கொண்டுவரப்பட்டதோ அன்றிலிருந்து தமிழ் சமூகத்தின் விடுதலைப் போராட்டம் ஆரம்பித்தது. அன்றிலிருந்து தமிழ் வாலிபர்கள் ஆயுதம் தாங்கி தமிழீழத்துக்காகப் போராடிய போது கூட; முஸ்லிம் சமூகம் தமிழர் சமூகத்திற்கெதிரான ஒரு நிலைப்பாட்டை ஒருபோதும் எடுக்கவில்லை.

ஆனால் 1987ஆம் ஆண்டில் இந்திய- இலங்கை ஒப்பந்தம் எழுதப்பட்டதுடன் தமிழ் சமூகத்தின் போராட்ட வடிவத்தில்

முஸ்லிம் சமூகம் ஒரு மாற்றத்தை அவதானித்தது. தமிழர் சமூகம் சிங்களப் பேரினவாதத்தால் நசுக்கப்படக்கூடாது என்று உரிமைக்குரல் எழுப்பிய தமிழர் விடுதலை அமைப்புக்களும் ஆயுதம் தாங்கிய போராளிகளும் தமக்கு அரசியல் விடுதலை கிடைக்கப்போகின்றது என்ற அறிகுறியைக் கண்ட உனடியாகவே தமது ஆயுதங்களின் இலக்குகளை திருப்பியது மிகவும் துரதிர்ஷ்டமானதாகும்.

சிங்கள சமூகத்தின் கட்சிகள், அமைப்புக்கள் எந்தத் தவறை இழைத்ததோ அதே தவறை தமிழர் அமைப்புக்களும் முஸ்லிம் சமூகத்திற்கெதிராக செய்யத் தொடங்கின. இந்திய- இலங்கை ஒப்பந்தம் புதிய தமிழ்ப் பேரினவாதமொன்று வடகிழக்குப் பிரதேசத்தில் உருவாவதற்கும் அரசியல் பலம் பெற்றிருந்த கிழக்கிலங்கை முஸ்லிம்களை அப்பேரினவாத ஓநாயின் பசிக்கு இரையாகவும் மாற்றியது. தெரிந்தோ, தெரியாமலோ செய்யப்பட்ட இந்த சதிக்கு தெரிந்தோ, தெரியாமலோ முஸ்லிம் எம்பிக்கள் உடந்தை களாயிருந்தனர். அந்த அவலங்களை நாங்கள் யாரிடம் சொல்லி அழுவது?

**சர்வஜன வாக்குரிமை**

இந்திய- இலங்கை ஒப்பந்தம் மாகாண சபை தேர்தல் நடைபெற்ற ஒரு வருட முடிவின் பின் சர்வசன வாக்குரிமை ஒன்றை நடத்துவது பற்றிக் குறிப்பிடுகின்றது.

இந்த சர்வசன வாக்குரிமையின் நோக்கம் வடக்கும், கிழக்கும் நிரந்தரமாகப் பிரிக்கப்பட வேண்டுமா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்காக அன்றி வேறெதுவுமில்லை. சமாதான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட சர்வசன வாக்குரிமை இருபக்கமும் அடி விழும் தவிலின் நிலைக்கு முஸ்லிம் சமூகத்தைத் தள்ளியுள்ளது.

சட்டியிலிருந்து அடுப்புக்குள் வீழ்ந்த கதையாக, சிங்களப் பேரினவாதத்தின் அக்கிரமங்களிலிருந்து விடுபட்ட முஸ்லிம் சமூகம் அதே மூச்சில் தமிழ்ப் பேரினவாதமெனும் நெருப்புச் சுவாலைக்குள் வீசப்பட்டது. போதாதென்று மீண்டுமொரு பாரிய பரிசோதனையை எதிர்நோக்கும் நிலைக்கு சர்வசன வாக்குரிமை கிழக்கிலங்கை முஸ்லிம்களைத் தள்ளியுள்ளது.

தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். கிழக்கு முஸ்லிம்கள் வட- கிழக்கு இணைப்பை ஆதரித்து வாக்களித்தால் வடக்குக் கிழக்குக்கு வெளியே வாழும் மூன்றில் இரண்டு பங்கு முஸ்லிம்களும் சிங்கள சமூகத்திற்கு மத்தியில் நிம்மதியுடன் வாழமுடியாது. முஸ்லிம்கள் வடகிழக்கு இணைப்பை எதிர்த்து கிழக்குப் பிரிந்துதானிருக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டை எடுத்தால் தமிழர் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றியை முறியடித்து வடக்கு- கிழக்கு இணைப்பைத் துண்டித்த பழியையும், பாவமென்ற சிலுவையையும் கிழக்கிலங்கை முஸ்லிம் சமூகம் நிரந்தரமாக தன்தோளிலே தூக்க வேண்டி வரும்.

அதுமட்டுமன்றி வடகிழக்கில் முஸ்லிம்களும், தமிழர்களும் அடுத்து வரும் நூறு ஆண்டுகளுக்கு அந்த மண்ணில் நிம்மதியாக வாழ முடியாது.

கிழக்கினை வடக்கிலிருந்து பிரித்து விடுவதுதான் இறுதி இலட்சியமாக இருந்தால் இந்திய அரசு இலங்கையின் விவகாரங்களில் தலையிட வேண்டிய அவசியமில்லை. தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காகத்தான் இலங்கை வந்தோமென்று இந்தியா சொல்லிக் கொள்வதிலும் அர்த்தமில்லை.

இலங்கைக்குள் இந்தியா நுழைந்தது நல்லெண்ணத்தின் பேரிலென்பது உண்மையென்றால் வட- கிழக்குப் பிரதேசத்தில் வாழும் தமிழ் பேசும் சமூகங்களாகிய தமிழர்களிலும், முஸ்லிம்களிலும் அக்கறை இருக்கின்றதென இந்தியா கூறுவது உண்மையென்றால் வட- கிழக்கு மாநிலம் அப்பிரதேசத்தில் வாழும் தமிழர் முஸ்லிம்களின் பாரம்பரிய வாழ்விடங்கள் என்பது உண்மையென்றால் சர்வசன வாக்குரிமை ஒன்றின் மூலம் தமிழர்களின் போராட்டம் கொச்சைப் படுத்தப்படுவதற்கு இந்தியா ஒருபோதும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஒத்துழைக்கக் கூடாது. எனவேதான் சர்வசன வாக்குரிமை ஒன்று நடை பெறாமல் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்பது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடாகும்.

தமிழர்களினது போராட்டத்தை மலினப்படுத்தாமலும், முஸ்லிம்களின் அபிலாஷைகளைப் புறக்கணிக்காமலும் இரு

தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய மாற்று வழி ஒன்றைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியமொன்று இப்போது ஏற்பட்டுள்ளது.

சர்வசன வாக்குரிமைக்கு பரிகாரமான மாற்றீடு "ஒரு முஸ்லிம் பெரும்பான்மை மாகாணசபையை உருவாக்குவதே ஆகும்." என்பது முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடாகும். இன்றைய கிழக்கிலங்கை முஸ்லிம்களின் அபிலாஷை ஒரு முஸ்லிம் பெரும்பான்மை மாகாணசபையைப் பெற்றுக்கொள்வது மாத்திரமே. இதற்கான பூரண அதிகாரத்தைக் கிழக்கிலங்கை முஸ்லிம்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு வழங்கியுள்ளார்கள்.

சிங்கள சமூகத்திற்கு ஏழு மாகாண சபைகள், தமிழர் சமூகத்திற்கு ஒரு பெரிய பிரதேசத்தைக் கொண்ட மாகாண சபை, அதேபோல் முஸ்லிம்களுக்கும் ஒரு மாகாண சபையைத் தாருங்கள் என்று கேட்பதற்காக முஸ்லிம் மாகாண சபைக் கோரிக்கையை நாம் முன்வைக்கவில்லை.

**கிழக்கிலங்கையில் முஸ்லிம்களின் நிலை**

இந்திய- இலங்கை ஒப்பந்தம் வரையப்பட்ட பின் கிழக்கிலங்கை முஸ்லிம்கள் சிந்திய இரத்தம் சொல்லும் தரமன்று. நாம் எமது வயல் நிலங்களை இழந்து நிற்கின்றோம். கடலிலே நின்று மீன்பிடிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம், பலகோடிக் கணக்கான ரூபாய் சொத்துக்களை இழந்திருக்கின்றோம். எமது அரசியல் தலைவர்களும், கல்விமான்களும், முதலாளிகளும், துடிப்புள்ள வாலிபர்களும், உலமாக்களும் சுட்டுத்தள்ளப் பட்டிருக்கின்றார்கள். காணாமற் போயிருக்கின்றார்கள். எமது பள்ளி வாயல்கள் அதன் புனிதத்தை இழந்து நிற்கின்றன. எமது பெண்களினதும், தாய்மார்களினதும், சகோதரிகளினதும் கற்புக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

அச்சமும், மடமையும், அடிமைச் சிறுமதியும் உச்சத்திற் கொண்ட ஊமைச் சனங்களாக மாறியுள்ள கிழக்கிலங்கை முஸ்லிம்கள் இன்று நடுங்கிப்போயிருக்கின்றார்கள். இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பலம் கிழக்கிலேதான் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. கிழக்கிலங்கை முஸ்லிம்களின் அரசியல் பலம் என்பது இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பலமாகும்.

கிழக்கிலங்கை முஸ்லிம்கள் அரசியல் அடிமையாகும் போது முழு முஸ்லிம் சமூகமும் அரசியலில் அடிமையாகிவிடும். கிழக்கிலங்கை முஸ்லிம்களின் அரசியல் விடுதலை என்பது முழு இலங்கை முஸ்லிம்களினதும் அரசியல் விடுதலையாகும்.

கிழக்கிலங்கை முஸ்லிம்கள் அச்சமடைந்திருக்கின்றார்களென்றால் முழு இலங்கை முஸ்லிம் சமூகமுமே அச்சமடைந்துள்ளது என்பதே அதன் அர்த்தமாகும். முஸ்லிம் காங்கிரஸ் இன்று எதிர் நோக்கியிருக்கும் பெரும் சவால் இலங்கை முஸ்லிம்களுக்கு அரசியல் விடுதலையைப் பெற்றுக் கொடுப்பதாகும். அச்சமடைந்த சமுதாயம் அரசியலில் விடுதலையைப் பற்றிச் சிந்திக்க முடியாது. எனவே அரசியல் விடுதலையின் அத்திவாரம் அச்சத்திலிருந்து விடுதலை பெறுவதாகும்.

நான்கு புறங்களிலும் துப்பாக்கிகளால் அச்சுறுத்தப்பட்ட சமுதாயத்திற்குள்ள பாதுகாப்பு என்ன என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியம் என்றுமில்லாதவாறு இப்போது ஏற்பட்டுள்ளது. கிழக்கிலங்கை முஸ்லிம்கள் ஆயுதங்களால் தாக்கப்பட்டபோது அவர்களைப் பாதுகாக்க இலங்கைப் பொலிஸாரோ, இலங்கைப் பாதுகாப்புப் படையினரோ, அதிரடிப்படையினரோ, இந்திய அமைதிப் படையினரோ முன் வரவில்லை. எமது சமூகத்தின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள் என்று அவர்கள் சர்வதேச ரீதியில் எழுப்பிய குரல் செவிடன் காதில் ஊதிய சங்காக இருந்தது.

சட்டபூர்வமான ஆயுதங்களாலும், சட்டவிரோதமாக வைத்திருக்கும் ஆயுதங்களாலும் ஒரு சிறுபான்மைச் சமூகம் அடக்கப்படும் போது தன்னைப் பாதுகாப்பது பற்றி அது சிந்திக்கத் தொடங்க வேண்டும். ஆயுதங்களின் தாக்குதல்களை ஆயுதங்களால் மாத்திரமே முறியடிக்க முடியும். ஆயுதங்களால் நாம் தாக்கப்படும்போது சட்டபூர்வமாக ஆயுதங்களை உபயோகிக்கும் உரிமையை எமக்கு வழங்கவேண்டும். இது இரண்டுமில்லாத நிலையில் நமக்கு இரண்டே இரண்டு வழிகள் உள்ளன.

ஒன்று நாமும் சட்டபூர்வமாகவும், நிரந்தரமாகவும் ஆயுதங்களை வைத்திருக்கவும், ஆயுதம் தாங்கியவர்களைக் கட்டளைகளிடவும் தேவையான அரசியல் அதிகாரத்தைப்

பெறுவது. அல்லது சட்டவிரோதமாக நமது பாதுகாப்புக்காக நாமும் ஆயுதங்களைத் தூக்கிப் போராடுவது.

முதலாவது வழி ஜனநாயகக் கோட்பாடுகளுக்குள் நின்று கொண்டு நாம் எமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காணும் வழியாகும். மற்றது ஜனநாயக வரம்பு முறைக்கு அப்பால் சென்று சட்டவிரோதமாக செயல்பட்டு அப்போராட்டத்தின் முடிவை சட்டபூர்வமானதாக்குவதாகும்.

**எமது வழி ஜனநாயக வழி?**

இந்த இரண்டு வழிகளுள் முதலாவது வழியையே நாம் இப்போது தேர்ந்தெடுத்துள்ளோம். ஜனநாயகப் போராட்ட விதிகளுக்கு அமைய முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் சமூகத்திற்கு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றது. அதுதான் சட்ட ரீதியாக எமக்கென ஒரு முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபையைப் பெற்றுக் கொள்வதாகும்.

இந்த நியாயமான கோரிக்கை உரியவர்களின் காதுகளில் நியாயமான கால வரையறைக்குள் விழாத பட்சத்தில் எமது மாற்று வழி பற்றிச் சிந்திப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் தயங்கப்போவதில்லை என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

கிழக்குக்கு வெளியே வாழும் மூன்றில் இரண்டு பங்கு முஸ்லிம்கள் இன்னும் பாரதூரமான பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளார்கள். 80% வீதமான முஸ்லிம்கள் வறுமைக் கோட்டைத் தாண்டாத நிலையில் அன்றாடம் சாப்பிட முடியாமல் கண்ணீரும், கம்பலையுமாக தமது வாழ்க்கையை நடத்து கின்றனர். ஒழுங்கான வீடு, சுத்தமான ஆடை, தொழில் வாய்ப்புக்கள் எதுவுமற்ற நிலையில் ஏன் சுத்தமான காற்றைக்கூட சுவாசிக்க முடியாதவர்களாயிருக்கின்றார்கள். இந்த மக்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டிய பொறுப்பு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் கைகளிலுள்ளதை உணர்ந்தவர்களாகத் தான் எமது பணியை மேற்கொள்கின்றோம்.

முஸ்லிம் சமூகத்தின் சட்டபூர்வமான உரிமைகள் வென்றெடுக்கப்பட வேண்டுமாயின் முஸ்லிம் பிரதேசத்தைப்

பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய சுதந்திரமுள்ள முஸ்லிம் நாடாளுமன்றப் பிரதிநிதிகளை உருவாக்குவது இன்றியமையாததாகும். நாம் உருவாக்கிய அரசியல் ஒற்றுமை நமது விருட்சத்தில் 29 இனிய கனிகளைப் பெற்றுத் தந்துள்ளது. இனி நாம் சிந்தக்க வேண்டியது, எப்படி எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஆகக்கூடிய அளவு முஸ்லிம்களைத் தெரிவு செய்யலாம் என்பதே. அந்த இலட்சியத்திலிருந்து நாம் இம்மியளவேனும் நமது கவனத்தைத் திருப்பி விடக்கூடாது. அடுத்த நாடாளுமன்றத்திலுள்ள 225 ஆசனங்களில் முஸ்லிம் சமுதாயம் 17 ஆசனங்களைப் பெற உரிமை பெற்றது. இந்தப் பதினேழு பிரதிநிதிகளும் முஸ்லிம் சமுதாயத்திற்குக் கிடைக்குமா என்பது சந்தேகமே.

இவ்வளவு காலமும் இருந்தது போல் அலங்காரப் பொருட்களாக இருக்கக் கூடிய 17 முஸ்லிம் பாராளுமன்ற எம்பிக்கள் கிடைப்பது சந்தேகமே. விகிதாசாரத் தேர்தல் முறையும் அதில் அடங்கிய 12 1/2% வீத வெட்டுப்புள்ளியும், போனஸ் ஆசனங்கள் ஒதுக்கீட்டு முறையும், தெரிவாகக்கூடிய சூழ்நிலைகளை இன்னுமின்னும் மலினப்படுத்தி குறைத்து விட்டுள்ளன.

அல்ஹம்துலில்லாஹ், முஸ்லிம் காங்கிரஸ் தனது தியாகத்தின் மூலம் 29 மாகாண சபை உறுப்பினர்களை உருவாக்கியதே தவிர இன்னும் இரண்டு பெரும் சாதனைகளை நிறைவேற்றியுள்ளது.

**5% வெட்டுப் புள்ளி,**
**அரசியல் பிரதிநிதித்துவத்திற்கான உத்தரவாதம்**

அது மாத்திரமல்ல, முஸ்லிம் மாகாண சபைக் கோரிக்கையை எள்ளி நகையாடி, கேலிப்பொருளாகக் காட்டிய இரண்டு பேரினவாதக் கட்சிகளின் வாய்களை மூடியது ஒரு சாதனையாகும். மற்றது தான் 12 1/2% வீத வெட்டுப்புள்ளியைக் கடைசி அமர்விலாவது 5% வீதமாகக் குறைத்ததாகும். இந்த 12 1/2% வீத வெட்டுப்புள்ளியைக் குறைப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் முயன்றிராவிட்டால், அடுத்த 50 ஆண்டுகளுக்கு எந்தவொரு பாராளுமன்றத்திலும் இந்த வெட்டுப் புள்ளியைக் குறைத்திருக்க முடியாது. ஏனெனில் வெட்டுப் புள்ளியைக் குறைப்பதற்கான 2/3 பெரும் பான்மை எந்தக் கட்சிக்கும் விகிதாசாரத்தேர்தல் முறையின் கீழ் கிடைக்க முடியாது.

சுதந்திரமுள்ள முஸ்லிம் எம். பிக்களைத் தெரிவு செய்ய முஸ்லிம் சமுகத்திற்கிருந்த பெருந்தடையை முஸ்லிம் காங்கிரஸ் நீக்கித் தந்துள்ளது. இந்தத் தடையைத் தாண்டிய பின்னரும் கூட சுதந்திரமுள்ள முஸ்லிம் எம். பிக்களை உருவாக்க நாம் தவறுவோமானால் வருங்கால முஸ்லிம் சமுதாயம் நம்மை மன்னிக்கப் போவதில்லை. ஆகவேதான் இந்த நிமிடத்திலிருந்து முஸ்லிம் சமுகத்தின் முழுக்கவனமும் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலிலேயே இருக்க வேண்டுமென்பதை நினைவு படுத்த விரும்புகின்றேன். அடுத்த பொதுத் தேர்தலில் ஆகக் குறைந்தது 10 சுதந்திரமுள்ள முஸ்லிம் எம். பிக்களையாவது உருவாக்கும் நிய்யத்துடனும், எண்ணத்துடனும் நாம் இந்த மண்டபத்தை விட்டும் வெளியேற வேண்டும். இந்த இலட்சியத்தை அடைவதற்காக எம்மாலியன்ற சகல தியாகத்தையும் செய்வதற்கு நாம் ஆயத்தமாக வேண்டும். வேறு எந்தத் தேர்தலும், வேறு எந்த எண்ணமும் எம்மைத் திசை திருப்பக் கூடாது.

இலங்கை நாட்டுக்கு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி அமைப்பொன்று இருப்பது முஸ்லிம் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளாத ஒரு அம்சமாகும். எனவே தான் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி அமைப்பு நீக்கப்பட வேண்டுமென்ற குரலை நாம் பலதடவைகள் ஒலித்து வந்திருக்கின்றோம்.

எமது குரலைக் கேட்ட சுதந்திரக் கட்சி 'தனது நிலைப்பாடும் அது தான். ஆகவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் ஜனாதிபதி அமைப்பை ஒழிப்பதற்கான அதிகாரத்தைக் கூட்டாகப் பெறுவோம். அதற்கான கூட்டணி ஒன்றை ஏற்படுத்துவோம்' என்ற அழைப்பை விடுத்தது.

ஜனாதிபதித் தேர்தல் எம் நோக்கமல்ல. பாராளுமன்றத் தேர்தலே எமது இலட்சியம். ஆகவே இரு தேர்தலுக்குமென ஒரு முன்னணியை அமைப்பதானால் நாம் சம்மதிப்போம் என்றோம். இந்த அடிப்படை நம்பிக்கையின் பேரில் 8 கட்சிகள் சேர்ந்து, பொது முன்னணி அமைக்கும் வேலைகளில் ஈடுபட்டோம்.

சுதந்திரக் கட்சியின் கபட நாடகத்தைக் கண்ட ஜே. வீ. பி., ஈ. எல். ஜே. பி. கட்சிகள் அந்த அமைப்பிலிருந்து வெளியேறிய

போதும், பசுவின் போர்வையிலிருந்த புலியைக் காண முஸ்லிம் காங்கிரஸ் சுணங்கியது.

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து கடைசியில் ஆளையே கடிப்பது போல் சுதந்திரக் கட்சி தேர்தல் ஒப்பந்தம் செய்ய மறுத்ததன் மூலம் முஸ்லிம் காங்கிரஸை பூண்டோடு அழிப்பதற்கும், முஸ்லிம் சமூகத்தின் தனித்துவத்தை இல்லாமல் செய்வதற்கும் முயன்றபோது, பூரண அதிருப்தியடைந்த நாம் புலியைப் பார்த்து புலி என்று சொல்லும் தைரியத்தை இழக்காத நிலையில் வெளிவந்ததுடன், "அல்ஹம்துலில்லாஹ்" அல்லாஹ் அவனது கட்சியைக் கடைசி நேரத்திலாவது காப்பாற்றினான்.

ஜனாதிபதித் தேர்தல் எமக்கு முக்கியமானதல்ல. அது முஸ்லிம் சமூகத்தின் தலை எழுத்தைத் தீர்மானிக்கப் போவதில்லை என்பதை முஸ்லிம் சமூகம் சதா நினைவில் வைத்திருக்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலின் முடிவு எதுவாக இருந்தாலும் எமக்குப் பரவாயில்லை. முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையை பேணிப்பாதுகாக்க வேண்டியது எமது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பாகும்.

நமது சாதனை, நாம் உருவாக்கிய ஒற்றுமை ஒரு மணல் வீடாக மாறிவிடக் கூடாது, இதை ஒவ்வொரு முஸ்லிமும் உறுதிப்படுத்தியே தீரவேண்டும். முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையைக் குலைக்க முயற்சிப்பவர்களை, இந்த மணல் வீடு உறுதியாகும் வரை அதன் மீது கைவிரல் தானும் வைக்க முயற்சிப்பவர்களை முஸ்லிம் சமூகத்தின் பரம எதிரிகளாகப் பிரகடனஞ் செய்வதற்கு நாம் தயங்கக் கூடாது.

ஆனால் ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்த வரை இரண்டு விடயங்களை சொல்லி வைப்பது எமது கடமையாகும். சுதந்திரக் கட்சி முஸ்லிம் சமூகத்தின் தனித்துவத்தை அழிப்பதற்காகச் செய்த சதி நாசவேலையை நாம் மறந்து விட முடியாது. சிறிமாவோ அம்மையார் சுதந்திரக் கட்சி முஸ்லிம் காங்கிரஸுக்கு செய்த சதிக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ உடந்தையாக இருந்ததன் மூலம் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வரும் தகைமையை இழந்திருக்கின்றார். இது மாத்திரமல்ல நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை ஒழிப்பதென்ற பெயரில்,

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தொடர்ந்து இருப்பதற்கு அவர் செய்த திட்டம் இப்போது அம்பலத்துக்கு வந்துவிட்டது.

ஆகவே ஜனாதிபதி அமைப்பில் நம்பிக்கை இல்லாத முஸ்லிம் காங்கிரஸின் அங்கத்தவர்களும் , ஆதரவாளர்களும் எக்காரணம் கொண்டும் சுதந்திரக் கட்சி வேட்பாளருக்கு வாக்களிக்க முடியாது. சிறிமாவோ அம்மையார் பொது முன்னணியின் வேட்பாளராக முன் வந்திருக்கின்றார் என்பது ஒரு கண்கட்டுவித்தையாகும் என்பதில் முஸ்லிம் காங்கிரஸுக்கு எவ்வித சந்தேகமுமில்லை.

ஜனாதிபதித் தேர்தலைப் பற்றிச் சிந்திக்கும் போது மூன்று வேட்பாளர்கள் மாத்திரம்தான் இருக்கிறார்களென்ற அடிப்படையில் நாம் செயலாற்றக் கூடாது.

ஜனாதிபதித் தேர்தலில் மிகவும் முக்கியமான அம்சமானது ஜே. வி. பி. யின் நிலைப்பாடாகும். இது பற்றியும் முஸ்லிம் சமூகத்தின் கவனத்தைத் திருப்ப வேண்டியது எமது கடமையாகும்.

எனவே, தேர்தல் முடிவு எதுவாயிருந்தாலும் ஜனாதிபதித் தேர்தலின் பின் ஒரு அரசியல் புரளி, இரத்த வெள்ளம் என்பனவெல்லாம் நடக்கமாட்டாது என்பதற்கு யாரும் உத்தரவாதம் அளிக்க முடியாது.

இத்தகைய சூழ்நிலையில் முஸ்லிம் சமுதாயம் இந்தச் சிக்கல்கள் எவற்றுக்குள்ளும் மாட்டிக் கொள்ளாமல் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் மாத்திரமே கவனம் செலுத்த வேண்டுமென்றும், அந்தத் தேர்தலில் நாங்கள் குறைந்தது 10 சுதந்திரமுடைய எம்பிக்களையாவது முஸ்லிம் காங்கிரஸின் மூலம் தெரிந்தெடுப்பதே நமது இலட்சியமாக இனி அமைய வேண்டுமென்றும் இந்த உடனடி இலட்சியத்திலிருந்து இம்மியளவும் நாம் தவறக் கூடாது என்பதுவும் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் சமூகத்திற்கு எடுத்துச் சொல்ல விரும்பும் அரசியல் வழிகாட்டலாகும்.

ஆகவே, இந்த இலட்சியத்துக்கு ஊறு செய்யக்கூடிய எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நடுநிலை வகிப்பதே சாலச் சிறந்தது என்பதே முஸ்லிம் காங்கிரஸின் தீர்க்கமான முடிவாகும்!

# 11வது தேசிய மாநாட்டு உரை.

## 07 பெப்ரவரி 1993 சுகததாஸ அரங்கில்

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.**

பேரறிஞர்களே, கண்ணியத்துக்குரிய உலமாப் பெருமக்களே, தாய்மார்களே, மேடையிலே வீற்றிருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் போராளிகளே! நீண்ட தூரங்களிலிருந்து இந்த விழாவுக்கு வந்திருக்கின்ற என் நெஞ்சில் நிறைந்த என் கண்மணிகளே! அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்தம்பி திவ்வியநாதன் அவர்களே, ஸ்ரீ. ல. மு. காங்கிரஸ் அதியுயர் உறுப்பினர்களே, மக்கள் பிரதிநிதிகளே, ஆதரவாளர்களே, தாய்மார்களே, சகோதரிகளே! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு.

இன்றைய நாள் நாம் அனைவரும் மகிழ்ச்சியை ஆளுகின்ற ஒரு நாளாகும். அல்ஹம்துலில்லாஹ், பதினொரு ஆண்டுகளைப் பூர்த்தி செய்து நாம் இன்று புதியதொரு தசாப்தத்திலே காலடி வைத்திருக்கின்றோம்.இந்த இடைவேளைக்கிடையில் எத்தனையோ பிரச்சினைகள் எத்தனையோ சோதனைகள், எத்தனையோ குத்துவெட்டுக்கள் நடந்தபோதிலும் அல்ஹம்துலில்லாஹ், இந்த இடத்திலே நம் எல்லோரையும் சிறப்பாக கூட வைத்த எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரித்தாகும். அவனுடைய தூதர் எங்களுடைய கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களுடைய குடும்பத்தார் மீதும், அவர்களுடைய தோழர்கள் மீதும் அல்லாஹ்வுடைய சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக! அன்புள்ள சகோதரர்களே! கடந்த ஆண்டு ஸ்ரீ. ல. மு. காங்கிரஸின் பத்தாவது தேசிய மகாநாட்டை நான் ஞாபகப்படுத்துகின்றேன். பத்தாவது ஆண்டுக்கும், பதினொராவது ஆண்டுக்கும் இடையே நடந்த எத்தனையோ விடயங்கள் எனது ஞாபகத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன. அந்த அரசியல் மாற்றங்கள், அந்த அரசியல் நடவடிக்கைகள் எல்லாம் மு.கா. உடைய பொறுமையை சோதித்த சோதனைகளாக இருந்ததை நாம் மறந்து விட முடியாது. இதற்கு முன்பு அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஒரு சகோதரர் 'நீர் இல்லாத போராளிகளே!'என்று நான் பாராளுமன்றத்திலே பாடிய ஒரு கவிதையை இங்கு பாடிக் காட்டினார். துரதிர்ஷ்டவசமாக அந்த பாடலை

முழுவதையும் பாடுவதற்கு அவருக்கு அனுமதி கொடுக்க முடியாத நிலையே இன்று இருந்து கொண்டிருக்கிறது. அதற்காக அவர் எங்களை மன்னிக்க வேண்டும். இதை நான் என்னுடைய உரையில் பேச வேண்டி வந்தது என்னவென்றால் அந்த சகோதரர் இந்தப் பாடலை பாடிக்கொண்டிருந்த போது எத்தனையோ சகோதரர்களின் கண்களில் இருந்து கண்ணீர் மாலை மாலையாக வடிந்ததை நான் காணக்கூடியதாக இருந்தது. அன்று பாராளுமன்றத்திலே அவ்வாறு ஒரு கவிதையை பாடவேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்றால் அந்தக் கவிதை எழுதப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்புதான் திம்பிரிக்கஸ்யாய வீட்டில் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரைக் கொலை செய்வதற்கு முயற்சிகள் நடைபெற்றன. இது மு. காங்கிரஸ் தலைவரின் வாழ்வில் முதலாவது நிகழ்ச்சி அல்ல. இதற்கு முன்பு எத்தனையோ நிகழ்ச்சிகள் எத்தனையோ சதிகள் எங்களுக்கு நடைபெற்று இருக்கின்றன. கொலை முயற்சிகள் நடைபெற்று இருக்கின்றது. அந்த முயற்சிகள் அந்த சதிமானங்கள் அத்தனையையும் தோற்கடித்து அல்லாஹுத்தஆலா மு. கா. தலைவரை இந்த மகாநாட்டிலே பேச வைத்து இருக்கின்றான், பேச வைக்கின்றான். அவனுக்கே எல்லாப் புகழும் உரித்தாகட்டும்.

அன்புள்ள சகோதரர்களே! இந்தப் போராட்டம், நாம் செல்லுகின்ற இந்தப் பாதை எங்கு செல்லுகின்றது என்ற பெரியதொரு கேள்வி தான் இந்த மாநாட்டிலே கேட்க வேண்டிய பெரியதொரு கேள்வியாகும். இந்த நாட்டிலே எத்தனையோ அரசியல் கட்சிகள் இருக்கின்றன. இந்த நாட்டிலே வாழ்ந்து வந்த முஸ்லிம்களுடைய வரலாற்றில் எத்தனையோ அரசியல் ஸ்தாபனங்கள், எத்தனையோ பொது ஸ்தாபனங்கள் ஆரம்பிக்கப்பட்டு வந்தன. அத்தனை ஸ்தாபனங்களையும் அந்த ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளைக் கண்டு கலக்கம் கொள்ளாமல் ஏன் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரசை மாத்திரம் கண்டு கவலை அடைகின்றார்கள்? அந்த தலைமைத்துவத்தை இல்லாமல் ஆக்குவதற்கு கஷ்டப் படுகின்றார்கள் என்பது நாங்கள் கேட்க வேண்டிய ஒரு கேள்வியாகும்.

**ஏன் முஸ்லிம் காங்கிரசை தலைமையை அழிக்க நினைக்கிறார்கள்?**

1984ம் ஆண்டு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக வருவதற்கு முன்பு பிரதேச சபை தேர்தலிலே நாம் சுயேட்சை அணியாக போட்டியிட்ட

காலத்தில் விடுதலைப் புலிகள் ஸ்ரீ. ல. மு. காங்கிரசுக்கு எதிராக மரண தண்டனை வழங்கியிருந்ததை நீங்கள் மறந்து விடமாட்டீர்கள். முஸ்லிம்கள் சேர்ந்தும் இருக்கவும் கூடாது, முஸ்லிம்கள் என்ற நாமம் ஒலிக்கவும் கூடாது. முஸ்லிம்களுடைய தேசிய பிரச்சினைகள் எல்லாம் தமிழை பேசுகின்ற ஒரே ஒரு ரூபத்தில்தான் பார்க்க வேண்டும். தமிழைப் பேசுகின்றார்கள் என்ற ஒரு காரணத்துக்காக தமிழர்களுக்குள் அடக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் விடுதலைப் புலிகள் அன்று இருந்தார்கள். அவர்கள் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்திற்கு எதிராகவும் விடுத்த அந்த மரண தண்டனை விதிகளை எங்களுடைய தேசிய வடிவத்துக்குள் வைத்துக் கொண்டு இந்த போராட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்கின்றோம்.

விடுதலைப் புலிகள் ஸ்ரீ. ல. மு. காங்கிரசின் தலைமைத் துவத்தை முற்றாக அழிப்பதற்கு ஏன் முயற்சி செய்கின்றனர் என்பது ஒரு முக்கியமான கேள்வியாகும்.

ஒரு காலம் இருந்தது. அந்தக் காலத்தில் முஸ்லிம் சமுதாயம் எடுப்பார் கைப்பிள்ளையாக தரையிலே போடப்பட்ட ஒரு காலம் இருந்தது. அல்ஹம்துலில்லாஹ்! ஸ்ரீ. ல. மு. காங்கிரஸின் தோற்றத்தின் பின்பு முஸ்லிம் சமுதாயம் தனித்துவம் பெற்று இருக்கின்றது என்பதையும் இலங்கை முஸ்லிம்களுக்கு இந்த நாட்டில் மாத்திரமல்லாமல் சர்வதேச மட்டத்திலும் கண்ணியம் கிடைத்து இருக்கின்றது என்பதையும் இன்றைய மாநாடு சிறப்பாக எங்களுக்குக் காட்டிக் கொண்டிருக்கின்றது. எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே அத்தனை புகழும் உரித்தாகட்டும்.

### உள்ளிருந்து கொல்லும் வியாதி

அன்புள்ள சகோதரர்களே! கடந்த பத்து ஆண்டுகாலத்தை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். வெளிப்புறத்திலிருந்து எங்களுக்கு சதிமானங்களை செய்வதற்கு ஐ. தே. கட்சி உயர் மட்டத்திலும், விடுதலைப் புலிகளும் தமிழ் ஆயுதக் குழுக்களும் முஸ்லிம் காங்கிரசை அழிக்க வேண்டுமென்று முயற்சி செய்கிறார்கள். ஆனால் நடந்தது என்ன? முஸ்லிம் காங்கிரசின் எழுச்சியைவிரும்பாதவர்கள் தான் மறைந்தார்கள் என்பதை வரலாறுகள் சொல்லிக் கொண்டிருக்கின்றன. எங்களைப் பாதுகாப்பதற்கு என்றும் எம்

பக்கமிருக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அன்புடைய சகோதரர்களே! ஒரு புறத்தில் எங்களுக்கு வெளி கட்சிகளிலிருந்து நிறைய சவால்கள், எதிர்ப்புகள் வந்து கொண்டிருக்கின்ற போதும் உள்ளிருந்தே கொல்லும் வியாதிகள் எங்களுக்குள் இருந்தன. அந்த உள்ளிருந்து கொல்லும் வியாதிகளை அல்ஹம்துலில்லாஹ் அடையாளம் காண்பதற்கு அல்லாஹ் எங்களுக்கு வழிவகுத்தான். அந்த வியாதிகளை அந்தக் குறைகள் அனைத்தும் இல்லாமலாகி இன்று புதுப் பொலிவுடன் இந்த மாநாட்டில் ஸ்ரீ. ல. மு. கா. பன்னிரண்டாவது ஆண்டிலே காலடி எடுத்து வைத்திருக்கின்றது என்பதை மிகவும் சந்தோசமாக எடுத்துக் கூற விரும்புகின்றோம்.

அன்புள்ள சகோதரர்களே! ஆயிரம் பேர் ஆயிரம் பொய்களைச் சொன்ன போதிலும் மு. கா. தலைமைத்துவம் அந்த தலைமைத்துவத்தை நம்பி, அந்த தலைமைத்துவத்தின் பின்னால் இன்று ஒன்று பட்டிருக்கின்ற இந்த நாட்டு முஸ்லிம்கள் மிகவும் தெளிவாக இருக்கின்றார்கள். அது தான் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் இலட்சியமும் மு. கா. கட்சி தனக்கென அமைத்துக் கொண்ட அரசியல் சித்தாந்தமும் ஆகும்.

**முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் சித்தாந்தம்!**

நமது செய்தி நம்முடைய அரசியல் சித்தாந்தம் நிச்சயமாக வளரக் கூடிய சக்தி என்பதை இந்த மகாநாடு எங்களுக்கு எடுத்துக் காட்டுகின்றது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிரான எத்தனையோ சதிமானங்கள் ஏற்பட்ட பொழுது அல்லாஹுத்தஆலா குர்ஆனிலே சொல்லுகின்றான். ''நபியே! நீர் பயப்பட வேண்டாம். 'சதிகாரர்களுக்கு மேலான சதிகாரன் நான் இருக்கின்றேன்' என்று அல்லாஹுத்தஆலா பெருமானார் (ஸல்) அவர்களுக்கு குர்ஆனிலே கூறிக் காட்டுகின்றான். ஸ்ரீ. ல. மு. கா. உடைய பாதையும் அத்தகைய பாதைதான். இன்று கட்சி உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், பிற கட்சித் தலைவர்கள் வந்து எங்களை வாழ்த்தினார்கள், முஸ்லிம் நாடுகள். அறபு நாடுகள் மாத்திரம் வந்து எங்களை வாழ்த்தவில்லை! சித்தாந்த அரசியல் சீன நாடு இங்கே வந்து எங்களை வாழ்த்தியது. ஏன் எங்களை வாழ்த்துகிறார்கள்? தமிழ் சகோதரர்கள் வந்து எங்களை வாழ்த்தினார்கள். ஏன் எங்களை வாழ்த்துகிறார்கள் என்பது தான் கேள்வி. அவர்கள் எல்லாம் விஷயங்களை புரிந்து கொண்டு வாழ்த்துகின்றார்களா அல்லது கடமைக்காக வந்து எங்களை

வாழ்த்திக் கொண்டிருக்கிறார்களா என்பதை நாம் சிந்திக்காமல் இருக்க முடியாது.

அன்புள்ள சகோதரர்களே! நம்முடைய பாதை மிகவும் தெளிவான பாதையாகும். ஸ்ரீ. ல. மு. கா. ஒரு அரசியல் கட்சியாக பிரகடனம் செய்யப்பட்ட அந்த நாளிலிருந்து நாங்கள் ஒரு விடயத்தை இந்த நாட்டு முஸ்லிம்களுக்கு தெட்டத் தெளிவாக சொல்லியிருக்கின்றோம். இந்த ஸ்ரீ. ல. மு. கா. ஒரு போதும் அரசியல் அபிலாசைகளை ஏற்படுத்தமாட்டாது. ஸ்ரீ. ல. மு. கா. ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக அமைக்கப்பட்ட ஒரு கட்சி அல்ல என்பதை நாம் மிகவும் தெளிவு படுத்தியிருக்கின்றோம். எங்களுக்குப் பின்னால் நமக்குப் பின்னால் மக்கள் ஏன் வந்து கொண்டிருக்கிறார்கள் என்ற கேள்வியை எழுப்பி நாம் சிந்திக்காமல் இருக்க முடியாது. அன்புள்ள சகோதரர்களே, தாய்மார்களே! சிந்தித்துப் பாருங்கள். நாங்கள் மக்களுக்கு மத்தியில் வந்து உங்களுக்கு எதையும் செய்து தரமாட்டோம். உங்களுக்கு எதையும் தரமாட்டோம். ஆனால் இந்த நாட்டு முஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்த வேண்டும் என்பதற்காகவும் இந்த நாட்டிலே இஸ்லாமிய அரசியலை வளர்க்க வேண்டும். அதற்காக நீங்கள் ஒன்றுபட வேண்டும். நாங்கள் எந்த அரசியலில் எதையும் எதிர்பார்த்து போகின்றவர்கள் அல்ல. அல்லாஹுதஆலாவின் நெருக்கம் மாத்திரம் தான் எங்களுக்கு வேண்டும் என்ற எங்களுடைய செய்தியை நீங்கள் மறந்து விடக்கூடாது. இந்த இலங்கையிலே அந்தச் செய்தியை ஜீரணித்தவர்களாக இந்த மக்கள் கூட்டம் இன்னும் இக்கூட்டத்திலே இருந்து வருகின்றார்கள் என்றால் அதற்கு அல்லாஹுதஆலாவின் வழிகாட்டலே தவிர வேறு எந்த உதவியுமே இல்லை.

எனவே தான் அன்புள்ள சகோதரர்களே! மேடையிலே வைத்து இந்தக் கட்சியின் தலைவர் என்ற முறையிலே நான் இன்னுமொரு தெளிவான விஷயத்தை சொல்ல விரும்புகின்றேன். எங்களை எதிரிகளாகக் கண்டு அழிக்க இருந்தவர்களுக்கு நான் மிகவும் தெளிவான விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கட்சி ஒரு தேசிய அரசியல் கட்சியாக மாறவேண்டும் என்று நமது ஆறாவது மகாநாட்டிலே நாம் சேர் ராஷிக் பரீட் அவர்கள் அடங்கியிருக்கின்ற பாஷாவிலாவிலே வைத்து பிரகடனம் செய்த அந்த நேரத்திலிருந்து அந்த நாளிலிருந்து ஒவ்வொரு

நேரத்தொழுகை நேரத்திலும் கட்சியின் தலைமைத்துவம் கேட்கின்ற துவா ஒன்று இருக்கின்றது. அது தான் இந்தக் கட்சி இந்த நாட்டிற்கு தேவையில்லை என்றால், இந்த கட்சி இந்த முஸ்லிம்களுக்கு தேவையில்லை என்றால் அதை அழித்து விடு என்று அல்லாஹ்விடம் இரங்கி கேட்கின்ற முதலாவது வரம் இந்தக் கட்சியின் தலைமைத்துவத்தின் வரம் என்பதை அல்லாஹ் மீது சத்தியமாக நான் இந்த மேடையிலே சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். அல்லாஹ்வுடைய நாட்டம் இந்த யாத்திரை தொடர்ந்தும் நடக்க வேண்டுமென்று இருந்தால் இந்தக் கட்சி அல்லாஹ்வுடைய உதவியின்றி யாராலும் அழிக்கப்பட முடியாது என்பதை ஆணித்தரமாக கூறி வைக்க விரும்புகின்றேன்.

அன்புள்ள சகோதரர்களே! இன்று எங்களுக்கு எதிராக ஏன் இவ்வளவு புகைச்சல், ஏன் எங்களுக்கு எதிராக எரிச்சல் என்பதை நீங்கள் தயவு செய்து எண்ணிப்பாருங்கள். நாங்கள் இங்கு ஏற்கனவே சேர்ந்து இருக்கின்ற சேற்றுக் குழிக்குள்ளே முஸ்லிம்களை கொண்டு போய் விடவேண்டுமென்று சிலர் நினைத்துப் பார்க்கின்றார்கள். ஒரு நாட்டில் அரசாங்கம் என்றால் அரசாங்கக் கட்சி இருக்கும். எதிர் கட்சி இருக்கும். அரசாங்கக் கட்சியுடன் சேர்ந்து வால்பிடிக்க வேண்டும், பொய் சொல்ல வேண்டும், மக்களை ஏமாற்ற வேண்டும், கைலஞ்சம் எடுக்க வேண்டும், பிறநாட்டுக் கட்சிகளிடம் காசை வாங்கிக் கொண்டு மக்களை ஏமாற்ற வேண்டும், தங்களுடைய பைகளை நிரப்பிக்கொள்ள வேண்டும், பெஜிரோக்கள் வேண்டும், பதவிகள் வேண்டும் என்று எண்ணியவர்கள் தான். ஸ்ரீ. ல. மு. கா. சைப் பார்த்து பிழையாக எடைபோடுகின்றார்கள். ஆனால் இன்று ஸ்ரீ. ல. மு. காங்கிரஸின் இலட்சியம் என்னவென்றால் எங்களுடைய தனித்துவத்தை இந்த நாட்டிலே ஏற்படுத்துவதற்காக மாத்திரமல்ல. இந்த நாட்டு அரசியல் வரலாற்றை மாற்றக்கூடிய ஒரு சக்தியாக ஸ்ரீ. ல. மு. காங்கிரஸ் இருக்கின்றது என்பதை நாம் பகிரங்கமாக கூறி வைக்க விரும்புகின்றோம்.

**நம்பிக்கையில்லாப் பிரேரணையில்**
**முஸ்லிம் காங்கிரஸின் முடிவு!**

அன்புள்ள சகோதரர்களே! அல்லாஹ் பெரியவன். பத்தாவது மாநாட்டுக்கு திரும்பி வாருங்கள், பத்தாவது தேசிய மாநாட்டிலும் எங்களுடைய மாண்பு மிகு ஜனாதிபதி அவர்கள் தான் சிறப்பு அதிதியாக வந்து பேசியதில் என்ன சொன்னார்கள்? மு.கா.

கட்சிக்குள்ளும் பிளவுகள் இருக்கின்றன. இரண்டு குழுக்கள் இருக்கின்றன என்று சொல்லி இரண்டு மூன்று நாட்கள் முடிவதற்கு முன்பு ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க் கட்சியினர் கொண்டு வந்தார்கள். அந்த சம்பவம் எவ்வாறு நாட்டின் அரசியல் வரலாற்றை மாற்றியது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். எல்லோரும் ஒரு புறத்திலே இருக்கின்ற போது மு. கா. தலைமைத்துவம் மாத்திரம், நமது கட்சி மாத்திரம் தனியாக இருந்தது. நாங்கள் ஏன் ஜனாதிபதிக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவாக கையெழுத்துப் போடவில்லை என்று எங்கள் மக்கள் கேட்டார்கள். என்னுடைய கண்ணியத்துக்குரிய முன்னாள் அமைச்சர் லலித் அதுலத் முதலி அவர்கள், எங்களுடைய மதிப்புக்குரிய சபாநாயகர் அவர்கள், சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் அவர்கள், எல்லோரும் ஒன்று திரண்டு கையொப்பமிட்டு ஜனாதிபதியை தூக்கி வீச முயற்சி செய்கின்ற போது, நீங்கள் ஒரு சின்னக்கட்சி, சும்மா இருக்கின்றீர்கள்? நீங்களும் சேர்ந்தல்லவா இந்த வேலையில் ஈடுபட வேண்டும் என்று எங்களை எதிர்பார்த்தார்கள். ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருக்கின்றவர்களும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், அறிஞர்கள் எல்லாம் சேர்ந்து வேலை செய்கின்ற போது மு. கா. மாத்திரம் ஏன் பிரிந்து நிற்கின்றது என்று கேள்விகள் எழுப்பப்பட்டது.

## அல்லாஹ்வுடைய வழிகாட்டல் எப்போதும் நமக்குண்டு!

எங்களுடைய கட்சி செயற்குழு கூட்டத்தில் எனது நண்பர் முஹைதீன் அவர்களும் இங்கு இருக்கின்றார்கள். அவரின் தலைமையிலே நடந்த கருத்தரங்கிலே எங்களுடைய ஆதரவாளர்கள் கேள்வி கேட்டார்கள். ஜனாதிபதிக்கு எதிரான இந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணையில் நீங்கள் ஏன் கையொப்பமிடவில்லை? இது வெற்றியடைந்தால் முஸ்லிம் காங்கிரஸின் நிலைமை என்ன? நாங்கள் அழிக்கப்பட மாட்டோமா என்று கேள்விகள் எழுப்பினார்கள். அதற்கு பதில் கொடுக்கின்ற போது அல்லாஹ்வினுடைய உதவியினால் நான் சொன்னேன். ஜனாதிபதிக்கு எதிராக கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை அப்படியே முற்றாகிப் போய்விடும். இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சில வேளை சபாநாயகருக்கு எதிராக வந்தாலும் வரலாம் என்று அல்லாஹ்வின் கிருபையால் என்னால் கூறி வைக்க முடிந்தது. இதனை நான் ஏன் சொல்லுகின்றேன்? இந்தச் சம்பவம் நடைபெறுவதற்கு முன்பே

பல மாதங்களுக்கு முன்பே சரியான முடிவுகளை எடுக்கக் கூடிய மனப்பக்குவத்தை அல்லாஹுதஆலா முஸ்லிம் காங்கிரசுக்கு தொடர்ந்து தந்து கொண்டிருக்கின்றான்.

எங்களுக்கு மத்தியிலே எனது அன்புக்குரிய நண்பர் திரு ஒஸி அபே குணசேகர அவர்கள் வந்து பேசினார்கள். அவர் எனது மதிப்பிற்குரியவர். ஜனாதிபதிக்கு எதிராக கொண்டு வரப்பட்ட இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை அந்தக் கட்சியை மூன்று நான்கு துண்டுகளாக உடைத்து இருக்கின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அந்தப் பிரேரணை பல துண்டங்களாக வெட்டி வீழ்த்தப்பட்டிருக்கின்றது. இந்தப் புயல்களுக்குள்ளே, இந்த பெருந்தாக்கத்துக்குள்ளே தப்பிய ஒரே ஒரு கட்சி இருக்குமென்றால் அது ஸ்ரீ. ல. மு. காங்கிரஸ் என்பதை நாம் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். ஆகவே தான் இவற்றை எல்லாம் ஏன் நான் சொல்கின்றேன் என்றால் எங்களுடைய கட்சிக்கு, நமது கட்சிக்கு அல்லாஹ்வுடைய வழிகாட்டல் தொடர்ந்தும் இருந்து கொண்டு இருக்கின்றது.

இந்தக் கட்சி முஸ்லிம் சமுதாயத்துக்கு மாத்திரமல்ல. இந்த நாட்டில் இருக்கின்ற சகல சமூகங்களுக்கும் வழிகாட்டுகின்ற ஒரு தன்மையை நமது கட்சிக்கு அல்லாஹுத்தஆலா தந்திருக்கின்றான். பாராளுமன்றத்திலே எத்தனையோ விஷயங்கள் வருகின்றன. அத்தனை விஷயங்களில் நாங்கள் அரசாங்கத்தை ஆதரித்து வாக்களிக்கவில்லை. எங்களுக்கு சரியாகப்படுகின்ற விசயங்களுக்கு அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குகின்றோம். எங்களுக்குச் சரியாகப் படாத விசயங்களில் அரசாங்கத்தை நாங்கள் எதிர்த்து நிற்கின்றோம். அவசரகால நிலைமை வந்தால் ஆதரவளிக்கின்றோம். ஸ்ரீ.ல.சு.க அவசர கால நிலைமை வேண்டாம் என்று எதிர்த்து வாக்களிக்கின்றது. எங்களிடம் கேட்கின்றார்கள். நீங்கள் ஏன் அவசரகாலத்துக்கு ஆதரித்து வாக்களிக்கின்றீர்கள் என்று.

**எமது நோக்கமென்ன?**

அன்புள்ள சகோதரர்களே! தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். இந்தக் கூட்டத்திலே, இந்த மக்கள் வெள்ளத்திலே இன்று மன்னாரிலிருந்து அகதிகளாக்கப்பட்ட எத்தனையோ மக்கள் இருக்கின்றார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்ட சகோதரர்கள் இருக்கின்றார்கள். எத்தனையோ நூற்றுக்கணக்கானவர்கள் இங்கே வந்திருக்கின்றார்கள். கிழக்கிலிருந்து சகோதரர்களும் வந்ததிருக்கின்றார்கள். எங்களுடைய பாதுகாப்பை யார் உறுதி செய்வது? அரசாங்கம் உறுதி செய்யக் கூடாது, புலிகளிடம் இருந்து பாதுகாப்பு வேண்டும் என்றால் நாங்கள்

என்ன செய்ய முடியும்? நாங்கள் அவசரகால நிலைமையை ஆதரித்தால் மாத்திரம்தான் வடகிழக்கிலே முஸ்லிம் சமுதாயத்தின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும் என்பதற்காக மாத்திரம் அவசர கால விவாதம் வருகின்ற போது அரசிற்கு ஆதரவாக நாம் வாக்களித்து வருகின்றோம். அரசிற்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்று சிலர் எண்ணிப் பார்க்கின்றார்கள். யார் இவர்கள்? அரசிற்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்பதற்காக எங்களுக்கு ஒரு கட்சி தேவையில்லை. ஒரு அரசை நிறுத்த வேண்டும் என்பதற்காக ஒரு கட்சி தேவையில்லை. அரசிற்கு எதிராக வாக்களிப்பதற்காக ஒரு கட்சி வேண்டும் என்றால் மு. கா. விட்டுவிட்டு ஸ்ரீ. ல. சு. கட்சியிடம் நாங்கள் போய்ச் சேரலாம். அரசை வீழ்த்தி புதிய அரசாங்கம் அமைப்பதுதான் எங்களுடைய நோக்கம் என்றால் மு. காங்கிரஸ் எங்களுக்குத் தேவையில்லை. நாங்கள் ஸ்ரீ. ல. சு. கட்சிக்குப் போய்ச் சேரலாம். அரசை வீழ்த்துவது எங்கள் நோக்கமல்ல; ஒரு அரசிற்கு இன்னுமொருவரை கொண்டு வருவது எங்கள் நோக்கமல்ல, வீழ்த்துவதும் நோக்கமல்ல; உயர்த்துவதும் நோக்கமல்ல என்றால் எங்களுடைய நோக்கம் என்ன? எங்களுடைய நோக்கம் இன்று நாளை நிறைவேறுகின்ற நோக்கமல்ல. எமக்காக நீண்ட ஒரு தூரம் இருக்கின்றது. இந்த யாத்திரையிலே நாமும் இணைந்திருக்கின்றோம். இந்த யாத்திரை என்று முடியும் என்று யாருக்கும் தெரியாத தொடர் யாத்திரை. இந்த யாத்திரையில் செல்லுகின்ற யாத்திரீகக் கூட்டத்திற்கு எதுவுமே கிடைக்க மாட்டாது J.P. பதவி கூடக் கிடைக்க மாட்டாது. சிலர் கேட்கின்றனர், மு. கா.வுக்கு எவ்வளவு பாடுபட்டோம். என்ன செய்தார்கள்? எதைச் சாதித்துவிட்டார்கள்? எங்களுக்கென்று என்ன தந்தார்கள்? கோட்டாக்கள், கொந்தராத்துக்கள் தந்தார்களா? இவர்களை எதற்காக நாங்கள் ஆதரிக்க வேண்டும் என்று கேட்டார்கள். கோட்டாக்கள் தேவைப்பட்டோருக்கு உரிய இடம் இந்த மு. கா. அல்ல. கோட்டாக்கள் தேவையானோர் கோட்டாக்கள் இருக்கின்ற இடங்களுக்கு ஏற்கனவே போய்ச் சேர்ந்திருக்கின்றார்கள். பணம் தேவைப்பட்டோர் முஸ்லிம் காங்கிரஸிற்கு இருக்கின்ற பணம் முடிவடைந்த போது பணம் இருக்கின்ற இடங்களுக்கு விரைந்தார்கள். எவ்வாறு இடம்மாறுவதோ அவ்வாறு இன்று இடம் மாறிக் கொண்டிருக்கிறார்கள். எங்களோடு இருக்கப்போகின்றவர்கள், எங்களோடு இருக்கின்றவர்கள் அல்லாஹுத்தஆலாவிற்காக மாத்திரம் இந்த சமுதாயத்தின் உயர்ச்சிக்காக பாடுபடுகின்றவர்கள் மாத்திரம் தான் எங்களுடன் இருக்க வேண்டும்.

**இந்தப் போராட்டம் எங்கள் ஆத்ம திருப்தியே!**

பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள். எந்தவொரு முஸ்லிம் மாலையிலே படுக்கப்போகின்ற போது தன்னுடைய சமூகத்தைப் பற்றி சிந்திக்கவில்லையோ, அவன் எண்ணிலிருந்தும் உள்ளவன் அல்ல என்று றசூல் (ஸல்) சொன்னார்கள். நாங்கள் காலை, மாலை எந்த நேரமும் இந்த சமூகத்தைப் பற்றி சிந்திக்கின்றோம். அது எங்களுடைய அவாவாகும். எங்களுடைய ஆன்ம திருப்திக்காக இந்தப் பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். எங்களுடைய ஆத்மாக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மாத்திரம் நாங்கள் இந்த யாத்திரையை தொடர்ந்தும் நடத்திச் சென்று கொண்டிருக்கின்றோம். வேறு எந்தவிதமான எண்ணங்களோ எந்த விதமான இலட்சியங்களோ அல்ல. மந்திரியாவதும் அல்ல. மந்திரியாகக் கூடாது என்பதுவும் அல்ல. மந்திரி ஆவது எமது அவா அல்ல. மந்திரியாவதற்காக ஸ்ரீ. ல. மு. கா. அமைக்கப்படவில்லை. கடந்த இரு ஆண்டுகளாக பத்திரிகையில் எழுதிக் கொண்டிருக்கின்றார்கள். எங்கு அந்தப் பத்திரிகை? பத்திரிகையில் எத்தனையோ விசயங்களை சொல்லுகின்றார்கள். தலைவருக்கு, லிபியாவிலிருந்து இத்தனை கோடி ரூபா கிடைத்துள்ளது, ஈரானிலே இருந்து இத்தனை கோடி ரூபா கிடைத்துள்ளது, அவுஸ்திரேலியாவிலே, பெரிய மாடிவீடுகள் இருக்கின்றதென்றெல்லாம் பேசுகிறார்கள். அதுவல்ல கேள்வி. நமது கட்சி இனாமாக எதையும் விரும்பாமல் அல்லாஹ்வுக்காக நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம். இந்தப் பாதையிலே நாம் மரணிக்க நேர்ந்தால் நாங்கள் அல்லாஹ்வுடைய பாதையிலே மரணிக்கின்றோம் என்ற உணர்வு இருந்தால் மாத்திரம் தான் இந்த யாத்திரையிலே தொடர முடியும். வேறு யாரும் இந்த யாத்திரையிலே நின்று பிடிக்க முடியாது.

ஆகவேதான் அன்புள்ள சகோதரர்களே! உங்களைக் காண்கின்றபோது நான் சந்தோசப்படுகின்றேன். எதையும் எதிர் பார்க்காமல் நீங்கள் எல்லோரும் எத்தனையோ தியாகங்களுக்கு மத்தியிலே இங்கு வந்து சேர்ந்திருக்கின்றீர்கள். நம்முடைய கட்சிக்கு அல்லாஹுத்தஆலா தந்திருக்கின்ற கண்ணியம் மு. காங்கிரஸுக்கு மாத்திரமல்ல, முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் எங்கள் மத்தியில் கண்ணியத்தைத் தேடி வருகின்றன. இந்த நாட்டு அரசியலில் சரியான பாதையினை எடுத்துச் சொல்லக் கூடிய, சிங்களத்தலைமைத்துவத்தை வழிப்படுத்தக் கூடிய வாய்ப்பு எங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. ஜனாதிபதி அவர்களுடன் தொடர்பு கொள்கின்றோம். அரசாங்கத்துடன் தொடர்பு கொள்கின்றோம். நாம்

அதனுடன் சேர்ந்து கொள்வதற்காக அல்ல. எதிர்க் கட்சிகளுடன் தொடர்பு கொள்கின்றோம். நாம் செய்வது எல்லாம் இந்த சமுகத்தின் நன்மையை கருத்திற்கொண்டு மாத்திரமல்லாது வேறு எந்த நோக்கமும் இல்லை என்பதை நமது நண்பர்கள் தெளிவு காண வேண்டும்.

**தமிழர்களும் முஸ்லிம்களும் மாத்திரம் ஒற்றுமையாக இருந்தால் போதாது**

அன்புள்ள சகோதரர்களே! இன்று எங்களுக்கு மத்தியிலே எங்களுடைய தம்பி திவ்வியநாதன் அவர்கள் இருக்கின்றார். தமிழ் முஸ்லிம் ஒற்றுமையைப் பற்றி பேசினார். அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் ஒற்றுமையைப் பற்றிப் பேசினார் அவர்களுடைய கருத்துக்களை நான் ஏற்றுக் கொள்கின்றேன். அவருக்கும் முன்பு பேசிய சகோதரர் PLOT தலைவர் சித்தார்த்தன், அவ்வாறான விசயத்தைத் தான் பேசினார். நாங்கள் தமிழ் பேசும் வரை தமிழர்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதில் எந்த விதமான சந்தேகமுமில்லை. நமது கொள்கை தமிழரும் முஸ்லிமும் மாத்திரம் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று கருதிவிட முடியாது. இந்த நாட்டிலே அமைதி ஏற்பட வேண்டும் என்றால் முஸ்லிம்களும் தமிழர்களும் மாத்திரமல்ல, முஸ்லிம்களும் சிங்களவர்களும் சந்தோசமாக இருக்க வேண்டும். தமிழர்களும் முஸ்லிம்களும் மாத்திரமல்ல, தமிழர்களும் சிங்களவர்களும் இந்த நாட்டிலே சமத்துவமாக, சகோதரர்களாக, சமாதானமாக வாழ வேண்டும். அன்றுதான் இந்த நாட்டிலே சபீட்சம், அமைதி ஏற்படும் என்பது எங்களது நிலைப்பாடு. அதற்காக நாங்கள் உழைத்துக் கொண்டிருக்கின்றோம். தம்பி திவ்வியநாதன் அவர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். பொலன்னறுவையிலே முஸ்லிம்கள் நூற்றுக் கணக்கிலே மிலேச்சத்தனமாகக் கொல்லப்பட்ட போது, யார் எதைப் பேசுவார்கள் என்று தெரியாத நிலையிலே எல்லோரும் இருந்த போது அல்லாஹ்வுடைய உதவியால் இந்த நாட்டிலே ஒரு கறுப்பு வெள்ளிக்கிழமை ஒக்டோபர் 23யை நாங்கள் பிரகடனம் செய்தோம். அந்தக் கறுப்பு வெள்ளிக்கிழமை எவ்வளவு தூரம் தேசிய மட்டத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது, புலிகளின் படுகொலைகளை ஒழித்துக் கட்டியது என்பதை நீங்கள் மறந்து விட மாட்டீர்கள்.

அன்புள்ள சகோதரர்களே! தமிழர்களுடன் எவ்வளவு நேசமாக, அன்பாக, பண்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின்

தலைமைத்துவம் உள்ள போது ஏன் புலிகளை வெறுக்கின்றது? தமிழ் முஸ்லிம்ஐக்கியம் பற்றி பேசுகின்ற முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் புலிகளை அழிக்க வேண்டும்என்று கூறுகின்றது என்றால் இதைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பிரபாகரனின் கழுத்தை அறுக்கின்ற நேரத்திலே எனது உயிர் போகுமாக இருந்தால் நான் சந்தோசமாக மௌத்தாகுவேன் என்று நான் பாராளுமன்றத்தில் கூறி இருக்கின்றேன். புலிகள் என்ற எதிரிகள் தமிழர்கள் அல்ல. தமிழர்கள் எங்களது நண்பர்கள். புலிகள் எங்களது நண்பர்கள். அல்ல என்பதை கூறிக் கொள்ள விரும்புகின்றோம். இது தமிழர்களுக்கு எதிரான உறவுகளை பூண்டோடு ஒழிக்கின்ற ஒரு விஷயமுமல்ல.

**மனித வர்க்கம் முழுதும் இறைவனின் சிருஷ்ரயே!**

எனது அன்புக்குரிய சகோதரர் ஹிஸ்புல்லாஹ் எம். பி அவர்கள் இருக்கின்றார். கடந்த மாநாட்டிலே ஹிஸ்புல்லாஹ் எம். பி. என்பது ஒரு பிரச்சினைக்குரிய விஷயமாகும். கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதால் மாநாட்டுக்குள் வரமுடியாத நிலை இருந்தது. அல்லாஹ்வின் உதவியினால் அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டு மீண்டும் முதலில் இருந்ததை விடவும் நெருக்கமாக சகோதரர் ஹிஸ்புல்லாஹ் அவர்கள் இன்று இருக்கின்றார்கள் என்ற சந்தோஷமான செய்தியை உங்களுக்கு மத்தியிலே கூற விரும்புகின்றேன். இதை நான் ஏன் இங்கே சொல்கின்றேன் என்றால் தமிழ் முஸ்லிம் உறவுகள் பற்றிக் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் அவரைப் பற்றிக் கூற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. அண்மையிலே இன்றைக்கு 50 நாட்களுக்கு முன்பு இந்த மண்ணிலே பாகிஸ்தானைச் சேர்ந்த பெரியவர் செய்யது அப்துல் காதர் அவர்களின் காலடி இந்த மண்ணிலே பட்டது உங்களுக்குத் தெரியும். அவர்களை அழைத்துக் கொண்டு சகோதரர் ஹிஸ்புல்லாஹ் அவர்கள் சென்றார்கள். அன்று தனியாக ஒரு நாள் தமிழர்களை மாத்திரம் பார்க்க ஒதுக்கப்பட்டது. எத்தனையோ, இந்து, கிறிஸ்த்துவ, சகோதர சகோதரிகள் தங்களது நோய்களை கொண்டு வந்து காட்டி குணம்பெற்று சென்றிருக்கின்றார்கள். அன்று வந்த தமிழர்களுக்கு முஸ்லிம்கள் உதவி செய்தார்கள்! நோயாளர்களை தூக்கினார்கள், அவர்களுக்கு சாப்பாடு கொடுத்தார்கள், அவர்களுக்குத் தேவையான அத்தனையுமே செய்தார்கள். அடுத்த மாதம் அக்கரைப்பற்றுக்கு மௌலானா

அவர்களை கூட்டிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. ஒரு தனிநாள் தமிழ் சகோதர சகோதரிகளை பார்ப்பதற்காக ஒதுக்கப்பட்டது. இதை நான் ஏன் சொல்கின்றேன் என்றால் 86ம் ஆண்டுக்குப் பின்பு கல்முனைக்கும், அக்கரைப்பற்றுக்கும் இடையில் ஐந்து, ஆறு மணிக்குப் பின்பு எந்த விதமான வாகனமும் ஓடவில்லை. ஆனால் மதிப்பிற்குரிய மௌலானா வந்த நேரத்தில் 24 மணிநேரமும் பஸ் வண்டிகள் ஓடிக் கொண்டிருந்தன. தமிழர்களும், முஸ்லிம்களும் பக்கத்துப் பக்கத்திலே பாதையிலே படுத்துக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு இரவோடு இரவாக தமிழ் முஸ்லிம் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தது என்பதை நான் சொல்லி வைக்க விரும்புகின்றேன். இதனை முஸ்லிம் காங்கிரஸ் தலைமை செய்து காட்டியது

தமிழ் முஸ்லிம் உறவுகள் மாத்திரமல்ல, தமிழ் சிங்கள உறவுகளில் கூட நாங்கள் தொடர்ந்தும் ஒருவரை ஒருவர் பிரித்துக் கொண்டு பிரிந்து செல்வதனால் ஆகப்போவது என்ன? நாங்கள் மனித வர்க்கம், அல்லாஹ்வுடைய படைப்பு என்ற அடிப்படையில் ஒன்று கூடி நாம் சிந்திக்க வேண்டும். அல்லாஹுதஆலா குர்ஆனிலே சொல்கின்றான். ‘‘உங்களை கோத்திரங்களாக, குலங்களாக மாற்றி இருக்கின்றோம். நீங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக. நீங்கள் சண்டைபிடித்து. பிரிந்து விடக்கூடாது”. இன்று எத்தனைபேர் வடகிழக்கு பிரச்சினையில் முஸ்லிம் காங்கிரசுக்கு எதிரான கொள்கைகளை வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். வடக்கு கிழக்கு பிரச்சினையில் முஸ்லிம் காங்கிரசுக்கு நிலையான கொள்கை இல்லை என்று சொல்கின்றார்கள். முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை கைவிட்டு விட்டது என்று கூறுகின்றார்கள். நாங்கள் அதனைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை கைவிட்டு விட்டது என்று சொல்கின்றார்கள். வடகிழக்குப் பிரச்சினையைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்ற போது விடுதலைப் புலிகள் வேறு கோணத்திலே இருக்கின்றார்கள். சிங்களப் பேரினவாதக் கட்சிகள் வடக்கு கிழக்கு பிரிக்கப்படத்தான் வேண்டும் என்று சொல்கின்றன. சிங்களப் பேரினவாதக் கட்சிகள் இனவாதப் பிரச்சினை என்றார்கள். தமிழ் கட்சிகளெல்லாம் வட்டுக்கோட்டை தீர்மானத்தைப்பற்றித் தான் இன்று அவர்கள் பேசுவதெல்லாம் உள்ளது. முஸ்லிம்களுடைய பிரச்சினைகள் பற்றி தமிழர் விடுதலைக்

கூட்டணியுடன் பேசினோம். இதுவரையும் எந்தப் பத்திரிகைகளிலும் பார்த்திருக்க மாட்டீர்கள். மு. கா. தமிழ் கட்சிகளுடன் பேசியதில் தோல்வி அடைந்தது என்று பார்த்திருக்க மாட்டீர்கள். தமிழர்களுடன் பேசிய பேச்சு வார்த்தை தோல்வி அடைந்தது என்று சொல்ல நாங்கள் விரும்பவில்லை. விளக்கம் என்னவென்றால் எங்களுடைய பேச்சு வார்த்தை வெற்றியளிக்கத் தவறிவிட்டன. அந்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்க வேண்டும் என அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றோம். தமிழர்களுக்கு ஒரு செய்தியை சொல்கின்றேன். தமிழர்கள் கடந்த நாற்பது ஆண்டுகாலமாக பிரச்சினைப்படுகின்றார்கள். தமிழர்களுடைய பிரச்சினை தீர வேண்டும். சிங்களப் பேரினவாதம் தமிழர்களுடைய பிரச்சினைகளை தீர்க்கப்போவதில்லை. தமிழர்களுடைய பிரச்சினை தீரவேண்டும் என்றால் சிங்களப் பேரினவாதம் தமிழர்களுடைய பிரச்சினையை சரியாகக் கண்டு தீர்வு வைக்க வேண்டும் என்று சொல்கின்ற தமிழ் கட்சிகள் முஸ்லிம் சிறுபான்மை சமூகத்தின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்ளாமல், முஸ்லிம் சமூகத்தின் உணர்வுகளை புரிந்து கொள்ளாமல் இருந்தால் எப்படி சிங்கள பேரினவாதக் கட்சிகள் தமிழர்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் என்று நாங்கள் கேட்கின்றோம்.

எங்களுடைய அன்பிற்குரிய சகோதரர் சீனிவாசன் அவர்கள் ஒரு பிரேரணையைக் கொண்டு வந்தார். சமஷ்டி ஆட்சியில் தனியான கிழக்கு மாகாணம் என்ற கோரிக்கையைக் கொண்டு வந்தார். அதற்கு நாங்கள் ஆதரவளித்தோம் என்பது முஸ்லிம் மாகாணக் கோரிக்கையைக் கைவிட்டோம் என்பதல்ல. ஏனென்றால் சீனிவாசன் அவர்களுடைய தீர்மானம் இன்னும் முடிவாகவில்லை. பத்துப்பேர் பத்துக் கோரிக்கைகளைக் கொண்டு வந்தால் ஒன்றையும் பார்க்கமாட்டோம் என்று சொல்பவர்கள் நாங்களல்ல. அப்படியான கொள்கை எங்களுக்குத் தெரியாது. அதனை ஒரு கொள்கையாகவும் நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதேபோன்று தான் முஸ்லிம் சகோதரர்களே! முஸ்லிம் மாகாண சபைக்கோரிக்கை என்று நாங்கள் சொல்வது முஸ்லிம்களுடைய பாதுகாப்பைத்தான்.

வடகிழக்கு இணைந்த நிலையில் முஸ்லிம்களுடைய பாதுகாப்பை எவ்வாறு நிலைநிறுத்தலாம்? கிழக்கை பிரிக்கத்தான் வேண்டும் என்றால் தமிழர்களுக்கு அது விருப்பமென்றால் தமிழ்

கட்சிகளின் அடிப்படை அது என்றால் அதனை சீனிவாசன் விரும்புகின்றார் என்றால் TELO விரும்புகின்றது என்றால் தமிழர்கள் விரும்புகின்றார்கள் என்றால் தமிழர்கள் கிழக்கை பிரிக்க வேண்டும் என்று சொல்கின்றபோது கிழக்கை வடக்கோடு வைத்துக் கொண்டிரு என்று சொல்வதற்கு மு. காங்கிரசுக்கு எந்தவிதமான உரிமையுமில்லை. தமிழர்கள் அதைச் சொல்கிறார்கள். அதற்காக நாளைக்கு தமிழ்க் கட்சிகள் மாறி வடக்கும் கிழக்கும் இணையத்தான் வேண்டும் என்றால் அதற்காக நாங்கள் பேச்சு வார்த்தை நடாத்தி தீர்வு காண ஆயத்தமாக இருக்கின்றோம் என்பதை நான் தெட்டத்தெளிவாக கூறி வைக்க விரும்புகின்றேன். வடக்கும் கிழக்கும் இணைவதுதான் தீர்வு என்று தமிழ் கட்சிகள் கூறினால் அதற்கும் நாங்கள் தயார். கிழக்கைப் பிரிக்கத்தான் வேண்டும் என்றால் அதற்கும் நாங்கள் தயார். முஸ்லிம்கள் இருக்கின்றோம் என்பதற்காக தமிழர்களுடைய அபிலாசைகளை உடைப்பது எங்களது நோக்கமல்ல. சிங்களப் பேரினவாதக் கட்சிகள் என்ன சொல்கின்றது? கிழக்கைப் பிரிக்க வேண்டும் என்பது அவர்களது கொள்கை.

மு. கா. உடைய நிலைப்பாடு என்ன? கிழக்கிலிருக்கும் முஸ்லிம்களுக்கு மத்தியிலே சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தி, கிழக்கைப் பிரிப்பதற்கு கடைசிவரை நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்பது மு. கா. நிலைப்பாடாகும். முஸ்லிம்களை ஆயுதமாகப் பாவித்து, முஸ்லிம்கள் கிழக்கு மாகாணம் வடக்குடன் இருப்பதை விரும்பவில்லை. ஆகவே தமிழ் கட்சிகளே உங்களுடைய அபிலாசைகளை நிறைவேற்ற முடியவில்லை என்று சிங்களக் கட்சிகள் சொல்வதற்கு மு. கா. ஒரு காலமும் இடம் அளிக்க மாட்டாது. ஆகவே தான் பாராளுமன்றத்தில் நாங்கள் கூறியிருக்கின்றோம். இந்த கிழக்கு மாகாணம் எப்போது இணைக்கப்படும்? இதுதான் எங்களுடைய கேள்வி. ஒரு அவசரகாலச் சட்டத்தின் கீழ்தான் கிழக்கு வடக்குடன் இணைக்கப்படும். அவசரகாலச் சட்டத்தைப் பாவித்து மக்களிடம் கேட்காமல் ஜனநாயக பாரம்பரியங்களுக்கு விரோதமாக கிழக்கை வடக்குடன் இணைக்க முடியும் என்றால் ஏன் அதே அவசரகாலச் சட்டத்தைப் பாவித்து கிழக்கை வடக்குடன் இருந்து பிரிக்க முடியாது என்று நாங்கள் கேட்கின்றோம்.

இது தான் மு. கா. உடைய சிறந்த தலைமைத்துவம். நாங்கள் மக்களை வழிதவறியவர்களுடைய பாதையிலே நடந்து செல்லவிட மாட்டோம். ஸ்ரீ. ல. மு. கா. க்கு பெரியதொரு கடமைப்பாடு இருக்கின்றது. இன்று இங்கு வந்திருக்கின்ற மக்கள் வெள்ளம் வடகிழக்கிற்கு மாத்திரமானவர்களல்ல. வடகிழக்குக்கு வெளியே உள்ள முஸ்லிம்கள் இங்கு வந்திருக்கின்றார்கள். அவர்களும் மு.கா. தலைமைத்துவத்தில் நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள். நாங்கள் எடுக்கின்ற எந்தவொரு முடிவிலும் வடகிழக்கிலுள்ள முஸ்லிம்கள் பாதிக்கப்படக் கூடாது. வடகிழக்குக்கு வெளியே வாழுகின்ற முஸ்லிம்களையும் பாதிக்கவிடக் கூடாது என்பதில் நாங்கள் மிகவும் தெளிவாக இருக்கின்றோம். எனவே தான் வடகிழக்குக்கு வெளியே வாழுகின்ற முஸ்லிம்கள் பெரும்பான்மையான முஸ்லிம்கள் 2/3% முஸ்லிம்கள் இவர்களுடைய உணர்வுகளையும் அபிலாசைகளையும் பாதிக்கக் கூடிய வகையில் எந்தவிதமான நடவடிக்கைகளையும் முடிவுகளையும் எடுக்கமாட்டாது.

மு. கா. மிகவும் தெளிவாக இருக்கின்றது. தனக்காக எல்லாம் எதிர்பார்த்து நாடகம் நடிப்பவர்கள் அவர்களுக்கு எந்தவிதமான பதவிகளும் இல்லாமல் போனபோது கட்சியை விட்டுப் போய் விட்டார்கள். இன்னும் பலர் போக வேண்டி இருக்கின்றார்கள். இன்ஷா அல்லாஹ், அடுத்த மகாநாட்டிற்கு முன்னர் அவர்களை அனுப்பி விடுமாறு நாம் இறைவனிடம் பிரார்த்திப்போம். எங்களுடன் இருக்க விரும்புகின்றவர்கள், சேர இருப்பவர்கள் எதையும் எதிர்பார்க்காமல்தான் வரவேண்டும். எதையும் எதிர்பார்க்கக்கூடாது. அல்லாஹு தஆலாவுக்காக, ரஸுலுக்காக அவர்களுடைய அடியார்களுக்காக அவர்களை திருப்திப்படுத்துகின்ற நோக்கத்திற்காக மட்டும் வந்து சேர்பவர்களை மாத்திரம் வரவேற்கக் காத்திருக்கின்றோம்.

இந்த யாத்திரையை தொடர வேண்டும். எல்லாவற்றையும் இழந்தாலும் சரி. இங்கு சாஹுல் ஹமீத் ஹாஜியார் அவர்கள் இருக்கின்றார். கட்சி ஆரம்பித்த காலத்தில் மு. கா. தேவையில்லை என்று சிந்தித்தவர்களில் ஒருவர் அவர். என்னுடன் பேசினார்கள். நான் சொன்னேன் ஹாஜியார் சேர வேண்டாம்; எதையும் எதிர்பார்க்க வேண்டாம் என்று, அல்ஹம்துலில்லாஹ் எதையும் எதிர்பார்க்காமல் சந்தோசமாக வருவதற்கு தயாராக இருக்கின்றேன் என்று சொன்னார்கள். உங்களுக்கு அறிவிப்புச் செய்து கொண்டிருக்கும் என்னுடைய சகோதரர் அன்புமுகிடீன் இருக்கின்றார். மு. கா. தலைமைத்துவம் உருவாவதில் முதல் நின்றவர். கல்முனையிலே பிரச்சினைகள் நடந்து கொண்டிருந்த

போது இதே ஜனாதிபதியும் விடுதலைப் புலிகளும் பேச்சு வார்த்தைகள் நடாத்திக் கொண்டுமிருந்த போது நிமிர்ந்து நின்று உண்மைகளை கூறியதற்காக விடுதலைப் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டவர்தான் அந்த அன்புமுகிதீன் என்பவர். அவரும் எங்களுடன் இருக்கின்றார். அப்படித்தான் எங்களுடைய மூத்த துணைத்தலைவர் மருதூர்க் கனி அவர்கள் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு 3, 4 தினங்கள் திரும்பாமல் முகாமிலே இருந்து தப்பி வந்தவர். இப்படி ஒவ்வொருவரையும் எடுத்துச் சொல்லிக் கொண்டு போகலாம். இப்படி ஒவ்வொருவரும் இழப்புகளுக்குத் தயாரான நிலையிலே அதுவும் சாதாரண இழப்புக்கள் அல்ல, தங்களுடைய உயிர்களை இழப்பதற்கு தயாரான நிலைகளிலேதான் இந்த யாத்திரையைக் கொண்டு சென்று கொண்டிருக்கின்றோம். அன்புள்ள சகோதரர்களே! நீங்கள் சாப்பிடாமல் பசியுடன் இருக்கின்றீர்கள். நான் பேசிக் கொண்டிருக்கின்றேன். நான் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் 500/- கட்டவேண்டிய நிலையில் இந்த மண்டபத்திலே இருந்து கொண்டிருக்கின்றோம். இக்கட்டத்தில் ஒன்றைச் சொல்கின்றேன்.

இந்த நாட்டிலே மிகவிரைவில், மாகாணசபை, ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்கள் நடக்கலாம். எப்போது என்ன தேர்தல் நடந்தாலும் சரிதான். நாம் ஒன்றை மாத்திரம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் ஒரே தலைமைத்துவத்தின் கீழ் உறுதியாக இருப்போம் என்ற எண்ணத்துடன் நாங்கள் இந்த மண்டபத்தை விட்டு வெளியேற வேண்டும். ஏனென்றால் ஆரம்பத்தில் சொன்ன அதே விசயத்தை மீண்டும் சொல்ல விரும்புகின்றேன். அதுதான் நீங்கள் பிரிந்துவிட வேண்டாம். நீங்கள் பிரிந்து விட வேண்டாம், நீங்கள் பிரிந்து விடவேண்டாம். ஒரு தலைமைத்துவத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டும். அந்த தலைமைத்துவம் மசூறாவின் அடிப்படையில் பேசி என்ன முடிவு செய்தாலும் அதனை ஏற்றுக் கொள்ளக் கூடிய மனப்பக்குவம் உள்ளவர்களாக நாங்கள் இருக்க வேண்டும். அதுவரையும் எங்களுக்குள்ளே யாத்திரையில் இருப்பவர்களின் மனநிலைக்குள் இருக்கின்ற தூரங்களை அல்லாஹுத்தஆலா குறைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன். நாம் ஒருவரை ஒருவர் நேசிப்பதற்கு, பழகுவதற்கு, அன்பாக அணுகுவதற்கு எல்லாம் வல்ல அல்லாஹுத்தஆலா எங்களுக்கு உதவி புரிய வேண்டும் என்று நான் ஆசித்து உங்களிடம் இருந்து விடை பெறுகின்றேன்.

*அஸ்ஸலாமு அலைக்கும்.*

## 12வது தேசிய மாநாட்டு உரை
## 02 ஏப்ரல் 1994 கல்முனையில்

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.**

ஸ்ரீ. ல. மு. கா. என்ற ஒரு சிறிய அமைப்பை நாம் ஏற்படுத்தினோம். அந்த அமைப்பு வளர்ந்து 1986ம் ஆண்டு இந்த நாட்டிலே ஒரு அரசியல் கட்சியாக பிரகடனம் செய்யப்பட்டது. 1981ம் ஆண்டு நாம் நமது முதலாவது மாநாட்டை நடாத்தி அந்த மாநாட்டில் நமது கட்சியை பிரகடனம் செய்தோம். அன்றிலிருந்து இந்தக் கட்சி அல்லாஹ்வின் உதவியினால், அவரது தூதர் றசூல் (ஸல்) அவர்களின் அருளினால் ஒவ்வொரு நாளும் வளர்ந்து வந்திருக்கின்றது. இந்தக் கட்சி வளர்ந்தது என்று சொல்வதை விட இந்தக் கட்சியை நாம் வளர்த்து எடுத்திருக்கின்றோம். இன்று இந்த மாநாட்டிலே வந்து பேசிய இந்த நாடு முழுவதும் கௌரவிக்கின்ற தலைவர் மலையக மக்களின் முடிசூடா மன்னன் தொண்டமான் அவர்கள் கூறினார்கள், "மலையகத்திலே இன்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்றால் அந்த வெற்றியின் அடிப்படைக் காரணம் மலையகத்திலே வாழுகின்ற பெண்கள், பெண்களின் ஆதரவு" என்பதை அவர் இங்கு குறிப்பிட்டார். அல்ஹம்துலில்லாஹ், இந்த மண்டபம் ஏறத்தாழ 50% பெண்களால் தாய்மார்களால் நிறைந்து காணப்படுகின்றது. கொட்டும் வெயிலில் தாய்மார்கள் நின்று கொண்டு இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் என்றால் இதற்கு வேறு அர்த்தம் யாரும் கற்பிக்க முடியாது. நமது சமுதாயம் விழித்துக்கொண்டு விட்டது. அதைப்பற்றி நாம் பெருமைப்பட வேண்டும். குறிப்பாக கிழக்கு மண்ணிலே, கடந்த பிரதேச சபைத்தேர்தலிலே கிழக்கு மாகாணம் முழுவதும் விஜயம் செய்திருக்கின்றோம். அந்த விஜயத்தின் போது கண்ட உண்மை, நாம் தரிசித்த உண்மை ஒன்றுதான். முஸ்லிம் பெண்களுக்கு மத்தியிலே மரம் ஆழமாகப் பதிந்து விட்டது. இங்கு ஆயத்தங்கள் சரியாக நடைபெறுகின்றதா என்பதைப் பார்ப்பதற்காக கார்களைப் பிடித்துக் கொண்டு சம்மாந்துறை, நிந்தவூர், சாய்ந்தமருது, கல்முனைக்குடி, மருதமுனை, நற்பிட்டி முனையிலிருந்தும் பெண்கள் வந்து கொண்டிருந்ததை எங்களால் பார்க்கக்கூடியதாக

இருந்தது. இந்த எழுச்சி, அல்ஹம்துலில்லாஹ் இன்னும் வளர வேண்டும். அதன் மூலம் எமது சமுதாயம் இன்னும் தூர இலக்குகளுக்கு சென்றடைய வேண்டும் என்று நாம் பிரார்த்திக்க வேண்டும்.

கடந்த மாநாட்டிலே நாம் ஒரு மூத்த தலைவரை கௌரவப்படுத்தினோம். அல் ஹாஜ் காயிதே மில்லத் Dr. பதியுதீன் மஃமூத் அவர்களை நாங்கள் கண்ணியப்படுத்தினோம். அவர்களுடைய பேச்சிலே முஸ்லிம் பெண்களைப் பற்றிப் பேசும் போது அவர் என்ன சொன்னார் என்பதை தயவு செய்து நீங்கள் ஞாபகப்படுத்திப்பார்க்க வேண்டும். Dr. காயிதே மில்லத் பதியுதீன் மஃமூத் அவர்கள் அரசியலிலே உசாராக இருந்த காலத்திலும் சொல்வார், பெண்களுடைய கல்வியிலே நாம் கூடுதலான கவனத்தைச் செலுத்த வேண்டும். ஒரு ஆண் பிள்ளையை படிப்பிப்பது என்பது ஒரு தனி மனிதனை படிப்பிக்கின்ற விசயமாகும். ஒரு பெண் பிள்ளையை படிப்பிப்பது என்பது, ஒரு பெண் பிள்ளைக்கு கல்வி புகட்டுவது என்பது ஒரு சமூகத்துக்கு கல்வி புகட்டுவதாகும் என்று அவர் கூறுவார். அத்தகைய பெண்களால் நிறைந்து காணப்படுகின்ற இந்த மக்கள் வெள்ளத்தின் முன்பு அல்ஹம்துலில்லாஹ் ஸ்ரீ. ல. மு. கா. தலைவர் என்ற அடிப் படையில் கட்சியின் கொள்கைப் பேருரையை ஆற்றுகின்ற இந்த வாய்ப்பை இந்த வருடமும் தந்ததற்காக மீண்டும் ஒரு தடவை எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு நன்றி கூற கடமைப் பட்டிருக்கின்றேன்.

**முஸ்லிம் காங்கிரஸ் என்ற இயக்கம் அழியாது**

அன்புள்ள தாய்மார்களே, சகோதரிகளே! நான் என்னுடைய அரசியல் பேச்சுக்கு வருவதற்கு முன்பு ஒரு விசயத்தை ஞாபகம் ஊட்டுவது என்னுடைய கடமை என்று நினைக்கின்றேன். அரசியல் விவகாரங்களுக்குள் நாம் இணைந்து விட்டால் அந்த விசயம் அப்படியே மறைந்துவிடும். எனக்கு ஞாபகம் வருகின்றது. இந்தியாவிலே தாஜ்மஹால் என்ற உலக அதிசயம் ஒன்று இருக்கின்றது. எல்லோரும் தாஜ்மஹாலைப் பற்றியும் அதைக் கட்டி முடித்த சாஜஹானைப் பற்றியும் தான் பேசிக் கொண்டிருப்பார்கள். ஆனால் அந்த தாஜ்மகாலைக் கட்டிய கட்டிடக் கலைஞன் யார்? அந்தச் சிற்பி யார்? அந்த மேசன் யார் என்பதை

எல்லாம் நாம் சிந்திப்பதில்லை. நாங்கள் காலையிலே வந்தோம், அழகான மேடை அமைக்கப்பட்டிருக்கின்றது. வெற்றிகரமாக நமது மாநாடு நடந்து கொண்டிருக்கின்றது என்ற சந்தோசத்தில் இந்த மாநாட்டை இவ்வளவு சிறப்பாக நடத்துவதற்கு உழைத்தவர்கள், இராப்பகலாக கஷ்டப்பட்டவர்கள், நிதி உதவி அளித்தவர்கள் இவர்களை நான் கட்சித் தலைவர் என்ற முறையில் நினைவு கூற விரும்புகின்றேன். விஷேசமாக அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் மு. கா. மத்திய குழுக்கள் இந்த மாநாட்டுக்கான முழுப்பொறுப்பையும் எடுத்துக் கொண்டன. அதிலும் குறிப்பாக கல்முனை பிரதேச சபையைச் சேர்ந்த சகோதரர்கள், செயற் குழுக்கள், சம்மாந்துறை, நிந்தவூர், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பொத்துவிலைச் சேர்ந்த சகோதரர்கள் என்று அம்பாறை மாவட்டம் இந்த மகாநாட்டை நடத்துவதற்கென்ற முழுப்பொறுப்பையும் எடுத்து அவர்கள் இரவு பகலாக உழைத்ததன் காரணமாக இன்று முழு உலகிற்கும் முஸ்லிம் சமுதாயத்தின் சார்பில் கிழக்கிலங்கையில் வாழுகின்ற முஸ்லிம்களுடைய சார்பில் மாத்திரம் அல்லாமல் இந்த நாட்டிலே வாழுகின்ற 15 லட்சம் முஸ்லிம்களுடைய சார்பிலும் நாம் ஒரு செய்தியை சொல்லி வைக்க விரும்புகின்றோம். இன்று காலையிலிருந்து, மாலைவரை இந்த மேடையிலிருந்து நமது நடவடிக்கைகளை கவனித்துக் கொண்டிருந்த வெளிநாட்டுத் தூதுவர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லோரும் புதிய ஒரு பரிணாமத்துடன் சென்று கொண்டிருக்கிறார்கள். கிழக்கிலங்கை உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்பு பத்திரிகைகளில் அதிலும் விஷேசமாக "லேக்ஹவுஸ்" பத்திரிகையைப் பாவித்து மக்களுக்கு மத்தியிலே பொய்யான செய்திகளெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார்கள் பலர். மு.கா. என்ற கட்சி அழிந்துவிட்டது, மு. கா. மக்களுக்கு மத்தியிலே இல்லை, மு. காங்கிரஸை வேரோடு நாங்கள் பிடுங்கப் போகின்றோம் என்றெல்லாம் பத்திரிகைகளிலே எழுதிக் கொண்டிருந்தார்கள். சென்ற பாராளுமன்றத்திலிருந்து இங்கு வந்து பேசிய பல கட்சித் தலைவர்கள் பாராளுமன்றத்திலே என்னிடம் கேட்டிருக்கின்றார்கள். மு. கா. மரணித்து விட்டதாம், மெய்தானா? மு. கா. க்கு ஆதரவு இல்லையாம், மெய்தானா? என்றெல்லாம் அவர்கள் கேட்பார்கள். அவ்வளவு தூரம் நமக்கு எதிராக பொய்களையும் புரட்டுகளையும் இவர்கள் செய்து கொண்டிருந்தார்கள். அல்ஹம்துலில்லாஹ்! கிழக்கிலங்கையிலே நடைபெற்ற உள்ளுராட்சித் தேர்தலில் நாம் அவர்களுக்கெல்லாம்

சரியான ஒரு பாடத்தை படிப்பித்து புகட்டிய ஒரு சக்தி மிக்க மக்களாக, இறுக்கமாக மாறி இருக்கின்றோம் என்பதைப் பற்றி நாம் பெருமைப்பட வேண்டும்.

**அடக்கு முறைக்கு மத்தியிலும் ஐக்கியத்தையும் பலத்தையும் காட்டினோம்**

இந்த நாட்டிலே கடந்த 17 ஆண்டுகாலமாக ஐ. தே. க. ஆட்சி செய்து வந்தது. ஐ. தே. கட்சியில் அசைக்க முடியாத அமைச்சர்கள் வந்தால் அதிகாரிகள் வந்தால் அவர்கள் நினைப்பதை எல்லாம் செய்து விட முடியும். குடிகாரர்களையும் சாராயத்தையும் S.T.F. ஐயும் வைத்துக் கொண்டு தேர்தல்களை வெல்ல முடியும் என்ற நிலைப்பாடு மக்களுக்கு மத்தியிலே இருந்தது. நாங்கள் எப்படியாவது தேர்தலில் வெற்றி பெறுவோம் என்று அமைச்சர்கள் நினைத்துக் கொண்டிருந்த காலம் அது. பொலீஸ்காரரைக் கொண்டும், அடக்கு முறைகளைக் கொண்டும் மக்களுடைய சுதந்திரமான எண்ணங்களை வெளிப்படுத்த முடியாத காலத்திலே தான், அல்ஹம்துலில்லாஹ், நாம் உள்ளூராட்சித் தேர்தலுக் முகம் கொடுத்து வந்தோம். அதில் வெற்றி கண்டோம். கிழக்கு மண்ணிலே முஸ்லிம்கள் எல்லாம் மு. கா. பின்னால் தான் இருக்கின்றார்கள் என்ற செய்தியை நாம் மிகவும் தெளிவாக உலகம் முழுவதற்கும் சொல்லிய பின்பு இங்கு பன்னிரண்டாவது மாநாட்டிலே கலந்து கொண்டிருக்கின்றோம். அந்தப் பாதை பின்பற்றப்பட்ட காரணத்தினால் தென்னிலங்கையிலும் இன்று அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ. ல. மு. கா. தொடர்பாக இன்று அரசியல் கட்சித் தலைவர்கள், அரசியல் விஞ்ஞானிகள், அரசியல் விமர்சகர்கள் எல்லாம் ஏற்றுக் கொண்டிருக்கின்ற உண்மை என்னவென்றால் ஸ்ரீ. ல. மு. கா. தலைமைத்துவம் ஆட்சியைப் பிடிப்பதற்காக அவதிப்பட்டுக் கொண்டிருப்பவர்களல்ல. ஸ்ரீ. ல. சு. கட்சியைப் போன்றும் ஆட்சி எங்களுடைய கைகளை விட்டும் விலகிவிட்டதே, அதை எவ்வாறு நாங்கள் கைப்பற்றலாம் என்று சிந்திக்கின்றவர்கள் நாங்களல்ல. நமது நோக்கம், நமது இலட்சியங்கள் எல்லாம் மிகவும் புனிதமான மிகவும் நேர்மையான இலட்சியங்களும், நோக்கங்களுமாகும்.

மு. கா. அமைத்து இத்தகைய மாநாடுகளை நடாத்தி அத்தகைய மாநாடுகளின் மூலம் மு. கா. தலைவரை இந்நாட்டின்

ஜனாதிபதியாக ஆக்கிப்பார்க்க வேண்டும் என்று எங்களில் யாரும் கனவு காணவில்லை.

**மூன்றாவது பெரும் அரசியல் சக்தி நாமே!**

அன்புள்ள சகோதரர்களே! உள்ளூராட்சித் தேர்தலில் நாம் கலந்து கொண்டு இருக்கின்றோம். ஒரு வேளை இந்தப் பிரதேசத்தில் இன்னும் பல தேர்தல்கள் வரமுடியும். ஜனாதிபதித் தேர்தலை நாங்கள் எதிர் நோக்க முடியும். பாராளுமன்றம் கலைக்கப்படலாம். ஒரு பாராளுமன்றத் தேர்தல் வரலாம். மாகாண சபைத் தேர்தல்கள் எங்களை எதிர்நோக்கலாம். எந்தத் தேர்தல் வந்தாலும் சரிதான். நாங்கள் தனி மரங்களாக நின்றால் ஒரு போதும் தோப்பாக மாற முடியாது! பல மரங்கள் ஒன்று சேருகின்ற போதுதான் நாங்கள் தோப்பாக மாறமுடியும். பேரினவாதக் கட்சிகளின் சார்பில் வேட்பாளர்கள் போட்டியிட்டுக் கொண்டிருக்கின்ற போது, போட்டியிடாதவர்களாகவும் போஸ்டர் ஒட்டுகின்றவர்களாகவும் இருந்த ஒரு காலம் இருந்தது. இங்கிருந்து இந்த மேடையிலிருந்து சென்று கொண்டிருக்கின்ற அரசியல் தலைவர்களின் ஊடாக, பத்திரிகை நிருபர்களின் ஊடாக, வெளிநாட்டுத் தூதுவர்களின் ஊடாக மீண்டும் ஒரு தடவை இந்த மகாநாட்டின் மூலம் அந்த செய்தியை வெளிப்படுத்தி இருக்கின்றோம். இந்த நாட்டிலே இருக்கின்ற மூன்றாவது பெரும் சக்தி ஸ்ரீ. ல. மு. கா. என்பதை மீண்டும் ஒரு தடவை அல்ஹம்துலில்லாஹ், நிறைவேற்றியிருக்கின்றோம்.

தாய்மார்களே! சகோதரிகளே! இந்தக் கட்சியை நாம் காப்பாற்ற வேண்டும். மலையக மக்கள் தலைவர் திரு. தொண்டமான் அவர்கள் இங்கு வந்து பேசினார். அவரிடம் ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான வாக்குகள் இருக்கின்றன. ஆனால் இந்த நாட்டின் மூன்றாவது பெரிய மக்கள் சக்தி ஸ்ரீ. ல. மு. கா. என்று கூறினார். நாம் இந்தப் பன்னிரண்டு ஆண்டுப் போராட்ட வரலாற்றில் மிகவும் முக்கியமான ஆண்டாக இவ் ஆண்டைக் கருதுகின்றோம். அத்திவாரக்கற்களை நாட்டுவதற்கு நாம் இந்த ஆண்டைப் பயன்படுத்த இருக்கின்றோம். இவ்வளவு காலமும் நாங்கள் அடிக்கடி மேடைகளிலே சொல்லுவோம், ஆகாயத்திலே மிதந்து கொண்டிருக்கின்ற ஒரு கட்சியைப் போல்தான் ஸ்ரீ. ல. மு. கா. என்ற நமது கட்சி இருந்து

வந்தது. இப்போது நமது கட்சிக்கு அத்திவாரம் இடம் வேண்டிய ஒரு காலகட்டத்திலே நாம் வந்திருக்கின்றோம். எனவே தான் இந்த அத்திவாரத்தின் முனைப்பாக மூன்று விடயங்களை கட்சி நடைமுறைப்படுத்துவதற்கு நாங்கள் தீர்மானித்திருக்கின்றோம்.

**மூன்று முக்கிய விடயங்கள்**

முதலாவது விஷயம் எங்களுடைய தலைவர் தொண்டமான் அவர்கள் சொன்ன விஷயம். கட்டுப்பாடு. கட்டுப்பாடுள்ள ஒரு சமூகத்தை நாம் கட்டியெழுப்ப விரும்புகின்றோம். நம்முடைய வாக்குகளினால் நமக்கு வெற்றியில்லை. நாம் கூடுகின்ற கூட்டங்களினால் நமக்கு வெற்றியில்லை. நாம் கொண்டு வரும் மக்கள் பலத்தினால் நமக்கு வெற்றியில்லை. நமது வெற்றி நமது கட்சி என்று பெரிய சான்றாக உள்ளது. பல தலைவர்கள் எங்களைப் பார்த்து சொல்லிக் கொண்டு போகின்றார்கள். இந்த மண்டபத்திற்குள் இருக்கின்றவர்கள் மாத்திரமல்ல, இந்த மண்டபத்திற்கு வெளியே காத்துக் கொண்டு நமது செய்தியை, நமது இலட்சியத்தை புரிந்து கொள்வதற்காக திரண்டு நிற்கின்ற எங்களுடைய கட்டுப்பாட்டை மற்றைய கட்சித் தலைவர்கள் வியந்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். ஆகவே தான் தாய்மார்களே! சகோதரிகளே! இந்தக் கட்டுப்பாட்டை நாம் கட்டியெழுப்ப வேண்டும். இந்த வருடம் நாங்கள் சொல்லியிருக்கின்றோம். கட்டுப்பாடு உள்ள வருடம் எந்தவிதமான தயவு தாட்சண்யமும் கிடைக்காது யார் யாரெல்லாம் கட்சியை குழப்ப இருக்கின்றார்களோ, யார் யாரெல்லாம் கட்சிக்குள் பிரச்சினைகளை உண்டு பண்ண நினைக்கின்றார்களோ, கற்பனைகளைப் பண்ணுகிறார்களோ, பிறசக்திகளினது, பிற கட்சிகளின் ஆட்களாக வந்து கட்சிக்குள்ளே ஊடுருவிக் கொண்டு கட்சியை குழப்ப முனைகின்றார்களோ அவர்களுக்கு எந்தவிதத்திலும் எவ்வித இடமும் அளிக்காமல் கட்சியை நாம் மிகவும் கட்டுப்பாட்டுடன் கொண்டு செல்வதற்கு ஆயத்தமாக இருக்கின்ற வருடத்தில் தான் இந்த மாநாடு நடந்து கொண்டிருக்கின்றது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் ஸ்தாபன ரீதியாக மாற வேண்டும். ஆகவே தான் இங்கிருக்கின்ற ஒவ்வொரு சகோதரர்களும் ஒவ்வொரு ஆதரவாளர்களும் நீங்கள் எல்லோரும் கட்சியின் அங்கத்தவர்களாகச் சேர வேண்டும். அங்கத்துவ விண்ணப்பங்களை எழுதிக் கொடுக்க வேண்டும் என்ற நிலையில் தலைமைத்துவம்

மாத்திரம் தான் கட்சியை வழிநடத்திக் கொண்டு போகின்றது என்ற நிலை மாறவேண்டும்.

இந்த மேடையிலே மக்கள் பிரதிநிதிகள் இருக்கின்றார்கள். மு. கா. சிந்தனையாளர்கள் இருக்கின்றார்கள். இன்று இந்த மேடையிலே பேசிய பேச்சாளர்களைப் பாருங்கள். ஒரு காலத்தில் தமிழர்களுக்கென்று ஒரே ஒரு அரசியல் கட்சி மாத்திரம் தான் இருந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி மாத்திரம்தான் அது. இன்று தமிழர்களுக்கு மத்தியில் எத்தனையோ கட்சிகள் வந்துள்ளன. காரணமென்னவென்றால் ஸ்ரீலங்கா நிருவாக அரசியலில் பேரினத்துவம் காரணமாக எதையும் அடைய முடியாது என்ற ஒரு நம்பிக்கை வேரூன்றி இருந்ததன் காரணமாக தமிழர்களுக்கு மத்தியிலே இருந்து ஆயுதம் தூக்கி, தூக்குகின்ற குழுக்கள் புறப்பட்டதை நாங்கள் இந்த வருடத்திலே பார்க்கின்றோம். அந்த ஆயுதக் குழுக்கள், ஆயுதங்களுக்குள்ளே இருந்துவிட்டு மீண்டும் ஜனநாயகத்திற்குள்ளே வருவதை, வருவதற்காக தத்தளித்துக் கொண்டு இருக்கின்றன. வடகிழக்கின் அரசியல் கட்சிகளைப் பற்றி உங்களுக்குத் தெரியும். சில ஆயுதம் தூக்கிய கட்சிகளுடன் முஸ்லிம்கள் இணைந்து கொண்டு செயல்பட்டனர். முஸ்லிம் வாலிபர்கள் வடகிழக்கிலே வாழுகின்ற முஸ்லிம்கள் ஆயுதம் தூக்கிய தமிழர்களுடன் சேர்ந்து பிழையான வழியில் போனபோது அவர்களை ஆயுதங்களை நெருங்காமல் செய்ததில் நாம் சரியான வெற்றி அடைந்து இருக்கின்றோம் என்றால் நமது பாதையிலே நாம் முன்னேறி வந்திருக்கின்றோம் என்றால், நமது இலட்சியக் கம்பத்தை நோக்கி நாம் ஒவ்வொரு நாளும் மேலதிகமான அடிகளை எடுத்துக் கொண்டு வருகின்றோம் என்றால் அதற்குக் காரணம் தலைமைத்துவத்தில் இருக்கின்ற உறுதி. தலைமைத்துவத்தையும் பார்த்து யாரும் எதையும் சொல்லுவதற்கு இடம் கொடுக்காத நிலையில் தான் தலைமைத்துவம் இதுவரையும் இருந்து வந்திருக்கின்றது. அதுதான் நமது பலமாகும். இதை நாம் மறந்துவிடக் கூடாது.

**பதவியை தூக்கி எறிந்தோம்!**

தேர்தலிலே எத்தனையோ விசயங்களைப் பற்றி எங்களை விமர்சித்தார்கள். என்ன என்ன விசயங்களை எல்லாம் சொன்னார்கள். எத்தனையோ பொய் மூட்டைகளை அவிழ்த்து விட்டார்கள். இந்த பொய் மூட்டைகளுக்கு நாங்கள் முகங்

கொடுத்தோமா? இல்லையா? எங்களைப் பார்த்து ஆயிரக் கணக்கான கேள்விகளைக் கேட்டார்கள். அந்த ஆயிரக்கணக்கான கேள்விகளுக்கும் நாங்கள் முகம் கொடுத்தோமா? இல்லையா? இதை மாத்திரம் நான் உங்களிடம் கேட்க விரும்புகின்றேன். நாளைக்கு நான் இராஜினாமாச் செய்யவில்லை என்றால் உங்களுடைய தலைவர் சொன்னார். அவர் செய்யவில்லை இப்படித்தான் அவர். இதற்குப் பிறகு சொன்னாலும் செய்ய மாட்டார் என்று யாரும் சொன்னால் நீங்கள் இராஜினாமாச் செய்யக்கூடாது என்று சொல்கின்றவர்கள் என்ன மறுமொழி சொல்லப் போகின்றார்கள்? இந்த விசயத்தை நாங்கள் உணர்வு ரீதியாக பார்க்கக்கூடாது. அம்பாறை மாவட்டத்திலே நாங்கள் தேர்தலில் போட்டியிட்ட போது ஆறு பிரதேச சபைகளில் ஏதாவதொரு பிரதேச சபையில் மு. கா. தோற்கடிக்கப்படும் என்றால், அரசியலை விட்டு ஒதுங்குவேன் என்று நான் பிரகடனம் செய்திருந்தால் நீங்கள் வந்து என்னைப் பிடிக்கலாம். கட்சியை விட்டு ஒதுங்குவேன் என்று நான் சொல்லியிருந்தால் வேறு விசயம். நான் சொன்னது என்ன? பாராளுமன்ற பதவியை மாத்திரம் நான் இராஜினாமாச் செய்வேன் என்றுதான் சொல்லியிருக்கின்றேன். பாராளுமன்றப் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்பது எதற்காக?

அன்புள்ள சகோதரர்களே! சிந்தித்துப் பாருங்கள். இங்கு நிறையக் குழந்தைகள் இருக்கின்றார்கள்; பிள்ளைகள் இருக்கின்றார்கள். இந்தப் பிள்ளைகளை நாம் வளர்த்து வருகின்றோம், நோவு இல்லாமல் நோக வைக்காமல் வருத்தப் படாமல் பிள்ளைகளை நாங்கள் வளர்த்து வருகின்றோம், பிள்ளைக்கு காய்ச்சல் வந்தால் டொக்டரிடம் கொண்டு போகின்றோமா? இல்லையா? டொக்டர் சொல்கின்றார் பிள்ளைக்கு ஊசி போட வேண்டும்என்று. நீங்கள் ஊசி போடவேண்டாம் என்று சொல்வீர்களா? ஊசி போடுவது நோவை ஏற்படுத்தத்தான் செய்யும். ஊசி போடுவது நல்ல நோக்கத்திற்காக; நோவு ஏற்பட்டாலும் பரவாயில்லை, பிள்ளை சுகமாக வாழ வேண்டும் என்பதற்காக நாங்கள் விரும்பி அந்தப் பிள்ளைக்கு ஊசியை ஏற்றுகின்றோம். வீட்டிலே தாய்மார்கள், சகோதரிகள் இருக்கின்றீர்கள். வீட்டுத் தோட்டம் செய்வீர்கள், பூக்கண்டுகளை நாட்டி வைப்பீர்கள், மரங்கள் இருக்கின்றன. இந்த மரங்கள் வளர்ந்து கொண்டு வருகின்ற போது நீங்கள் கத்தரிக்கோல் எடுத்து மரத்தை வெட்டுவதில்லையா? கத்தரிக்கோல் எடுத்து மரத்தை வெட்டுவது மரத்தை வெட்டுவதற்காக அல்ல.

கத்தரிக்கோலால் மரத்தை வெட்டி விடுவது மரம் இன்னும் செழிப்பாக வளரவேண்டும் என்பதற்காக. இன்று முஸ்லிம் சமுதாயம், மு. கா. அதன் வளர்ச்சி அதன் போராட்டம் என்பதெல்லாம் மு. கா. தலைமைத்துவத்தின் மீது இந்த நாட்டின் தேசிய மட்டத்தில் இருக்கின்ற தலைவர்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையில்தான் இருக்கின்றது. அதை யாரும் மறுக்க முடியாது.

இன்று இந்த பன்னிரண்டாவது தேசிய மாநாட்டை இந்த நாட்டில் மிகவும் சோதனையான காலகட்டத்தில்தான் நடத்திக் கொண்டு இருக்கின்றோம். இந்த நாட்டிலே எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. வடகிழக்கு பிரச்சினைக்கு தீர்வு இல்லை. ஜனாதிபதி அமைப்பு இருக்கப்போகின்றதா? இல்லையா? என்பதைப் பற்றி தெளிவு இல்லை. ஜனாதிபதித் தேர்தலும் பாராளுமன்றத் தேர்தலும் ஒரே நாளில் நடக்கப்போகின்றதா? இல்லையா? என்று தெரியாமல் அரசியல் அமைப்பில் ஆயிரம் மாற்றங்கள் கொண்டு வரப்பட இருக்கின்றன. இவைகளை எல்லாம் வைத்துக் கொண்டு, இத்தகைய சூழ்நிலையில் மு. கா. தலைவர் இராஜினாமாச் செய்யப் போகின்றார். ஆதரவாளர்கள் என்ன சொல்கின்றார்கள்? இராஜினாமாச் செய்ய வேண்டாம். இராஜினாமாச் செய்யாமல் என்ன செய்வது? பாராளுமன்றத்திலே போய் பேசுவது, பாராளுமன்றத்திலே பேசுகின்ற போது அந்தப் பேச்சு கடந்த ஐந்து ஆண்டுகளாக வைத்திருந்த தாக்கத்தை அடுத்த சில மாதங்களுக்கு வைத்திருக்குமா? என்ற கேள்வியை உங்களுக்கு மத்தியில் நான் எழுப்ப விரும்புகின்றேன். பாராளுமன்றத்தில் வைத்து அவர்கள் கேட்டால் நீங்கள் இராஜினாமாச் செய்வது என்று சொன்னீர்களே! இராஜினாமாச் செய்யாமல் இப்போது என்ன வந்து புதிய கதைகளைச் சொல்கின்றீர்கள்? என்று சொன்னால் அந்தப் பேச்சுக்கு அதன்பின்பு அர்த்தம் இருக்குமா என்று நான் கேட்க விரும்புகின்றேன். தயவு செய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது என்னுடைய தனிப்பட்ட பிரச்சினையுமல்ல. என்மீது நீங்கள் தனிப்பட்ட ரீதியில் கொண்டிருக்கின்ற அன்பு சார்ந்த விசயமும் அல்ல. இது நமது சமுதாயத்தின் விடுதலைப் போராட்டத்தை நமது சமுதாயம் எதிர்காலத்திலே எதிர்நோக்க வேண்டிய புதிய பிரச்சினைகளுக்கு நாங்கள் தீர்வு காண வேண்டிய காலகட்டத்தில் அந்தத் தலைமைத்துவத்தின் வாய்ச்சொல் அப்பழுக்கற்றதாக இருக்க வேண்டும்.

*அஸ்ஸலாமு அலைக்கும்.*

## 13வது மாநாட்டு உரை

## 02 ஏப்ரல் 1995 சுகததாஸ அரங்கில்

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.**

"நஹ்மதுஹு வனுஸல்லி அலா றஸூலிஹில் கரீம். வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ஸையிதுனா அஷ்ர·.புல் கரீம். வஆலா ஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன். அம்மாபஹ்த்."

கண்ணியத்துக்குரிய உலமாப் பெருமக்களே! ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் போராளிகளே! ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர்களே! நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும், வரஹ்மத்துல்லாஹி வபரகாதுஹு.

அல்ஹம்துலில்லாஹ், நாங்கள் மீண்டும் ஒரு புதிய அடியை இன்று எடுத்து வைக்கின்றோம். இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் மட்டும் அல்ல, நமது சமூகத்தின் அரசியல் வரலாற்றிலும் இன்று புதியதொரு அத்தியாயம் திறந்து வைக்கப்படுகின்றது என்றால், அது மிகையாக மாட்டாது. ஒரு அரசியல் கட்சி 13 ஆண்டுகள் பல சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும், பல சூழ்ச்சிகளுக்கும் மத்தியிலே நடைபோடுவது என்பது சாதாரணமான விடயமல்ல. கல்முனையில் நடைபெற்ற 12ஆவது மாநாட்டை உங்களுடைய ஞாபகத்துக்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன். இன்று நாங்கள் எல்லோரும் மகிழ்ச்சியாக 13வது மாநாட்டைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரை ஒவ்வொரு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுடைய தேசிய மாநாடும் முஸ்லிம்களுடைய வெற்றி விழாவாக மாறிக் கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையில் இன்று இலங்கை முஸ்லிம் சமுதாயம் அரசியல் வானிலே ஒரு புதிய பெருநாளைக் கொண்டாடிக் கொண்டிருப்பதை நாம் எல்லோரும் 'நாரே தக்பீர், அல்லாஹு அக்பர்' என்று சொல்லி முழங்க வேண்டியவர்களாக இருக்கிறோம். பன்னிரண்டாவது மாநாடு - அந்த மாநாடு தான் இலங்கை முஸ்லிம்களுடைய அரசியல் வரலாற்றை மாற்றியமைக்கக் கூடிய ஒரு மாநாடாக மாறியது என்பதை யாரும் மறுக்க முடியாது.

எங்களுடைய கண்ணியத்துக்குரிய தலைவர் காயிதே மில்லத் கலாநிதி அல்- ஹாஜ் பதியுத்தீன் ம·.மூத் அவர்கள் பிரதம விருந்தினராக வந்து அந்த மாநாட்டைச் சிறப்பித்தார்கள். அந்த

மாநாட்டின் போது நாம் எதிர்க் கட்சியிலே இருந்தோம். அது மட்டுமல்ல அந்த மாநாட்டின் போது முஸ்லிம் காங்கிரஸுடைய தலைமைத்துவத்தையும், முஸ்லிம் காங்கிரஸுடைய போராளிகளின் பொறுமையையும் சோதிக்க வேண்டிய பல முக்கியமான பிரச்சினைகளை நாங்கள் எதிர் நோக்கினோம்.

12வது மாநாட்டுக்கு முன்பு, கிழக்கு மண்ணிலே நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல்களின் போதும், அம்பாறை மாவட்டத்திலே இருக்கின்ற 6 பிரதேச சபை தேர்தல்களில், 6 முஸ்லிம் பெரும்பான்மை பிரதேசங்களிலும், ஏதாவது பிரதேச சபையிலே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோற்கப்படுமாக இருந்தால், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் தமது பதவியை இராஜினாமாச் செய்வார் என்று நாங்கள் எடுத்துக் கொண்ட சபதத்தை நிறைவேற்றுவதா? இல்லையா? என்ற கேள்விகள் சூழ்ந்திருந்த ஒரு சூழ்நிலையில்தான் நாங்கள் 12வது மகாநாட்டை கொண்டாடினோம். அந்த மகா நாட்டின் போது எங்களுடைய தோழர்கள் எங்களுடைய போராளிகளெல்லாம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இராஜினாமாச் செய்யக்கூடாது. நாங்கள் வாக்களித்தாலும் பரவாயில்லை, அந்த வாக்கை மீறுவதற்கு நிறையக் காரணிகள் இருக்கின்றன. அந்தக் காரணிகளை முன் வைத்து நாங்கள் கொடுத்த வாக்கை மீறாமல் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் எங்களில் பல சகோதரர்கள் கட்சியின் மீதும், தலைமைத்துவத்தின் மீதும் இருக்கின்ற அன்பு காரணமாக எங்களை வற்புறுத்திய சூழ்நிலையில் தான், 12வது மாநாட்டை கல்முனையில் நடத்திக் காட்டினோம்.

அப்போது அந்த மாநாட்டிலே நீங்கள் எல்லோரும் இந்த நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வந்து கூடி நின்று சிறப்பித்தீர்கள். பதவியை தூக்கி எறிந்தோம்! எங்களுடைய போராட்டத்தின் உயிர், எங்களுடைய வாக்கு நாணயமாகும். எங்களுடைய போராட்டத்தின் உயிர் நாங்கள் சொல்லுவதை நாங்கள் செய்தாக வேண்டும் என்று நாங்கள் சூளுரைத்ததன் காரணமாக நாங்கள் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டும் என்று தலைமைத்துவம் எடுத்துச் சொன்னபோது அதற்குப் பக்கபலமாக இருந்து நீங்கள் எல்லோரும் அந்த ஆதரவைத் தந்ததன் காரணமாகத் தான் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற பதவியைத்

தூக்கி வீசக்கூடிய ஒரு சந்தர்ப்பம் இந்தப் பாராளுமன்ற வரலாற்றில் ஏற்பட்டது. அந்த சந்தர்ப்பம்தான் பாராளுமன்றப் பதவிகள் எங்களுக்கு முக்கியத்துவமல்ல. நாங்கள் பாராளுமன்றப் பதவிகளை தூக்கி வீசிவிட்டு இந்த நாட்டின் இந்த மக்களுடைய போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு தயாராக இருக்கின்றோம் என்று நாங்கள் முழங்குவதற்குக் காரணமாக இருந்தது, அந்த 12வது மாநாடு என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

அந்தப் பின்னணியில் தான் இன்று 13வது மாநாட்டிலே நாங்கள் இருந்து கொண்டிருக்கின்றோம். 12வது மாநாட்டை நடாத்திக் கொண்டிருந்த போது நாங்கள் எதிர்க் கட்சியிலே இருந்தோம். 13வது மகாநாடு நடைபெறுகின்றது, நாங்கள் இன்று அரசாங்கத்திலே இருக்கின்றோம். இந்த மேடையில் வைத்து இங்கே குழுமியிருக்கின்ற முஸ்லிம் காங்கிரஸ் போராளிகள் என்ற மக்கள் வெள்ளத்தின் முன்பு அவர்களைச் சாட்சியமாக வைத்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூற விரும்புகின்றது. நாங்கள் பிரகடனம் செய்ய விரும்புகிறோம். தமது மக்களுடைய அபிலாஷைகளை எடுத்துச் சொல்லுவதற்காக நாங்கள் எவ்வாறு பாராளுமன்றப் பதவிகளைத் தூக்கி வீசினோமோ அதே போன்று தான் எமது அமைச்சர், அரையமைச்சர் பதவிகளையும், நாங்கள் எப்போதும் தூக்கி வீசுவதற்கு ஆயத்தமாக இருக்கின்றோம் என்பதை நாங்கள் உங்களுக்கு உறுதியாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

அன்புள்ள சகோதரர்களே! தாய்மார்களே! 12வது மாநாட்டைச் சிந்திக்காமல் 13வது மாநாட்டைப் பற்றி நாங்கள் பேச முடியாது. 12ஆவது மாநாட்டுக்கும், 13ஆவது மாநாட்டுக்கும் இடைப்பட்ட அந்த நீண்ட தூரத்தை நாங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த இடைப்பட்ட காலத்தில் தான் இந்த நாட்டின் அரசியல் மாறியது. இந்த நாட்டின் வரலாறு மாறியது. இந்த வரலாறு மாற்றத்துக்குக் காரணம் அல்லாஹ்வின் உதவியினால் முஸ்லிம் மக்கள் ஒரு தலைமைத்துவத்தில் நம்பிக்கை வைத்து அந்த தலைமைத்துவத்தை பலப்படுத்துவதற்கு எப்போதும் தயாராக நின்றதுதான் அந்தக் காரணம் என்பதை எப்போதும் மறந்துவிட முடியாது.

**தேசிய மாநாட்டு முடிவுகளின் தீர்க்கதரிசனம்**

உங்களுக்குத் தெரியும், இதே சுகததாஸ உள்ளரங்கிலே இந்தப் புதிய கட்டிடங்கள் கட்டப்படுவதற்கு முன்பு 1988ஆம் ஆண்டு நடைபெற்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் 8வது தேசிய மாநாட்டை உங்களுடைய ஞாபகத்துக்குக் கொண்டு வரவிரும்புகின்றேன். அந்த மாநாட்டில் சில முக்கியமான முடிவுகளை எடுத்தோம். அந்த முடிவுதான் நாங்கள் எந்தக் காரணத்துக்காகவும் எங்களின் தனித்துவத்தை விட்டுக் கொடுக்கக்கூடாது. எங்களின் தனித்துவத்தை நாங்கள் ஒருபோதும் யாருக்காகவும் அர்ப்பணிப்பதற்கு தயாரற்றவர்கள் என்று நாங்கள் முழங்கியதன் காரணமாகவும், அந்த மாநாட்டிலே நாங்கள் எடுத்த முடிவின் காரணமும்தான் 1989ஆம் ஆண்டு இந்த நாட்டிலே நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலே வெற்றி பெறுவதற்கு முக்கிய காரணமாக இருந்தது. நாங்கள் அன்று எடுத்த தீர்மானம் முக்கியமானது என்பதை வரலாறு ஒரு போதும் மறக்கப்போவதில்லை. அது மட்டுமல்ல, இரண்டாவது தடவையாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தன்னுடைய தீர்மானத்தின் வலிமையை இந்த நாட்டுக்கு வலியுறுத்திக் காட்டியது. அந்த வலிமை தான் 1994ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட "சந்திரிக்கா அஷ்ரப்" என்ற ஒப்பந்தமாகும். அந்த ஒப்பந்தத்தை அடிப்படையாக வைத்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்து நாங்கள் ஒரு கூட்டுக் கட்சியாக மாறி, இந்த நாட்டிலே 17 ஆண்டு காலமாக அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த மக்களுடைய அபிலாசைகளுக்கு நாங்கள் முகங்கொடுக்க வேண்டும். அந்த மக்களுடைய அபிலாஷைகள் வெற்றி பெறுவதற்கு நாங்கள் உறுதியாக நின்று அவர்களைப் பலப்படுத்த வேண்டும். என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுத்த முடிவு தான் இந்த நாட்டிலே 17 வருடகாலமாக இருந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் அரசியலை மாற்றி, இந்த நாட்டிலே புதியதொரு யுகம் பிறப்பதற்கு காரணமாக இருந்தது என்பதை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும் இந்த நாட்டு மக்களும் எப்போதும் மறக்க மாட்டார்கள். இவற்றை நான் எதற்காக கூறிக் கொண்டிருக்கின்றேன் என்றால், நாங்கள் செய்து வருகின்ற இந்தத் தியாகங்கள் வீண்போகவில்லை. நாங்கள் சிந்திய

வியர்வையும், நாங்கள் சிந்திய கண்ணீரும், நாங்கள் சிந்திய செந்நீரும் வீண் போகவில்லை என்பதை நீங்கள் ஒருபோதும் மறந்து விடக் கூடாது.

இன்று இந்த மாநாட்டுக்குப் பல்லாயிரக்கணக்கிலே பல கஷ்டங்களுக்கு மத்தியிலே குறிப்பாகத் தாய்மார்கள் ஆயிரக்கணக்கிலே இங்கு வந்திருப்பதை காண்கின்றபோது நான் பெருமைப்படுகின்றேன். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவத்தில் அவர்களுக்கு இருக்கின்ற அந்த நம்பிக்கை இன்னுமின்னும் பலப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்க்கின்ற போது உள்ளம் புளகாங்கிதம் அடைகின்றது. இந்த வெற்றியின் பின்னால் பல தியாகங்கள் இருக்கின்றன. பின்னால் நிறைய செந்நீரும் இருந்து கொண்டிருக்கின்றது. இந்த மரத்தை நாங்கள் நாட்டி வளர்ப்பதற்காக நிறைய தியாகங்கள் செய்திருக்கிறோம். எத்தனையோ சகோதரர்கள் ஆயிரக்கணக்கிலே தங்களுடைய பொருட்களை, இல்லங்களை எல்லாவற்றையும் இழந்து, இனியும் இழப்பதற்கு எதுவுமில்லை என்ற நிலையிலே நமது சமுதாயம் தத்தளித்துக் கொண்டிருந்த போது தான், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் தாபனம் எமக்கு வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நம்முடைய சமுதாயம் ஒன்று கூடியது.

இந்த மாநாட்டிலே நான் பார்க்கின்றேன், எத்தனையோ தாய்மார்கள் வந்திருக்கிறார்கள். நாங்கள் இந்தப் போராட்டத்தை வளர்த்து எடுப்பதற்கு, இந்தக் கட்சி வளர்வதற்கு ஊட்டிய இரத்தத்துளிகளில் எங்களுடைய சகோதரர் சம்மாந்துறையைச் சேர்ந்த மன்ஸூர் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி உங்களுக்குத் தெரியும். அந்தச் சகோதரரின் தாயார் கூட இந்த மாநாட்டிலே வந்திருந்து எங்களுடைய இந்த மாநாட்டை சிறப்பித்துக் கொண்டிருப்பது எனக்கு மிகவும் சந்தோசத்தைத் தருகின்றது. தாய்மார்களே; விசேஷமாக இங்கு இருக்கின்ற உங்களில் பலர் பல நூற்றுக்கணக்கான மைல்கள் கஷ்டப்பட்டு இரவிரவாக பஸ்ஸிலே ஓடி வந்து பல கஷ்டங்களுக்கு மத்தியிலே வசதிகள் எதுவுமற்ற சூழ்நிலையில் நீங்கள் எல்லோரும் கொழும்புக்கு வந்து எங்களுடைய மகாநாட்டை, இந்த தலைமைத்துவத்தை, உங்களுடைய தலைமைத்துவத்தை, நீங்கள் இன்று பலப்படுத்தி இருக்கிறீர்கள். அது மட்டுமல்ல, இந்த மாநாட்டின் வெற்றி இன்ஷா அல்லாஹ் அடுத்த 14வது மாநாடு வரையும் இந்த நாட்டு முஸ்லிம்களுக்காக பேசுகின்ற ஒரேயொரு குரல் ஸ்ரீ லங்கா

முஸ்லிம் காங்கிரஸ் என்பதை நீங்கள் நிரூபித்துள்ளீர்கள். அந்த வெற்றி தான் அடுத்த ஓராண்டும் நாங்கள் செல்ல வேண்டிய பாதையை தீர்மானிக்க வேண்டிய ஒரு அம்சமாக இருக்கின்றது என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

இங்கே எங்களுடைய ஜனாதிபதி அவர்கள் வரவிற்கு முன்பு மாத்தளையைச் சேர்ந்த சகோதர, சகோதரிகள் வந்திருந்தார்கள். மாத்தளை ஆமினா மகா வித்தியாலயம்-ஒரு உதாரணத்துக்காகச் சொல்லுகின்றேன். அங்கே ஒரு பெண்கள் பாடசாலை உருவாக்கப்பட வேண்டும். அந்தப் பெண்கள் பாடசாலை தொடர்ந்தும் இருப்பதற்கு நிறைய இடம் வேண்டும் என்ற பிரச்சினை பற்றி நாங்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலே ஜனாதிபதியுடன் பேசியது உங்களுக்குத் தெரியும். அவ்வாறு நாங்கள் பேசியபோது அது பற்றி நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி அவர்கள் கூறி வந்தார்கள். இன்று இந்த சபையிலே வந்து என்னோடு இருக்கின்ற போது அங்கே இருக்கின்ற அந்தப் பதாகையைப் பார்த்ததன் பின்பு ஜனாதிபதி அவர்கள் சொன்னார்கள் ‘‘நான் உடனடியாக கட்டளையை விடுக்கின்றேன்”என்று சொல்லிவிட்டுத் தான் போயிருக்கிறார்கள். இந்த மனமாற்றங்கள் ஏற்படுவதற்குக் காரணம் நாங்கள் கேட்கின்ற எங்களுடைய குரலுக்குப் பின்னால் ஒரு சக்தி இருக்கிறது. இந்தக் குரல் வெறும் புஸ்வாணமல்ல. இந்தக் குரலின் பின்னால் முஸ்லிம் சமுதாயம் இருக்கின்றது என்ற நிலைப்பாட்டை நாங்கள் இந்த நாட்டிலே ஏற்படுத்த வேண்டும். இந்த நாட்டில் 15 இலட்சம் முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றோம். நமக்கென்று பிரச்சினைகள் இருக்கின்றன. நமக்கென்று கனவுகள் இருக்கின்றன. அந்தக் கனவுகளையும், அபிலாசைகளையும் நாம் எவ்வாறு அடையப் போகின்றோம் என்பது தான் இன்று எமக்கு முன்னிருக்கின்ற கேள்வியாகும்.

**முஸ்லிம் காங்கிரஸ் அடக்கப்பட்ட மக்களின் குரல்!**

ஒரு ஸ்தாபனத்தை உருவாக்கி அதன் மூலம் இந்த நாட்டிலே வாழுகின்ற முஸ்லிம் வாலிபர்களை பலிக்கடாக்களாக்குவதற்கு ஒரு புதிய சக்தி புறப்பட்டிருக்கின்றது. எங்களைப் பற்றி விஷமத்தனமாகவும் பொறுப்புணர்ச்சியற்ற வகையிலும் எத்தனையோ பிரச்சாரங்களை செய்து கொண்டிருந்த போது, அந்த பிரச்சாரங்களுக்கு எதிராக நாங்கள் மிகவும் பொறுமையோடு

போரிட்டு அடிமேல் அடிவைத்து காலடிகளை எடுத்துச் சென்றதன் காரணமாகத் தான் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பது ஒரு இனவாதக் கட்சியல்ல, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பது இந்நாட்டிலே வாழுகின்ற எல்லா சமூகங்களுடைய ஒரே குரலென்பதை இன்று நாம் நிரூபித்திருக்கின்றோம்.

என் அன்புள்ள சகோதரர்களே! தயவு செய்து எண்ணிப் பாருங்கள். இன்று இந்த மேடையிலே, இந்த நாட்டின் ஜனாதிபதி அவர்கள் வந்தார்கள். இந்த மேடையிலே இந்த நாட்டின் பிரதம அமைச்சரைக் கொண்டு வந்து வைத்திருந்தோம். இந்த மேடையிலே இந்த நாட்டின் எதிர்கால ஜனாதிபதியாக அல்லது எதிர் கால பிரதம மந்திரியாக வரக் கூடிய முன்னாள் பிரதம மந்திரி அவர்களைக் கொண்டு வந்து வைத்திருந்தோம். இதுதான் இந்த நாட்டு முஸ்லிம்கள் எடுத்துச் செல்ல வேண்டிய அரசியல் பாதை என்று நாங்கள் நம்புகிறோம். நாங்கள் யாருக்கும் அடிமைகள் அல்ல. எங்களை நாங்கள் யாருக்கும் எழுதிக் கொடுக்கவில்லை. நாங்கள் சுதந்திரமானவர்கள். சுதந்திரம் என்ற கீதத்தை நாங்கள் எப்போதும் பாடிக் கொண்டிருக்க விரும்புகின்றோம். அந்த கீதத்தோடு மரணிப்பதற்கும் நாங்கள் துடித்துக் கொண்டிருக்கின்றோம். எங்களுடைய கைகளையும், கால்களையும் யாரும் கட்டிப் போட முடியாது என்ற செய்தியை சொல்வதற்காகத் தான் இன்று இந்த மேடையிலே நாங்கள் இவ்வாறு கூறிக் கொண்டிருக்கின்றோம்.

**தளைகள் இல்லா தெளிவின் பாதை**

நாங்கள் சுதந்திரமானவர்கள், நாங்கள் சுதந்திரப் பறவைகள், சமாதானப் பறவைகள். எங்களுடைய கால்களும், கைகளும் கட்டுக்கள் எதுவும் இல்லாத வகையில் சுதந்திரமாக இருக்க வேண்டும். நீதி, நேர்மை என்ற அடிப்படையில், சரி-பிழைக்கு இடையிலே வேறுபாடுகள் தெரிந்த ஒரு சமுதாயமாக தெளிவாகப் பிரச்சினைகளைப் பார்க்கக்கூடிய ஒரு சமுதாயமாக, நாம் முன்னின்று செல்ல வேண்டும் என்பதற்காகத் தான் இந்தக் கட்சியை நாம் உருவாக்கி இருக்கின்றோம்.

1948ஆம் ஆண்டு இந்த நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்ததற்குப் பின்பு, முஸ்லிம் சமுதாயம் தனக்கென்ற ஒரு வழியின்றி இருந்தது. முஸ்லிம் சமுதாயத்திற்கு சொல்லிக் கொடுப்பதற்கு வேறு பலர்

இருந்தார்கள். முஸ்லிம் சமுதாயத்தை சிந்திக்க வைப்பதற்கு பல சிந்தனைத் தூண்டிகள் இருந்தன. இன்று அந்த தூண்டிகளை எல்லாம் விடுத்து, அந்தத் தூண்டிகளை எல்லாம் பொறுத்து, நாங்கள் சுயமாகச் சிந்திக்கக் கூடியவர்கள். எங்களுக்குச் சிந்திப்பதற்கு யாரும் சொல்லித் தர வேண்டியதில்லை. எங்களால் சிந்திக்க முடியும். எங்களுக்கென்று இலக்குகள் இருக்கின்றன. அந்த இலக்குகளை எவ்வாறு சென்றடைவதென்று எங்களுக்குத் தெரியும், என்பதைச் சொல்லுகின்ற செய்திதான் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுடைய மாநாடுகளும் என்பதில் நாம் தெளிவு காண வேண்டும்.

இன்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு இன்னுமொரு பெரியதொரு வெற்றி இருக்கின்றது. நாங்கள் ஒவ்வொரு மாநாட்டிலும் ஜனாதிபதியவர்களை அழைத்திருக்கிறோம். ஒவ்வொரு மாநாட்டிலும் எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்திருக்கிறோம். ஒவ்வொரு மாநாட்டிலும் பிரதம மந்திரி அவர்களை அழைத்திருக்கின்றோம். துரதிர்ஷ்டவசமாக போஸ்டர்களில் எல்லோருடைய போட்டோக்களும் இருக்கும். ஆனால் மாநாட்டுக்கு ஜனாதிபதி மாத்திரம்தான் வருவார். எதிர்க் கட்சித் தலைவி வர மாட்டார். பிரதம மந்திரி அவர்கள் வருவார். நாங்கள் எதிர்க் கட்சியில் இருக்கின்ற போது அந்த நிலை இருந்தது.

ஏன்? ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்றால் யூ. என். பி. காரர்கள். அவர்கள் யூ. என். பி. க்குப் பின்னால் வால் பிடிக்கிறவர்கள். ஆகவே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குப் பின்னால் செல்லக்கூடாது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாநாடுகளில் கலந்து கொள்ளக்கூடாது என்று பிழையாக வழி நடத்தப்பட்டதன் காரணமாக, பிழையாக நெறிப்படுத்தப்பட்டதன் காரணமாக துரதிஷ்டவசமாக அப்போதைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், இப்போதைய பிரதம மந்திரி அவர்களும் எங்களுடைய பெரும் மதிப்பிற்குரியவருமான கௌரவ ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களால் கலந்து கொள்ள முடியவில்லை. இன்று என்ன நடந்துள்ளது என்பதை எண்ணிப்பாருங்கள். வரலாறு மாறி இருக்கிறது. இந்த நாட்டின் பெரிய அரசியல் சக்திகள் அத்தனையையும் ஒரே மேடையில் கொண்டு வருவதில் 'அல் ஹம்துலில்லாஹ்' ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸாகிய நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். ஒரு இலட்சியத்துக்காகப் போராடுகின்ற

போது, ஒரு இலட்சியத்தின் பாதையிலே நாங்கள் நடைபோட்டுக் கொண்டு செல்லும் போது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எங்களுக்கு வெற்றிகள் கிடைக்க முடியாது. வெற்றிகள் வரும். தோல்விகள் வரலாம். ஆனால் வெற்றிகள் கிடைக்கின்ற போது நாங்கள் எவ்வாறு சந்தோசப்படுகின்றோமோ அதே சந்தோசத்துடன் தோல்விகள் எங்களைத் தொடர்ந்த போதெல்லாம் எங்களுடைய போராளிகள் எங்களுக்குப் பின்னால் இருந்தார்கள். தலைமைத்துவத்தில் இருந்த நம்பிக்கையை அவர்கள் ஒரு போதும் இழந்து விடவில்லை. ஆகவே தான், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தன்னுடைய போராட்டத்தில் மிகவும் காத்திரமாக வெற்றி பெறக்கூடிய ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அன்புள்ள சகோதரர்களே! 13வது மாநாட்டுக்கும், 14வது மாநாட்டுக்கும் இடையிலுள்ள அந்தப் பாதையைத் தயவு செய்து எண்ணிப் பாருங்கள். இன்று இந்த மாநாடு வரலாற்று முக்கியத்துவமான ஒரு சூழ்நிலையில் நடந்து கொண்டிருக்கின்றது.

இரண்டு முக்கியமான பிரச்சினைகளை நமது நாடு எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றது. ஒரு புறத்திலே அரசியல் அமைப்பு சாசனத்துக்குள், இந்த நாட்டின் அரசியல் அமைப்புக்குள் கொண்டு வரப்பட இருக்கின்ற அரசியல் மாற்றங்கள் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கின்ற இக்கால கட்டத்தில் நாம் இம்மாநாட்டைக் கூட்டிக் கொண்டிருக்கின்றோம். மறு புறத்திலே கடந்த பல ஆண்டு காலமாக வட- கிழக்கிலே ஓடிக் கொண்டிருக்கின்ற அந்த இரத்த வெள்ளத்தை எவ்வாறு நிறுத்த முடியும் என்பது பற்றிச் சிந்தித்து, சமாதானப் பேச்சு வார்த்தைகள் பற்றிப் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் நாம் இம்மாநாட்டை கூட்டிக் கொண்டிருக்கின்றோம்.

**எட்டுவீத அரசியல் பிரதிநிதித்துவம்**

இந்த விகிதாசார தேர்தல் முறையின் கீழ் முஸ்லிம் சமுதாயம் நன்மைகளைப் பெற்றிருக்கின்றதா? அல்லது விகிதாசார முறையின் கீழ் முஸ்லிம் சமுதாயம் நன்மைகளைப் பெறவில்லையா? என்பது விவாதத்துக்குரிய கேள்வியாக இருக்கின்றது. பழைய பாராளுமன்ற அமைப்பு, அதனால் எங்களுக்கு கூடுதலான நன்மைகள் கிடைத்தனவா? அல்லது புதிய பாராளுமன்ற அமைப்புக்குக் கீழ், பாராளுமன்றத்துக்கு அங்கத்தவர்களை தெரிவு செய்கின்ற புதிய முறையின் கீழ் முஸ்லிம்களுக்குக் கூடுதலான நன்மைகள்

இருக்கின்றனவா? என்பது கேள்விக்குரிய, விவாதத்துக்குரிய விசயமாக இருக்கின்றது. இப்படியான சந்தர்ப்பத்தில்தான் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு விசயத்தில் தெளிவாக இருக்கின்றோம். எந்தச் சட்டம் நல்லது என்பதல்ல கேள்வி. சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் இருந்த அமைப்பு நல்லதா? அல்லது 1978ஆம் ஆண்டில் ஜே. ஆர். ஜெயவர்தனா அவர்கள் கொண்டு வந்த அரசியல் அமைப்புச் சட்டம் நல்லதா என்பதல்ல கேள்வி. இந்த இரண்டு சட்டங்களிலும் இந்த இரண்டு விதிகளிலும் நன்மைகள் இருந்தன. தீமைகள் இருந்தன. ஆனால் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு மிகவும் தெளிவானது. சோல்பரி அரசியல் திட்டம் இந்த நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டபோது, அப்போது இருந்த இனவாரி தேர்தல் முறையை ஒழித்தார்கள். அந்த நேரத்தில் கூட சோல்பரி அரசியல் திட்டம் மிகவும் தெளிவாக தேசிய சமூகங்களுக்கு, பெரும்பான்மை சமூகங்களுக்குத்தான் இனவாரி ரீதியான பிரதிநிதித்துவம் சரியாக வரும். ஆனால் சிறுபான்மை சமூகங்களுக்கு விதிவிலக்குகள் வேண்டும் என்று சோல்பரி அரசியல் திட்டம் எழுதி வைத்தது. 1972ஆம் ஆண்டில் அரசியல் திட்டமும் அதே விதிவிலக்கில் தான் கொண்டு வரப்பட்டது.

இன்று நமது அரசாங்கம், நாம் பங்காளியாக இருக்கின்ற அரசாங்கம் பழைய சோல்பரி அரசியல் திட்டமுறைக்கும் ஜனாதிபதி அமைப்பிலே வந்த விகிதாசார தேர்தல் முறைக்கும் இடையில் ஒரு திருமணத்தை செய்யலாமா? என்று சிந்தித்துக் கொண்டிருக்கின்றது. இதில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு என்ன என்பது தான் கேள்வியாகும். நம்முடைய உயர் அதிபீடம், நம்முடைய செயற் குழு நாங்கள் இரவு பகலாக சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் ஒரு முடிவில் தெளிவாக இருக்கின்றோம். இந்த நாட்டில் யார் எந்த சட்டத்தைக்கொண்டு வந்தாலும் சரிதான், இந்த நாட்டிலே 8% முஸ்லிம்கள் வாழுகிறோம். பாராளுமன்றத்தில் ஆசனங்கள் கடைசியாக எண்ணப்படுகின்ற போது எந்த சட்டங்கள் வந்தாலும் சரிதான் தாய்மார்களுக்குத் தெரியும் நம்முடைய ஊரிலே சொல்லுகின்ற பழமொழி "யாரு குத்தியென்றாலும் அரிசாக வேண்டும்" என்று சொல்வார்கள். எந்த சட்டம் கொண்டு வந்தாலும் சரிதான் எட்டு விகித முஸ்லிம் பிரதிநிதித்துவம் இருக்கக் கூடிய வகையில் தான் சட்ட மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மிகவும் தெளிவான நிலைப்பாட்டுடன் இருக்கிறது.

அது மட்டுமல்ல முஸ்லிம்கள் இந்த நாட்டிலே 15 இலட்சமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த 15 இலட்சம் முஸ்லிம்களில் 1/3 பங்கு முஸ்லிம்கள் மாத்திரம் தான் வட-கிழக்கிலே வாழ்கின்றோம். பெரும்பான்மையான முஸ்லிம்கள் 2/3 பங்கினரும், வட- கிழக்குக்கு வெளியே வாழ்கின்றார்கள். ஆனால் வட- கிழக்கிலே வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு இருக்கின்ற அரசியல் பலம், வட-கிழக்குக்கு வெளியே வாழும் முஸ்லிம்களுக்கு இல்லை. வட- கிழக்கிலே இருக்கின்ற முஸ்லிம்களுக்குள்ள பாராளுமன்றத்துக்கு பிரதிநிதிகளை அனுப்பக் கூடிய வாய்ப்பும், வட- கிழக்குக்கு வெளியே இருக்கின்ற முஸ்லிம்களுக்கு இல்லாமல் இருக்கின்றது. ஆகவே தான் வட-கிழக்குக்கு வெளியே இருக்கின்ற சகோதர, சகோதரிகளின் பிரதிநிதித்துவத்தைப் பற்றி நாம் மிகவும் தெளிவாக சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். வட- கிழக்கில் மட்டுமல்ல, 1/3 பங்கு முஸ்லிம்களின் அரசியல் பலம் மாத்திரமல்ல, புதிய அரசியல் அமைப்புச் சட்டங்களின் கீழ் வடகிழக்குக்கு வெளியே 2/3 பங்காக இருக்கின்ற பெரும்பான்மை முஸ்லிம் சமூகத்துடைய அரசியல் பலமும் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்பதில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மிகவும் தெளிவாக இருக்கின்றதென்பதை உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

அன்புள்ள தாய்மார்களே! சகோதர, சகோதரிகளே! இந்த நாட்டிலே, ஜேர்மன் அரசியல் அமைப்பு முறையைக் கொண்டு வரவேண்டுமென்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். அது ஜேர்மன் அமைப்பாக இருந்தாலும் சரிதான், என்ன அமைப்பாக இருந்தாலும் சரிதான். எந்த அமைப்புக்கள் இந்த நாட்டிலே 40 ஆண்டு காலமாக முஸ்லிம் சமுதாயத்தை அரசியல் பகடைக் காய்களாக பாவிக்கப்பட்ட சமுதாயத்தை தலை நிமிர்ந்து தன்மானமிக்க ஒரு சமுதாயமாக மாற்றிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகளின் முக்கியத்துவத்தை இழக்கக் கூடிய, அந்தக் கட்சிகளின் முக்கியத்துவத்தை இல்லாமல் செய்யக் கூடிய எந்த விதமான சட்ட மாற்றங்களுக்கும் நாம் ஆதரவு வழங்கப்போவதில்லை என்பதை மிகவும் தெளிவாக குறிப்பிட விரும்புகின்றோம்.

நாங்கள் இருக்கின்ற நிலையை விடவும் நல்ல நிலையிலேயே மாற்றங்கள் வர வேண்டும். கூடுதலான வெற்றியை எமது சமுதாயம் பெற வேண்டும். அந்த அடிப்படையில் தான் நாம் இந்த நாட்டிலே நமது பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும். நமது பாதுகாப்பு

என்று பேசுகின்ற போது நாங்கள் சமத்துவத்தைப் பற்றி பேசுகின்றோம். சம நிலையைப் பற்றிப் பேசுகின்றோம். அரசியலில் சம அதிகார பங்கைப் பற்றி நாங்கள் பேசுகின்றோம். நாங்கள் இந்த நாட்டிலே வாழுகின்ற சமூகங்களோடும் சமாதானமாகவும், சந்தோசமாகவும் வாழ்வதற்கு விரும்பிய ஒரு சமூகமாக இருந்து கொண்டுமிருக்கின்றோம். இதுதான் எங்களுடைய செய்தியாகும். அந்தச் செய்தியை நாங்கள் இன்று எதிர்கால வரலாற்றிலே யதார்த்தமாக மாற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

**விடுதலைப் புலிகளின் ஏற்பு**

இந்தப் பின்னணியிலேயே தான் அரசாங்கம், நமது நாட்டின் ஜனாதிபதிக்கு எல்லோரும் ஆதரவு வழங்கி, அதிகாரத்துக்கு, ஏற்றி வைத்த எங்களுடைய மதிப்பிற்குரிய ஜனாதிபதி அவர்கள் விடுதலைப் புலிகளுடன் பேசிக் கொண்டிருக்கிறார்கள். விடுதலைப் புலிகள் முஸ்லிம்களைப் பற்றி எடுத்துக் கொண்டிருந்த நிலைப்பாடுகள் உங்களுக்கு நன்கு தெரியும். எந்த விடுதலைப் புலிகள் ஒரு காலத்தில் முஸ்லிம் என்ற தனித்துவம் இல்லை என்று சொன்னார்களோ, 'அல்ஹம்துலில்லாஹ்' இன்று அதே விடுதலைப் புலிகள் முஸ்லிம்கள் என்ற தனித்துவத்தைப் பகிரங்கமாக ஏற்றுக் கொண்டார்கள் என்றால் அதற்குக் காரணம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும், அதன் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்ட பல்லாயிரக் கணக்கான நமது போராளிகளும், அந்தத் தனித்துவத்தை பெறுவதற்காக, அடைவதற்காக அவர்கள் சிந்திய இரத்தமும், வியர்வையும், அவர்களுடைய இழப்புக்களும் தான் என்பதை நாம் ஒரு போதும் மறந்து விடக்கூடாது. இன்று விடுதலைப் புலிகள் கூட, முஸ்லிம்களுக்காகவும் பேசுகின்றவர்கள் தாங்கள் தான் என்று கூறிய விடுதலைப் புலிகள், வட- கிழக்கிலே வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள் எல்லோருக்குமாக பேசுகின்ற ஒரே ஒரு குரல் விடுதலைப் புலிகள் தான் என்று சொன்னவர்கள், இன்று வட- கிழக்கிலே வாழுகின்ற முஸ்லிம்களுக்காகப் பேசக் கூடிய மக்களால் அங்கீகாரம் பெற்ற ஒரே சக்தி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பதை விடுதலைப்புலிகள் ஏற்றுக் கொண்டி ருக்கிறார்கள்.

**அடிமைப்படுவதை நாம் ஏற்கோம்**

இந்தப் பின்னணியிலேதான் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு நாம், நமது பூரணமான ஆதரவை வழங்கி இருக்கின்றோம். எங்களுடைய ஜனாதிபதி அவர்களுக்கு சொல்லியிருக்கின்றோம். சமாதானத்தைக் கொண்டு வாருங்கள். சமாதானத்துக்கு எப்போதும் தயாராக இருக்கிறோம். ஆனால், எந்த சமாதான முயற்சியும் வட- கிழக்கிலே வாழப் போகின்ற, வாழுகின்ற மூன்று சமூகங்களையும் இன்னும் கூடிய சிநேகிதத்துடனும் அன்புடனும் சேர்க்கக் கூடிய வழியாக இருக்கவேண்டுமேயொழிய, சமாதானப் பேச்சு வார்த்தைகள் என்ற பெயரில் ஒரு சமூகத்தை இன்னுமொரு சமூகத்துக்கு அடிமைப்படுத்துவதை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு போதும் அனுமதிக்க மாட்டாது என்பதை நாம் மிகவும் தெளிவாக ஜனாதிபதியிடமும், அரசாங்கத்திடமும் கூறியிருக்கின்றோம். எவ்வாறு 40 ஆண்டுகளாக கஷ்டப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு இருந்த தமிழ் சமுதாயம் சிங்களப் பேரின வாத சக்திகளில் இருந்து விடுதலை பெறுவதற்கு துடித்துக் கொண்டிருக்கின்றதோ, அதே துடிப்புடன் தான் முஸ்லிம் சமுதாயமும் இருந்து கொண்டு இருக்கின்றது. எவ்வாறு வட- கிழக்கிலே தமிழ் பேசும் மக்களிடையே உரிமைக்கான போராட்டம் தந்தை செல்வநாயகம் காலத்திலிருந்து தொடர்ந்து வந்தனவோ அந்தப் போராட்டத்தின் இறுதி முடிவு தமிழ் பேசும் இரண்டு சமூகங்களையும் பேரினவாத சக்திகளிலிருந்து விடுவிக்கக்கூடியதாக வரவேண்டுமேயொழிய, தமிழ் பேசும் இரண்டு சமூகங்களில் ஒன்றை மட்டும் விடுவித்து இன்னுமொரு சமுதாயத்தை, முஸ்லிம் சமுதாயத்தை, தமிழ் பேசுகின்ற முஸ்லிம் சமுதாயத்தை, தமிழ் சமூகத்தின் கீழ் அடிமைப்படுத்தக் கூடிய எந்தவொரு தீர்வையும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ள மாட்டாது என்பதில் நாம் தெளிவாக இருக்கின்றோம்.

ஆகவே தான், அன்புள்ள தாய்மார்களே! சகோதர சகோதரிகளே! என்னுடைய வரவேற்புரையிலும் கூட எங்களுடைய ஜனாதிபதி அவர்களுக்கு நான் தெளிவாக்கி இருக்கிறேன். எங்களுடைய நாட்டு எதிர்க்கட்சித் தலைவருக்கும் நாம் இந்த விஷயத்தைத் தெளிவாக்கி இருக்கின்றோம். இதில் மிகவும் தெளிவாக இருக்கின்றோம். நாங்கள் ஜனாதிபதி அவர்களிடம் சொன்னோம். "உங்களுக்கு முன்பு இதே ஆசனத்தில் இருந்தவர்

திரு. ஜே. ஆர். ஜயவர்தனா அவர்கள், வட கிழக்கிலே ஒரு சமாதானம் வேண்டும். அச்சமாதானத்துக்காக எப்படி என்றாலும் சமாதானம் என்ற இலக்குகளுடன் அவசரப்பட்டு சமாதானத்துக்கு விலையாக முஸ்லிம் சமுதாயத்தை எழுதிக் கொடுத்ததன் காரணமாகத்தான் இலங்கை-இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்டது. அந்த சமாதானத்துக்கு விலை முஸ்லிம்களுடைய எதிர்காலம் என்று சொல்லப்பட்டது. கடைசியில் அந்த இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. விடுதலைப்புலிகளும் ஏற்றுக் கொள்ளவில்லை.அவர்கள் அந்த இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை என்ன சொன்னார்கள்? தமிழர்களின் அடிமைச் சீட்டு என்று வர்ணித்தார்கள். இந்த இரண்டும் கெட்டான் நிலைதான் ஏற்படும். ஆகவே தான் அரசாங்கம் நினைவில் வைத்திருக்க வேண்டிய அம்சம், வெளிநாட்டு சக்திகள், சர்வதேச உலகம், மனதில் வைத்திருக்க வேண்டிய மிகவும் முக்கியமான அம்சம்; வட-கிழக்கிலே எந்தவொரு சமாதானமும் முஸ்லிம்களுடைய ஆதரவு இல்லாமல் ஏற்பட முடியாது என்பதைச் சொல்லியிருக்கின்றோம். முஸ்லிம்களின் தனித்துவமும், கௌரவமும், தன்மானமும் மதிக்கப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் கௌரவிக்கப்பட வேண்டும். அவர்கள் யாருக்கும் அடிமைகள் அல்ல. தமிழர்களும், முஸ்லிம்களும், சிங்களவர்களுக்கு அடிமைகள் அல்ல. எல்லோரும் சமத்துவமான சமூகத்தவர்கள் என்ற அடிப்படையில் மாத்திரம் தான் இந்த நாட்டிலே தேசிய ஐக்கியத்தை எங்களால் ஏற்படுத்த முடியும். இங்கு வட- கிழக்கு சமாதானத்தைப் பற்றி பேசுகின்ற போது வடக்கிலிருந்து விரட்டப்பட்டு இன்று அகதி முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பல்லாயிரக் கணக்கான எங்கள் உடன் பிறப்புக்கள் பற்றி நாம் சிந்திக்காமல் இருக்க முடியாது.

**வடக்கு முஸ்லிம்கள் முஸ்லிம் காங்கிரஸின் சொத்து**

நான் மிகவும் சந்தோஷப்படுகின்றேன். இன்று தமிழ் சகோதரர்கள், விடுதலைப் புலிகள் உட்பட வடக்கிலிருந்து முஸ்லிம்களை விரட்டியது தவறு என்பதை ஏற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையிலே, நாம் சந்தோசப்படுகிறோம், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அந்த மர நிழலில் நின்று கொண்டு நாங்கள் பார்க்கின்ற போது, அவர்கள் தங்களுடைய தவறை, அந்த மரம் வளர்ந்து கொண்டு போகப் போக அவர்களுடைய தவறுகளையும் அவர்கள் கூடுதலாக உணர்ந்தவர்களாக இருக்கின்றார்கள். அவர்களும்

கூறுகின்றார்கள். தலைவர் சிவசிதம்பரம் இந்த மேடையில் வைத்துச் சொன்னார். "என்று யாழ்ப்பாணத்தில் இருந்து விரட்டப்பட்ட முஸ்லிம் மக்கள் மீண்டும் அந்த மண்ணுக்குப் போவார்களோ அதற்குப் பின்னர் தான் நான் போவேன்" என்று அவர் சூளுரைத்தார். முஸ்லிம் காங்கிரஸ் சொல்வது அதைத்தான். வடக்கிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம்களுடைய சொந்த மண் வேறு எங்குமல்ல, அது வடக்கிலேதான் இருக்கின்றதென்பதை நான் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்த இடத்தை நாங்கள் மீண்டும் சென்றடைய வேண்டும். அந்த மண்ணிலே நாங்கள் மீண்டும் போய் வாழ வேண்டும். அந்த மண்ணை கைகளால் எடுத்து அதைப் பார்த்து நாங்கள் சந்தோசப்பட வேண்டும். நாங்கள் இழந்த இழப்புக்களை நாங்கள் மீண்டும் பெற வேண்டும் என்பதில் நாம் மிகவும் தெளிவாக இருக்கிறோம். அது மட்டுமல்ல, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்வரும் ஆண்டில் நமது பாதையில் மிகவும் கூடுதலான பணிகளை ஆற்றக் கூடியதாக இருக்கும்.

**உரிமைகள் வேண்டும்**

நாம் நமது சமுதாயத்தில் இருக்கின்ற கல்விப் பிரச்சினையில் கூடுதலான அக்கறை காட்ட வேண்டும். மத்திய மாகாணத்தில் கல்வி தேய்ந்து கொண்டு போகின்றது. மத்திய மாகாணத்திலே முஸ்லிம்களுக்கென்று விஷேசமாக முஸ்லிம் ஆண்களுக்கென்று ஒரு பாடசாலை கூட, இல்லாத நிலையில் நாங்கள் இருக்கின்றோம். மாத்தளையில் ஆமினா வித்தியாலயம், கொழும்புத் தெற்கிலே கூட கொழும்பிலே பட்டணத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருந்த போதிலும் கூட நாங்கள், எங்களுடைய சமுதாயம் கொழும்பிலே உரிய பயனைப் பெற்றிருக்கின்றதா?

கொழும்பு பாடசாலைகளிலிருந்து எத்தனை மாணவர்கள் எத்தனை மாணவிகள், பல்கலைக்கழகங்களுக்குப் போயிருக் கின்றார்கள்? எத்தனை மாணவ மாணவிகள் டாக்டர்களாக, எஞ்சினியர்களாக வந்திருக்கிறார்கள்? என்பதைப் பற்றியெல்லாம் நாம் சிந்திக்க வேண்டும். ஆககேதான்,முஸ்லிம்களுடைய கல்விப் பிரச்சினைகளில், முஸ்லிம்களுடைய கலாசாரப் பாரம்பரியங்களைப் பாதுகாக்கின்ற பிரச்சனைகளில் முஸ்லிம் காங்கிரஸ் மிகவும் கவனத்துடன் தன்னுடைய போராட்டத்தை முன்னெடுத்துச்

செல்வதற்குக் காத்துக் கொண்டிருக்கிறது. அன்புள்ள சகோதர சகோதரிகளே! அது மட்டுமல்ல, நாங்கள் இந்த நாட்டிலே ஒரு தேசிய சிறுபான்மை சமூகமாக, 8% சமூகமாக இருந்து கொண்டிருக்கிறோம். இந்த 8% சமூகத்தின் உரிமைகள் என்ன? என்பதற்கு நாங்கள் வரையறை காண வேண்டும். இந்த 8% சமுதாயம் சலுகைகள் என்ற பட்டியலின் கீழ் வாழ முடியாது. எங்களுடைய உரிமைகள் என்ன என்பதற்கு நாங்கள் வரைவிலக்கணத்தைக் கொடுக்க வேண்டும். அந்த வரைவிலக்கணத்தின் பின்னே நாங்கள் செல்ல வேண்டும். அரசாங்கத் தொழில் வாய்ப்புக்களில் இன்று எத்தனை வீதம் முஸ்லிம்கள் இருக்கின்றார்கள்? 4% தான் இருக்கின்றார்கள். நாங்கள் புறக்கணிக்கப்பட்டு இருக்கின்றோம். 40 ஆண்டு காலமாக நாங்கள் புறக்கணிக்கப்பட்டவர்கள். நாங்கள் இழந்தவைகள் எல்லாவற்றையும் நாங்கள் மீண்டும்பெறுவதற்கு ஆயத்தமாக வேண்டும்.

பல்கலைக்கழகங்களிலே முஸ்லிம் வாலிபர்கள் இன்று பிரச்சினைப்படுகின்றனர். அவர்களுடைய பிரச்சினைகளுக்கு நாங்கள் முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இவ்வாறு எவ்வளவோ பிரச்சினைகளுக்கு அடுத்த ஒரு ஆண்டிலே நாம் முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

**சமாதானமெனும் சாத்விக மொழி**

ஆகவேதான் சகோதர சகோதரிகளே! இங்கு நிறைந்திருக்கின்ற எனது நெஞ்சத்தில் நிறைந்திருக்கின்ற முஸ்லிம் காங்கிரஸ் போராளிகளே! நான் உங்களிடம் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்வதெல்லாம் ஒன்றை மாத்திரம்தான். இவற்றையெல்லாம் நாம் செய்ய வேண்டும் என்பதில் நமது தலைமைத்துவம், நமது அரசியல் அதியுயர் பீடம்,நம்முடைய செயற் குழு இரவு பகலாக கண்விழித்து இந்த இலக்குகளை அடைவதற்கு இன்று முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். இந்த இலக்குகளை நாங்கள் அடைய வேண்டும். அடைய வேண்டுமென்றால் நமக்கிருக்கின்ற ஆயுதமென்ன? நாம் விடுதலைப் புலிகளைப் போன்று ஆயுதங்களை ஏந்திக் கொண்டு இந்த இலக்குகளை அடையப் போகின்றோமா? அல்லது ஆயுதங்கள் பேசாத ஒரு மொழியை நாங்கள் பேசப் போகின்றோமா? நாங்கள் சமாதான மொழியைப் பேசி எங்களுடைய வாக்கு வன்மையினால் எங்களுடைய

ஒற்றுமையினால், மற்றவர்களை மனம் மாற்றக் கூடிய எங்களுடைய வாக்குச் சாதுரியத்தினால் நாம் இவற்றை வென்றெடுக்கப் போகின்றோமா என்பது தான் கேள்வியாகும்.

இது வரையிலும் அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹுத்தஆலா நமது கட்சியைக் காப்பாற்றி வந்திருக்கின்றான். நம்முடைய ஒற்றுமையைப் பலப்படுத்தி வந்திருக்கின்றான். முஸ்லிம் காங்கிரஸின் கட்டளைகளை யாகத்தை கொண்டு எடுத்துச் செல்வதற்கும் அந்தக் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கும் எங்களுடைய போராளிகள் எப்போதும் தயாராக இருந்திருக்கின்றார்கள். ஆகவே தான் நான் ஒவ்வொரு மாநாட்டிலும் முஸ்லிம்களுக்கு மத்தியிலே விடுக்க இருக்கின்ற ஒரேயொரு செய்தி தான். இன்று மட்டுமல்ல நான் உயிருடன் இருந்து நான் இந்தக் கட்சியின் 30வது, 40வது மாநாடுகளை நடாத்தினாலும் அதே செய்தியைத்தான் நாங்கள் சொல்லப் போகின்றோம். நாங்கள் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். ஒற்றுமையைத் தவிர இந்த சமுதாயத்துக்கு வேறு வழி ஏதும் இருக்க முடியாது. நாங்கள் எங்களுக்குள்ளே கருத்து வேறுபாடு கொண்டு, நாங்கள் பிரிந்து நின்றோமென்றால் எங்களுடைய இலக்குகளை எங்களால் ஒரு போதும் அடையவே முடியாது.

**ஒற்றுமை என்பதே எமது பலம்!**

ஆகவே, உங்களிடம் நான் கெஞ்சிக் கேட்பதெல்லாம் நீங்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். தமது கட்சியைப் பலப்படுத்த வேண்டும் என்பதுதான். இன்ஷா அல்லாஹ் 13வது தேசிய மாநாட்டில் உங்களுக்கு நாம் இன்னுமொரு விசயத்தைக் கூற வேண்டியது எமது கடமை என்று நினைக்கின்றோம். இன்று இந்த மாநாட்டிலே நீங்கள் பார்த்தீர்கள். அரசியல் ரீதியாக எமது திறமைகள் இன்று மதிக்கப்பட்டுள்ளன. இந்த நாட்டிலே முஸ்லிம்களுக்கு மத்தியில், முஸ்லிம் சிறுபான்மை சமுதாயத்துக்கு மத்தியில் நிறைய திறமைகள் இருக்கின்றன. எங்களுடைய பெண்கள், எங்களுடைய சகோதர, சகோதரிகள், எங்களுடைய கலாசார விழுமியங்களில் நிறைந்த திறமையுடன் இருக்கின்றார்கள். இந்த திறமைகளை நாங்கள் வளர்த்தெடுக்க வேண்டும்.

அஷ்ரப் இருப்பார், அஷ்ரப் மரணித்து விடுவார். இங்கு இருக்கின்ற அரசியல் உயர் பீடம் இருக்கும். நாளை

இருக்கமாட்டாது. நாங்கள் எல்லோரும் மரணித்து விடுவோம். இன்று இருக்கின்ற இந்தத் தலைமுறையுடன் இந்தப் போராட்டம் முடிவடையக் கூடாது. ஆகவே தான் ஒரு தலைமுறை மறைகின்ற போது, இன்னுமொரு தலைமுறை அந்தப் புதிய நவீன சகாப்தத்தின் சவால்களுக்கு முகங் கொடுக்கக் கூடியவர்களாக, அந்த சவால்களை முகங் கொடுத்து அந்த சவால்களோடு நின்று போராடி, அந்த சவால்களுக்குரிய பொருத்தமான பதில்களைக் காணக் கூடிய ஒரு புதிய தலைமைத்துவம் ஒன்றை கட்டி எழுப்பி வளர்த்துக் காக்க வேண்டும். ஆகவேதான் முஸ்லிம் காங்கிரஸ் எம்முடைய இளைஞர்களுக்கு மத்தியில் அவர்களுடைய திறமைகளைக் கண்டு வளர்ப்பதற்காக, வருடத்தை மூன்றாகப் பிரிப்பதற்கு நாங்கள் முடிவெடுத்திருக்கின்றோம். முஸ்லிம் காங்கிரஸ் வருடம், பேராளர் மாநாடு என்றும், தேசிய மாநாடு என்றும் பிரிக்கப்படுகின்றது. மூன்றாவது பிரிவாக ஒரு கலாசார பெரு விழாவாக முஸ்லிம்களுக்கு மத்தியிலே தேசிய ரீதியாக நடத்தி முஸ்லிம் இளைஞர்களையும், புத்தி ஜீவிகளையும், திறமையுள்ளவர்களையும் இனம் கண்டு புதிய அரசியல் சவால்களுக்கு முகங் கொடுக்கக்கூடிய ஒரு புதிய சமூகத்தைக் கட்டி எழுப்புவதற்கு நீங்கள் எல்லோரும் கனவு காணுங்கள்! விரையுங்கள்! என்று கூறி, நாரே தக்பீர்! நாரே தக்பீர் ! நாரே தக்பீர்! என்று கூறி விடைபெறுகின்றேன்.

*அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு".*

# 14வது மாநாட்டு உரை

## 31 ஆகஸ்ட் 1996 சம்மாந்துறையில்

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.**

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு விழா எடுத்தது உங்களுடைய நினைவுக்கு இப்போது வந்து கொண்டிருக்கும். அதற்குப் பின்பு அல்ஹம்துலில்லாஹ். ஒரு வருடம் இந்தப் பாதையிலே நாம் நடமாடிக் கொண்டிருக்கின்றோம். இன்று சம்மாந்துறை என்ற இந்த சந்தியிலே எங்களுடைய விடுதலைப் பாதையில் ஒரு பெரிய வெளிச்ச வீட்டின் நிழலிலே நின்று கொண்டு நாம் இன்னும் நடந்து செல்ல வேண்டிய அந்த தூரத்தை ஒரு தடவை பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இந்த வெளிச்ச வீடு நம்முடைய விடுதலைப் பாதையில் கட்டப்படுகின்ற, அல்ஹம்துலில்லாஹ் கட்டி எழுப்பப்பட்டிருக்கின்ற வெற்றிகரமான வெளிச்ச வீடு என்பதனை இந்த மேடையிலே பிரகடனஞ் செய்ய விரும்புகின்றேன்.

அன்பிற்குரிய தாய்மார்களே! என்னுடைய இதயத்தை விடவும் நெருக்கமான போராளிகளே! நம்முடைய பாதை மிகவும் நீண்டதொரு பாதையாகும். அந்தப் பாதை நம்மால் மாத்திரம் நடந்து செல்லவேண்டிய பாதையல்ல. நாமும் நமக்குப் பின்னே பிறக்கின்ற, பிறக்க இருக்கின்ற நம்முடைய சந்ததிகளும் காலம் காலமாக காலடிகளை எடுத்துவைத்து நடந்து செல்ல வேண்டிய ஒரு பாதையைத் தான் இன்று நாம் சம்மாந்துறையில் இருந்து பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இன்ஷா அல்லாஹ், இந்த நாட்டிலே இன்னும் 1000 ஆண்டுகள் இந்தப் பாதையிலே நமது சமுதாயம், நமது பிற்சந்ததி நடமாட வேண்டி இருக்கலாம். அவை அத்தனைக்கும் அல்லாஹுத்தஆலாவின் உதவியும் அவனுடைய தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய நல்லாசிகளும் அவர்களுடைய கருணையும் அந்தக் கருணை மழையும் எங்கள் அனைவர் மீதும் பொழிய வேண்டும் என்று நான் பிரார்த்தித்துக் கொண்டிருக்கின்றேன். அன்புள்ள, சகோதரர்களே! அல்ஹம்துலில்லாஹ் மிகவும் சந்தோசமாக, வெற்றிகரமாக இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அவ்வாறு வெற்றியுடன் இந்த விழா முடிவடைய வேண்டுமென்று நாங்கள் எல்லோரும் பிரார்த்தித்த வண்ணம் இருந்து கொண்டிருக்கின்றோம்.

இன்று இந்த பிரதேசம், வடகிழக்கிலே பிரிக்கப்பட முடியாத ஒரு அம்சமாக இருக்கின்ற நம்முடைய பிரதேசத்தில் கூட, நாம்

வாழ்ந்த வாழ்கின்ற மண்ணில் கூட, நாம் பிறந்து வளர்ந்து வந்த இம்மண்ணிலே கூட, சுதந்திரமாக உங்களோடு மிகவும் அண்மித்து நின்று இந்த அரங்கிலே பேச முடியாத நிலைக்கு இன்று பாதுகாப்புச் சூழல்கள் முடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நாட்டிலே வாழுகின்ற முஸ்லிம் சமுதாயம் தன்மானத்துடன் தலை நிமிர்ந்து வாழவேண்டும் என்ற உணர்வுகளுடன் தக்பீர் முழக்கங்களை எழுப்ப வேண்டிய ஒரு சமுதாயம் இன்று இந்தப் பிராந்தியத்தில் அஞ்சி வாழவேண்டிய ஒரு அவசியத்தில் இருப்பதையும் இன்று இந்த சம்மாந்துறை மாநாடு எங்களுக்கு சொல்லிக் காட்டுகின்றது. கொழும்பிலே மாநாடுகள் நடத்தப்படுகின்ற போது இல்லாத அச்சுறுத்தல்கள் சம்மாந்துறையிலே, இந்த அம்பாறை மாவட்டத்திலே நம்முடைய அபிலாசையாகிய தென் கிழக்கு மாகாணம் அதன் அடித்தளமாக அமையப் போகின்ற இந்தக் கரையோரப் பிரதேசத்தில் நமக்கு சுதந்திரத்துடன் ஒரு மாநாடு நடத்த முடியாத ஒரு சூழ்நிலை, அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுக் கொண்டிருப்பதை நாம் மறந்து விடமுடியாது. நாம் பிறந்த மண்ணிலே சுதந்திரமாக எங்களுடைய அபிலாசைகளை ஒலிப்பதற்கு எங்களுக்கு என்ன உரிமை உண்டு என்ற கேள்விகள் எழுப்பப்பட்டு இருக்கின்றன. அன்புள்ள சகோதரர்களே! 1000க்கு மேற்பட்ட பொலீஸ்காவல்களையும் S.T.F. காவல்களையும் Army காவல்களையும் வைத்துக் கொண்டு நாம் எம்முடைய சுதந்திரத்தைப் பற்றியும் நம்முடைய எதிர்காலத்தைப் பற்றியும் சிந்திக்கின்றவர்களாக, சிந்திக்கின்ற கூட்டமாக இந்த வெளிச்ச வீட்டின் கீழே நின்று கொண்டிருக்கின்றோம். கடந்த ஆண்டு எங்களுடைய நாட்டின் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட நமது தேசிய மாநாட்டை ஒரு தடவை நினைத்துப் பாருங்கள்.

அன்றிருந்த நிலையை விடவும் இந்த ஓராண்டு விடுதலைப் பாதை யாத்திரையின் பின்பு எங்கிருக்கின்றோம் என்பதை நாம் மறந்து விட முடியாது. கடந்த ஆண்டு நம்முடைய மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்த போது எங்களுடைய மிகவும் முக்கியமான பிரச்சினையாக இருந்தது இடம்பெயர்ந்த எங்களுடைய முஸ்லிம் சகோதரர்களுடைய பிரச்சினையாகும். பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் நாட்டின் பல பகுதிகளிலும்

குறிப்பாக வடக்கிலே இருந்து விரட்டப்பட்டு புத்தளம் மாவட்டத்திலும் ஏனைய மாவட்டங்களிலும் அகதிகளாக அல்லல்பட்டுக் கொண்டிருந்த இடம் பெயர்ந்த முஸ்லிம்களுடைய பிரச்சினைகள் எங்களுக்கு மிகவும் பிரதானமான பிரச்சினையாக இருந்ததை நீங்கள் மறந்து விடமாட்டீர்கள். மட்டுமல்ல, நம்முடைய பிரதேசங்களைச் சேர்ந்த, கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்திலே படித்துக் கொண்டிருந்த எங்களுடைய மாணவர்கள் மற்றைய பல்கலைக்கழகத்தில் இரண்டாம் தரப் பிரஜைகளாக அவர்களுக்குரிய வசதிகள் இல்லாமல் அப்பல்கலைக்கழகங்களை அகதிமுகாம்களாக மாற்றிக் கொண்டு அவர்கள் இரண்டாம் தர மாணவர்களாக படிக்க வேண்டிய சூழ்நிலையில்தான் எங்களுடைய 13வது தேசிய மாநாட்டை நாம் கொழும்பிலே நடத்தி முடித்தோம். அல்- ஹம்துலில்லாஹ் இன்று அந்த நிலைகள் மாற்றப்பட்டிருப்பதை நாங்கள் காண்கிறோம். தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் உங்களுக்கு நினைவு வரலாம். எங்களுடைய தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற விதையை, இந்த மரத்தின் விதையை இந்த மண்ணிலே நாம் நட்ட போதும் எம்மக்களுக்கு மத்தியிலே சொன்ன சில கருத்துக்களை உங்கள் நினைவுக்கு கொண்டு வர விரும்புகின்றேன்.

**காலத்தை மீட்டிப் பார்ப்போம்**

இன்று எங்களுடைய இந்த மகாநாட்டிலே வைபவரீதியான இந்த அமர்வின் போது பல கட்சிகளையும் சேர்ந்த பிரமுகர்கள், அமைச்சர்கள், பெரியவர்கள், பெரும் புள்ளிகள் வந்து ஸ்ரீ.ல.மு. காங்கிரசின் வளர்ச்சியைப் பார்த்து பெரிதும் பெருமிதமடைந்தார்கள். எந்த பேரினவாதக் கட்சிகள் முஸ்லிம்களுடைய அரசியல் எழுச்சியைப் பார்த்து இது ஒரு இனவாதக் கட்சி என்று பெயர் சூட்டியுள்ளார்களோ அதே கட்சியின் பிரதிநிதிகள் இன்று இந்த மேடையிலே வந்து ஸ்ரீ.மு.கா. என்பது இனவாதக் கட்சி அல்ல, இது ஒரு தேசிய கட்சி என்பதை இன்று அங்கீகரித்துள்ளார்கள் என்றால் அது நம்முடைய ஒற்றுமைக்குக் கிடைத்த பெரிய வெற்றி என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

அன்பிற்குரிய தாய்மார்களே! சகோதர சகோதரிகளே! தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பு,

சரியாக ஒரு வருடத்துக்கு முன்பு கடந்த ஒக்டோபர் நவம்பர் மாதம் என்று நினைக்கின்றேன். இலங்கை பாராளுமன்றத்தில் எந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தார்களோ அதே ஐ.தே.க. யைச் சேர்ந்தவர்கள், அதே ஐ. தே. கட்சியின் தலைவர் இன்று எங்களுடைய மாநாட்டுக்கு விடுத்துள்ள செய்தியில் ஸ்ரீ.ல.மு.கா. சாதனைகளை வியந்துள்ளார் என்றால் நம்முடைய பாதை சரியான பாதை என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இன்று ஐ. தே. கட்சியை சேர்ந்தவர்கள் வந்து இங்கு எங்களுக்கு ஆசிகள் கூறினார்கள். ஜயவிக்கிரம பெரேரா அவர்கள் வந்து எங்களுக்கு சொன்னார். "ஸ்ரீ.ல.மு.கா. ஒரு தேசியக் கட்சி" என்று. பொ.ஐ.ஐ.மு. செயலாளர் அமைச்சர் தி.மு.ஜயரத்ன அவர்கள் வந்து இங்கு சொன்னார். ஸ்ரீ.ல.மு.கா. ஒரு தேசியக் கட்சி என்று, மட்டுமல்ல ஒரு சிரேஷ்ட தமிழ் அரசியல் வாதி, அரசியல் தலைவர், பாராளுமன்றத்தில் பல்லாண்டுகள் அங்கம் வகித்த ஆனந்த சங்கரி அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவர் இங்கு வந்து சொன்னார் "இன்று வரையும் ஸ்ரீ.ல.மு.கா. ஒரு பிரதேசக் கட்சி என்றுதான் எண்ணியிருந்தேன். ஆனால் சம்மாந்துறையில் கட்டப்பட்ட இந்த வெளிச்சவீட்டின் நிழலிலே என்னுடைய எண்ணங்கள் பிழையான எண்ணங்கள் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன் மு.கா. ஒரு பிரதேசத்துக்கான கட்சி அல்ல, இந்த நாட்டிலே வாழுகின்ற 15 இலட்சம் முஸ்லிம்களையும் ஒரே குடையின் கீழ் ஒன்றுபடுத்துகின்ற தேசியக் கட்சி" என்பதை ஆனந்த சங்கரி அவர்கள் இங்கே கூறியிருக்கின்றார்கள்.

பேரினவாதத்திற்கு எதிராக நாங்கள் போராடிக் கொண்டிருந்தோம். பேரினவாதத்தின் பிரதி விம்பங்கள் என்று நாம் ஐ. தே. க., ஸ்ரீ. ல. சு. க. போன்ற கட்சிகளை இனம் கண்ட படியால்தான் அவர்களுடைய பாதையிலே நாம் குறுக்கிடுகின்றோம் என்பதற்காக, முஸ்லிம் சமூகத்தை பிழையாக நெறிப்படுத்த வேண்டும் என்பதற்காக, எங்கள் மீது, எங்கள் பயணத்தின் மீது, எங்களுடைய போராட்டத்தின் மீது பிழையான மைகளை, பிழையான சாயங்களை பூசிக் கொண்டிருந்தார்கள். அந்த சாயங்கள் எல்லாம் இன்று அல்ஹம்துலில்லாஹ் வெளிறி, நாங்கள் யாரென்பதை இந்த நாடு மட்டுமல்ல இந்த நாட்டின்

முக்கிய கட்சிகள் மட்டுமல்ல, இந்த மேடையிலேயே சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் உட்பட முழு உலகத்திற்கும் தெரியப்படுத்தப்பட்டன. திரு. பேர்னாட் சொய்சா அவர்கள் பேசுகின்ற போது அவர் சொன்னார், 'ஸ்ரீ.ல.மு.கா. என்பது ஒரு முற்போக்குவாத அரசியல் கட்சி' என்பதை அவர் இந்த மேடையிலே பிரகடனம் செய்திருக்கின்றார். ஆகவே தான் அன்புள்ள சகோதரர்களே! எங்களுடைய பாதை மிகவும் தெளிவான பாதை இந்தப் பாதையில் நாங்கள் இன்னும் கூடுதலாக, இன்னும் தைரியத்துடன் நடந்து செல்ல வேண்டும் என்பதற்கான தைரியம் இன்று எங்களுக்கு கிடைத்திருக்கின்றது. சுகததாஸ விளையாட்டரங்கிலே நாங்கள் 13வது மாநாட்டை நடாத்திக் கொண்டிருந்த போது நாங்கள் பிரச்சினைகளை இனங் கண்டோம். பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினைகளை இனங்கண்டோம். இன்று சம்மாந்துறையிலே இந்த வெளிச்ச வீடு சுழன்று கொண்டிருக்கின்ற போது இங்கிருந்து வெளிச்சம் வெளியாகிக் கொண்டிருக்கின்ற போது அந்த வெளிச்சத்தில் பல்லாயிரக்கணக்கான அகதிகள் சந்தோசமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற காட்சியை நாங்கள் கண்டு கொண்டிரு க்கின்றோம். எத்தனை விதமான மாதிரிக் கிராமங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. எத்தனையோ, பள்ளிவாசல்கள் கட்டப்பட்டிருக்கின்றன, எத்தனையோ வீடுகள் இடம்பெயர்ந்த மக்களுக்காக, பாதிக்கப்பட்ட மக்களுக்காக கட்டப்பட்டிருக்கின்றன. அது மட்டுமன்றி, நாங்கள் எங்களுடைய பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினைகளைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தோம். அந்தப் பிரச்சினைகளுக்கு எந்த விதமான பரிகாரமும் இல்லையா என்று நாங்கள் ஏங்கிக் கொண்டிருந்த அந்த நாட்களை நாங்கள் மறந்து விடக்கூடாது. ஆகவே தான் இந்தப் பேச்சின் ஆரம்பத்திலேயே எங்களுடைய தேர்தல் காலங்களில் நாங்கள் மக்களுக்கு மத்தியிலே விதைத்துக் கொண்டிருந்த சில எண்ணங்களை உங்களுக்கு ஞாபகப் படுத்தினேன்.

**தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

நாங்கள் மக்களுக்கு மத்தியிலே வந்து ஸ்ரீ. ல. மு. கா. தலைமைத்துவத்தை ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற காரணங்களை விளக்கிய போது அவர்கள் சொன்னது "நாங்கள்

பேரினவாதக் கட்சிகளின் சப்பாத்துக்களின் கீழே அடங்கிக் கிடக்கின்றோம்" என்று. இன்று நாம் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. எங்களுக்கு இன்று நமது கால்களிலும் கைளிலும் கட்டப்பட்டிருக்கின்ற இரும்புச் சங்கிலிகளை உடைப்பதற்கான வழிகள் இருக்கின்றன. அந்த வழியிலேதான் நாங்கள் அடிக்கடி மேடையிலே ஓதிக்காட்டிய திருக்குர்ஆன் வசனங்கள் என்னுடைய ஞாபகத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன. அன்புள்ள சகோதரர்களே போராளிகளே! அல்லாஹுத்தஆலா குர்ஆனிலே சொல்கின்றான்: "ஒரு சமூகத்தின் தலைவிதியை நான் மாற்ற மாட்டேன், அந்த சமுதாயம் தன்னுடைய தலைவிதியை மாற்றிக் கொள்ளாதவரை". என்று பொருள்பட,எங்களுடைய தலைவிதியை மற்றவர்கள் மாற்றுவார்கள் என்று நம்பி ஏமாந்த காலம் மலை ஏறி விட்டது. எங்களுடைய தலைவிதியை நாங்கள் தொடர்ந்தும் இந்த சம்மாந்துறை மாநாட்டில் பிரகடனம் செய்து கொண்டிருக் கின்றோம். அதன் விளைவாகத்தான் அன்புள்ள சகோதரர்களே! நாங்கள் கனவு கூட காணமுடியாத ஒரு தென்கிழக்கு பல்கலைக்கழகம் எங்களுக்காக இன்று கிடைத்திருக்கின்றது. நாங்கள் மறந்து விடக் கூடாது. 13ஆம் ஆண்டின் 14ஆம் பாதையின் சந்தியிலே இன்று நாங்கள் நின்று கொண்டு பார்க்கின்றோம். ஒரு பல்கலைக்கழகம் கிடைத்திருக்கின்றது. இந்தப் பல்கலைக்கழகம் ஒரு சாதாரண சாதனை அல்ல. இது தனி மனிதனுடைய சாதனையும் அல்ல. ஒரு அஷ்ரபுடைய சாதனையுமல்ல. இது முஸ்லிம் காங்கிரஸ் போராளிகள் சிந்திய இரத்தத்துக்கும் அவர்கள் சிந்திக் கொண்டிருக்கின்ற வியர்வைக்கும், அவர்களுடைய உழைப்புக்கும் அல்லாஹுத்தஆலாவினால் கிடைத்த ஒரு பரிசு என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

அன்புள்ள சகோதரர்களே! தென் கிழக்குப் பல்கலைக்கழகம் மூலமாகத்தான் இந்த நாட்டின் தலைவிதியே மாற்றப்பட இருக்கின்றது என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. பல்கலைக்கழகம் என்பது அங்கே படித்து பட்டங்களை பெறுவதற்கு மாத்திரமல்ல. இன்று பல்கலைக்கழகங்கள் மாணவர்களை வெவ்வேறு மொழிகளில் பயிற்றுவித்துக் கொண்டு இருக்கின்ற போது கூட, இந்த நாடு இயங்கிக் கொண்டிருக்கின்ற பிரதானமான பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாத சூழ்நிலையில் இருக்கின்றது. வெவ்வேறு

மொழிகளிலே வெவ்வேறு வகுப்புக்களிலே நாங்கள் படித்துக் கொண்டிருக்கின்ற போது, நாங்கள் இங்கு கனவுகளை நனவாக்கிக் கொண்டிருக்கின்றோம். பல்கலைக்கழகக் கல்வியை, உயர் கல்வியை எவ்வாறு மாற்ற முடியும் என்று சிந்திக்கின்ற போது அது சம்பந்தமான பத்திரிகைகளுக்கும், அரசியல் வாதிகளுக்கும் கடிதங்களை எழுதிக் கொண்டிருப்பதை விட ஸ்ரீலங்கா மு.காங்கிரசின் சிந்தனைகளையெல்லாம் தென் கிழக்குப் பல்கலைக்கழகமாக மாறிக்கொண்டிருக்கின்ற சந்தோசத்தை இந்த வெளிச்சவீட்டின் அடியிலே நின்று நான் பிரகடனம் செய்ய விரும்புகின்றேன்.

ஆகவே தான் அன்புள்ள சகோதரர்களே! தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அதன் தென்கிழக்கு பிரதேசத்துக்கு மட்டுமல்ல, அதற்கு மட்டுமுரிய ஒரு பேருமல்ல. தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தால் தென்கிழக்கு மட்டுமல்ல, வடக்கு மட்டுமல்ல, கிழக்கு மட்டுமல்ல, தெற்கு மட்டுமல்ல, இந்த நாடு முழுவதற்குமே வெளிச்சம் கொடுக்க வேண்டுமென்று இந்த மேடையிலே நாங்கள் பிரார்த்திக்க விரும்புகின்றோம்.

**மாத்தளை ஆமினா வித்தியாலயம்**

அன்புள்ள சகோதரர்களே! என்னுடன் மீண்டும் வாருங்கள். நடந்து வாருங்கள். பின்னே என்னைப் பாருங்கள். சுகததாஸ விளையாட்டு அரங்குக்குள் நீங்கள் மீண்டும் சென்று பாருங்கள். அந்த மாநாட்டிலே எங்களுடைய நாட்டின் ஜனாதிபதி அவர்கள் பிரதம அதிதியாக இருந்தபோது அவர்களுக்கு மத்தியிலே நாங்கள் ஒரு முக்கியமான பிரச்சினையை முன்வைத்தோம். ஸ்ரீ. ல. மு. கா. அம்பாறை மாவட்டத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்கும் உரித்தான ஒரு கட்சி அல்ல. அது முஸ்லிம்கள் வாழுகின்ற எல்லாப் பிரதேசங்களிலும் இருக்கின்ற முஸ்லிம்களுடைய பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்ற ஒரு கட்சி என்ற அடிப்படையில் மாத்தளை மாவட்டத்திலே இருக்கின்ற ஆமினா வித்தியாலயம், அதன் பிரச்சினைகள், அதைச் சுற்றியுள்ள பிரதேசத்திலே இருக்கின்ற கட்டிடங்கள் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டு அந்த இடத்திலே பொலீசார் இருப்பதற்காக கட்டிடங்கள் கட்டப்பட்டுக் கொண்டிருப்பதையும் ஐ. தே. க. ஆட்சியின் காலத்தில் மாத்தளை மாவட்ட முஸ்லிம்கள் எவ்வளவோ எதிர்ப்பைத் தெரிவித்த போதிலும்

கூட அந்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலே அந்தக் கட்டிடங்கள் மட்டும் உயர்ந்து கொண்டு வந்ததையும் நாம் ஜனாதிபதி அவர்களுக்குச் சுட்டிக் காட்டினோம். ஜனாதிபதி அவர்கள் அந்தக் கோரிக்கையின் காரணமாக மாத்தளை மாவட்ட முஸ்லிம்களுடைய பிரச்சினைக்கு, இளம் சிறுமிகள் அவர்களுடைய தீர்வைக் கேட்ட ஸ்ரீ. ல. மு. காங்கிரஸுடைய சக்தியைக் கண்டு அந்த சக்தியை அங்கீகரிக்கின்ற அடிப்படையில் தான் மாத்தளை ஆமினா வித்தியாலய மாணவிகளுடைய பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது என்பதை நாம் மேடையிலே சந்தோசத்துடன் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

கடந்த வருடம் நாங்கள் சொன்னவைகளை அல்ஹம்துலில்லாஹ், இந்த வருடம் சாதித்துவிட்டு அந்த சாதனையைக் கண்டு பிரமித்துப் போய் இருக்கின்றோம். மட்டுமல்ல, ஸ்ரீ. ல. மு. கா. முஸ்லிம்களுடைய கல்வியில் மிகவும் அக்கறை செலுத்துகின்ற ஒரு கட்சியாக இருக்கின்ற காரணத்தினால் கொழும்பிலிருக்கின்ற முஸ்லிம் ஆண்களுக்காக ஒரு நல்லதொரு பாடசாலை வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் 14வது ஆண்டுக்கு பின்பு முன்வைத்தோம். கொழும்பிலே மட்டுமல்ல கண்டி மாவட்டத்தில் இருக்கின்ற முஸ்லிம் ஆண்களுக்காகவும் நல்லதொரு பாடசாலை வேண்டும் என்ற இரு கோரிக் கைகளையும் ஜனாதிபதி அவர்களிடம் முன்வைத்து இந்த இரண்டு கோரிக்கைகளும் இன்று ஜனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு இருக்கின்றது என்பதை நாம் இந்த மேடையிலே வைத்து பிரகடனஞ் செய்ய விரும்புகின்றோம்.

ஸ்ரீ. ல. மு. கா. ஒரு விடுதலை வீரன், ஸ்ரீ. ல. மு. கா. தான் ஒரு விடுதலை வீரன், ஸ்ரீ. ல. மு. காங்கிரஸின் தலைவர் அல்ல. நாங்கள் கட்சியின் இலட்சியங்களை ஆரம்பத்திலே அறிமுகம் செய்த போது அறிமுகம் செய்த ஒரு கோட்பாடு என்னவென்றால் "காற்றினால், தீயினால், வெள்ளத்தினால் அசைக்க முடியாத ஒரு முஸ்லிம் சமுதாயம் உருவாக வேண்டும்" துப்பாக்கி ரவைகளினால் சுடப்பட முடியாத ஒரு தலைமைத்துவம் அரசியல் தலைமைத்துவம் முஸ்லிம் சமூகத்திற்கு வேண்டும். நெருப்பினால் தீக்கிரையாக்கப்பட முடியாத ஒரு தலைமைத்துவம் முஸ்லிம் சமூகத்துக்கு வேண்டும். வெள்ளத்தினால் அழிக்க முடியாத ஒரு தலைமைத்துவம் முஸ்லிம் சமூகத்துக்கு வேண்டும். அந்த தலைமைத்துவத்தை உருவாக்குகின்ற பாதையில்தான் முஸ்லிம்

காங்கிரஸ் என்ற தலைமைத்துவம் இன்று உருவாகி காலத்தால் சாவினை வென்ற சரித்திர நாயகனாக முஸ்லிம்கள் மத்தியில் வளர்ந்திருக்கின்றது. அந்த விடுதலை வீரனுக்காக முஸ்லிம் சமூதாயம் ஒவ்வொரு ஆண்டும் பெருநாளாக திருநாள் விழா ஒன்றை எடுத்துக் கொண்டிருக்கின்றது. அதுவே ஸ்ரீ. ல. மு. கா. தேசிய மகாநாடுகளாகும். கடந்த மாநாட்டுக்கும் இந்த மாநாட்டிற்கும் இடைவெளியில் இருந்த சமுதாயம் 15வது ஆண்டு மாநாட்டை நோக்கி நாங்கள் நடைபயிலப் போகின்றோம். அந்தப் பாதையில் சந்திக்க வேண்டிய பிரச்சினைகள் என்ன என்ற கேள்விகளுக்கு நாம் விடை காண வேண்டும். இன்று நமது பிரதேசத்தில் நிறையக் காணிப் பிரச்சினை இருக்கின்றது உங்களுக்குத் தெரியும். பேரினவாத சூழ்ச்சிகளினால், பேரினவாதிகள் ஏற்படுத்திய சிக்கலினால், சதிகளினால் நாங்கள் எங்களுடைய காணிகளை, குடியிருப்பு நிலங்களை இழந் துள்ளோம்.

**நிலங்களை மீட்கும் பணி!**

ஸ்ரீ. ல. மு. கா. இன்ஷா அல்லாஹ் எங்களுடைய 15வது மாநாடு விடுதலை வீரத்திற்கு எடுக்கவிருக்கின்ற 15வது விழாவுக்கு முன்பு அம்பாறை மாவட்டத்திலே இருக்கின்ற முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்று இந்த இடத்திலே சொல்ல விரும்புகின்றேன். ஒரு உதாரணத்தை மாத்திரம் சொல்ல விரும்புகின்றேன். அம்பாறை மாவட்டத்திலே இருக்கின்ற ஒலுவில் பிரதேசத்தில் உள்ள முஸ்லிம் சகோதரர்கள் அவர்களுடைய பொன்னன் வெளி என்ற காணியை - உங்களுக்குத் தெரியும் இந்தப் பொன்னன் வெளி பிரச்சினை - நீண்ட நெடுங்காலமாக இருந்த ஒரு பிரச்சினை - பேரினவாதம் என்ற இரும்புக் கரங்களை பாவித்து ஒரு சிறுபான்மை சமுதாயம் நீண்ட நெடுங்காலமாக அனுபவித்து வந்த உரிமைகளை பறித்து அவர்களுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து அவர்கள் தூக்கி வீசப்பட்ட போது அந்த நிலங்களை எவ்வாறு பெறலாம்? அந்நிலங்களை மீண்டும் பெறமுடியுமா? அல்லது எங்களுக்கு விமோசனம் கிடைக்குமா என்று சிந்தித்துக் கொண்டிருந்த போது, அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு இல்லையா என்ற ஒரு நிலை ஏற்பட்ட போது அல்ஹம்துலில்லாஹ், இன்று நாங்கள் பொன்னன் வெளி பிரச்சினைகளுக்கு தீர்வுகண்ட கட்சியாக இந்த மாநாட்டிலே

பெருமையுடன் நின்று கொண்டிருக்கின்றோம். அது மட்டுமல்ல, சம்மாந்துறை, அக்கரைப்பற்று போன்ற பிரதேசத்தில் உள்ள மக்கள் நிறைய காணிப் பிரச்சினைகளை எதிர்நோக்கியிருக்கின்றார்கள். இவர்களுடைய பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைக் காண்பதற்கு மு. கா. தீர்மானம் எடுத்திருக்கின்றது என்பதை நாங்கள் மறந்துவிடக் கூடாது.

**எமது தனித்துவமும் அரசியல் தீர்வும்**

அன்புள்ள சகோதர, சகோதரிகளே! தயவு செய்து நாங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்று இந்த மேடையிலே பேசிய கட்சிப் பிரமுகர்கள், பெரிய அரசியல் வாதிகள் எல்லோரும் வந்து ஸ்ரீ.ல.மு.கா. பற்றி புகழ்ந்து பேசினார்கள் என்றால். ஸ்ரீ.ல.மு. காங்கிரஸிற்கு புகழ்மாலைகளை சூடிக் கொண்டிருந்தார்கள் என்றால் அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று ஸ்ரீ.ல.மு.கா. இந்த நாட்டிலே முஸ்லிம் சமுதாயத்துக்கென்று ஒரு தனித்துவத்தை பெற்றுக் கொடுத்தது. மு.கா. மூலம் முஸ்லிம் சமுதாயத்தின் சுயமரியாதை என்ற வார்த்தைக்கு வரைவிலக்கணம் கிடைத்து முஸ்லிம் சமுதாயம் சுதந்திரமாக பேசக்கூடிய ஒரு தன்மையை ஸ்ரீ.ல.மு.கா. இந்த நாட்டிலே ஏற்படுத்தியது. அது முதலாவது காரணம்.

இரண்டாவது காரணம்தான். இந்த நாட்டிலே இருக்கின்ற இனப்பிரச்சினை. இந்த இனப்பிரச்சனைக்கு என்ன தீர்வு என்ற கேள்வி இருக்கின்றது. இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் எத்தனையோ கட்சிகள் இன்று முண்டியடித்துக் கொண்டு பேசிக் கொண்டிருக்கின்றன. எத்தனையோ தமிழ் கட்சிகள் இன்று பேசிக் கொண்டிருக்கின்றார்கள். விடுதலைப் புலிகள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே இல்லை என்று சொல்வதைப்போன்று தமது ஆயுதங்களை தாங்கிக் கொண்டு நமது போராட்டத்தை தொடர்ந்த வண்ணம் இருக்கின்றார்கள். அது மட்டுமல்ல போராட்டத்தின் மூலம் நியாயமான கோரிக்கைகளை மழுங்கடிக்க முடியும் என்ற தோரணைகளிலும் அவர்கள் நடந்து கொண்டு செல்வது மிகவும் துர்ப்பாக்கியமான ஒரு சூழ்நிலையேயாகும். ஆனால் மு. கா. போராளிகள் கவனிக்க வேண்டிய முக்கியமான ஒரு விஷயம் இருக்கின்றது. அதுதான் ஸ்ரீ.ல.மு.கா. உடைய சாதனை. இன்று

இனப்பிரச்சனைக்கான எத்தீர்வு அமைந்தாலும் பரவாயில்லை. ஸ்ரீ. ல. மு. கா. உடைய நன்மதிப்பும் இணக்கமும் இல்லாமல் தீர்வில்லை என்ற நிலையை நாம் இந்த நாட்டிலே ஏற்படுத்தியிருக்கின்றோம் என்று சொன்னால் அதைவிடவும் ஒரு பெருமை முஸ்லிம் சமுதாயத்துக்கு ஏற்பட முடியாது. அன்புக்குரிய சகோதரர்களே! உங்களுடைய சிந்தனைகளை சற்று பின்நோக்கிச் செல்ல விடுங்கள்! உங்களுடைய நினைவுப் பறவைகளை சற்றுப் பின்நோக்கிப் பறக்க விடுங்கள். அப்போது உங்களுக்குத் தெரியும் இலங்கை- இந்திய ஒப்பந்தம் இரவோடு இரவாக எழுதப்பட்ட போது நாங்கள் நித்திரைகொண்டிருந்த நேரம், வடகிழக்கிலே வாழ்கின்ற முஸ்லிம்களின் பலம் அந்த முஸ்லிம்களுடைய விகிதாசாரம் எவ்வாறு இரவோடு இரவாக குறைக்கப்பட்டது. மலினப்படுத்தப்பட்டது என்பதை நீங்கள் மறந்துவிட மாட்டீர்கள். எங்களுக்கென்று ஒரு குரல் இல்லாத நிலையிலே இது எங்களுக்கு ஏற்பட்டது.

**மையத்துகளின் மீது**
**வடக்கையும் கிழக்கையும் இணைத்தவர்கள்**

இலங்கையிலே இந்திய- இலங்கை ஒப்பந்தம் எழுதப்படுவதற்கு முன்பு அப்போது ஆட்சியிலிருந்த முஸ்லிம் தலைவர்கள் இன்று ஐ. தே. கட்சியில் பிரதிநிதித்துவம் செய்த ஜயவிக்கிரம பெரேரா (எம். பி) அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய கட்சியிலே முஸ்லிம்களுக்குப் பெரிய அந்தஸ்துகள் கொடுக்கப்பட்டது என்று அந்த அந்தஸ்துகளை வைத்துக் கொண்டிருந்த அவர் சொன்ன முஸ்லிம் தலைவர்கள், அரசியல் அதிகாரத்தை வைத்துக் கொண்டிருந்த முஸ்லிம் தலைவர்கள், முஸ்லிம்கள் அஞ்ச வேண்டிய அவசியமில்லை. கிழக்கு மாகாண மக்கள் அஞ்ச வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் வடக்கும், கிழக்கும் இணைக்கப்பட மாட்டாது என்று சொன்னார்கள். வடக்கு, கிழக்கு எங்களுடைய மையித்துகளின் மீது மாத்திரம் தான் இணைக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் நடந்தது என்ன? வடக்கும் கிழக்கும் நாங்கள் தூங்கிக் கொண்டிருந்த போது, நித்திரையில் இருந்த போது, கனவு கண்டு கொண்டிருந்த போது வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டது. கண்களைத் திறந்து பார்த்தோம். மையித்துகளை காணவில்லை. எங்களுடைய மையித்துக்களின் மீது வடக்கும், கிழக்கும் இணைக்கப்படும் என்றவர்கள் இன்னும் உயிரோடுதான் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால்

இணைக்கப்பட்ட வடகிழக்கினால் ஏற்பட்ட அனர்த்தங்கள், முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் அவற்றிலிருந்து விடுதலை பெறுவதுதான் முஸ்லிம் சமுதாயத்துக்கு விடுதலை பெற்றுக் கொடுப்பது. ஸ்ரீ. ல. மு. காங்கிரசின் மிகவும் முக்கியமான கரிசனைகளில் இதுவும் ஒன்றாக இருக்கும் என்பதை நான் இந்த மாநாட்டிலே சொல்லி வைக்க விரும்புகின்றேன். இன்று பல கட்சிகளுடனும் நாங்கள் பேசிக் கொண்டிருக்கின்றோம். ஐ. தே. கட்சி கூட இனப்பிரச்சினை தொடர்பாக ஒழுங்கான ஒரு நிலைப்பாட்டை எடுக்க முடியாத நிலையில் ஐ.தே.க. யைக் கூடசரியான வழிக்கு இழுத்து சிநேகபூர்வமான மொழிகளினால் வழிக்கு கொண்டு வரக்கூடிய இந்த நாட்டில் இருக்கின்ற ஒரே ஒரு அரசியல் சக்தி நம்முடைய, நாம் பெருமைப்படும் ஸ்ரீ. ல. மு. கா. என்பதனை நாம் மறந்து விடக்கூடாது.

**முஸ்லிம் மாகாணத்தை எதிர்க்கும் தமிழ் கட்சிகள்**

இன்று எத்தனையோ தமிழ் கட்சிகள் வந்து தங்களுடைய நல்லாசிகளை பேசிக் கொண்டிருந்தார்கள். சொரிந்து கொண்டிருந்தார்கள். துரதிர்ஷ்டவசமாக நாங்கள் அழைப்பு விடுத்த கட்சிகளுள் ஒரே ஒரு அரசியல் கட்சி மாத்திரம்தான் இந்த மேடைக்கு வரவில்லை. இன்று பத்திரிகைகளை நான் படித்துப் பார்த்தேன். அந்தப் பத்திரிகைகளிலே TELO கட்சி மாத்திரம் எங்களுடைய மாநாட்டை பகிஷ்கரிப்பதாக அறிக்கை விட்டுள்ளார்கள். அதற்கு காரணம் ஸ்ரீ. ல. மு. கா. முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருக்கின்ற ஒரு அரசியல் அலகை கேட்டுக் கொண்டிருக்கின்ற ஒரே ஒரு நோக்கத்திற்காக அவர்கள் இந்த மகாநாட்டைப் பகிஷ்கரிக்கின்றார்கள்.மிகவும் துரதிஷ்டமானது அவர்கள் யாருக்காகப் பேசுகிறார்கள் என்பது யாருக்கும் தெரியாது. இவ்வாறான கட்சிகள் யாரை பிரதிநிதித்துவப் படுத்துகின்றது என்ற கேள்விக்கு இந்த நாட்டிலே விடைகிடையாது. ஆகவேதான் அன்புள்ள சகோதரர்களே! நாங்கள் கூறுகின்றோம். இந்த நாட்டு முஸ்லிம்களுடைய எண்ணங்கள் அபிலாசைகள் இவைகள் நிறைவேற வேண்டுமென்றால் இந்த நாட்டு முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு நல்லதொரு பரிகாரம் இனப்பிரச்சினைத் தீர்வாக அமைய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. TELO போன்ற கட்சிகள் எதைத்தான் கூறிய போதிலும் கூட இந்த நாட்டு தமிழ் மக்களுக்கு மத்தியிலே

நன்மதிப்பைப் பெற்ற எந்தவொரு கட்சியாவது இந்த நாட்டிலே வாழ்கின்ற முஸ்லிம்களுடைய தன்மானத்தைக் கௌரவிப்பதற்காக அவர்களுக்கென்று ஒரு அரசியல் அதிகார அலகு வேண்டாம் என்று கூறவில்லை என்பதை நாம் இந்த மேடையிலே சொல்லிக் கொள்ள விரும்புகின்றோம். அது மட்டுமல்ல, முஸ்லிம்களுக்கென்ற ஒரு அரசியல் அதிகார அலகு கிடைக்கின்ற போது சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில், போன்ற மூன்று பிரதேங்களையும் அடிப்படையாகக் கொண்டு மட்டக்களப்பு, திருமலை, வன்னி மாவட்டங்களில் இருக்கின்ற நிலத்தொடர்பற்ற முஸ்லிம் பிரதேசங்களில் வாழுகின்ற முஸ்லிம் சகோதரர்களுடைய பாதுகாப்புக்களை உறுதிப்படுத்தக் கூடிய ஒரு முஸ்லிம் அரசியல் அதிகார அலகு ஒன்று கிடைக்கக் கூடிய வழியிலே எங்களுடைய அரசியல் பாதை தொடர்ந்தும் செல்ல வேண்டி இருக்கின்றது. அதை அடைவதற்கான சகல முயற்சிகளையும் சகல தியாகங்களையும் செய்வதற்கு ஸ்ரீ.ல.மு.கா. ஆயத்தமாக இருக்கின்றது என்பதையும் இந்த மேடையிலே நாம் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகின்றோம்.

**இலக்குகளை அடைவதற்காக போராடுவோம்.**

அன்பிற்குரிய சகோதரர்களே! நான் காலையிலே உங்களுக்கு மத்தியிலே ஆங்கிலத்திலே பேசிக் கொண்டிருந்த போது நான் மூன்று முக்கியமான விசயங்களை உங்களுக்கு மத்தியில் முன் வைத்தேன். எங்களுடைய அடுத்த ஆண்டு வெளிச்ச வீட்டை நோக்கி நாங்கள் நடந்து செல்கின்றபோது, மூன்று முக்கியமான விசயங்கள் எங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

முதலாவது முஸ்லிம்களுக்கு மத்தியிலே இன்னும் கூடுதலான ஒற்றுமையை ஏற்படுத்துகின்ற அந்த நிலைப்பாட்டை நாங்கள் அடைய வேண்டும். முஸ்லிம்கள் ஒற்றுமைப்பட்டது போதாது. ஸ்ரீ. ல. மு. கா. உடைய சாதனைகளைப் பற்றி நாம் எவ்வளவுதான் பெருமைப்பட்டுக் கொண்டாலும் கூட மு. கா. இனால் இதுவரையிலும் அரசியல் ரீதியாக 40% மான முஸ்லிம்களைத் தான் ஒற்றுமைப்படுத்த முடிந்துள்ளது. 40% மான முஸ்லிம்கள் ஒற்றுமைப்படுகின்ற போது இவ்வளவு பெருமையும் எங்களுடைய சமுதாயத்துக்கும் எங்களுடைய பிற்சந்ததிகளுக்கு கிடைக்க முடியும் என்றால் தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். 50%

மான முஸ்லிம்கள் ஒற்றுமைப்படுகின்ற போது 60% முஸ்லிம்கள், 70%, 80%, 90%, 100%...... மான முஸ்லிம்கள் ஒற்றுமைப்படுகின்ற போது இந்த நாட்டின் ஆட்சிப் பலத்தையே பெறக்கூடிய ஒரு சமுதாயமாக மு. கா. முஸ்லிம் சமுதாயத்தை வழி நடத்திச் செல்லும் என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை.

**தேசத்தின் தேசிய ஒற்றுமைக்கு நிரந்தரப் பலம் SLMC**

அடுத்தது நாங்கள் இந்தப் பாதையிலே மற்ற சமுதாயங்கள், மற்ற இனங்கள் எல்லாவற்றையும் ஒன்று திரட்டி இவர்களின் நட்பு சக்தியாக எதிர்காலத்தில் முஸ்லிம் காங்கிரஸை வளர்க்க வேண்டும் என்று நாம் கனவு கண்டு கொண்டிருக்கின்றோம். நாங்கள் யாருக்கும் எதிரிகளல்ல சிங்கள மக்களுக்கும் நாங்கள் எதிரிகளல்ல, தமிழ் மக்களுக்கும் நாங்கள் எதிரிகளல்ல. யாருக்கும் நாங்கள் எதிரிகளல்ல. இந்த நாட்டின் தேசிய ஒற்றுமை என்பது ஒரு முக்கோணத்தைப் போன்றது. இந்த நாட்டிலே தேசிய ஒற்றுமை ஏற்பட வேண்டும். என்றால் இந்த நாட்டிலே தமிழ் முஸ்லிம் ஒற்றுமை ஏற்பட வேண்டும். இந்த நாட்டிலே அடுத்த இரு சமூகங்களோடும் ஒற்றுமையாக இருக்கின்ற ஒரே ஒரு சமூகம் இந்த நாட்டிலே வாழுகின்ற முஸ்லிம் சமுதாயம் என்பதை நாங்கள் மறந்து விடக்கூடாது. நாங்கள் சிங்கள மக்களோடும் ஒற்றுமையாக இருக்கின்றோம். அதேபோல் தமிழ் மக்களுடனும் ஒற்றுமையாக இருக்கின்றோம். இன்றும் சண்டை பிடித்துக் கொண்டிருக்கின்ற அல்லது இன்னும் இறுக்கமாக இணையாமல் இருக்கின்ற சிங்கள தமிழ் மக்களை ஒற்றமைப்படுத்தக் கூடிய ஒரு பாலமாக ஸ்ரீ. ல. மு. கா. இந்த நாட்டிலே அமைய வேண்டும் என்பதனையும் தெளிவாகத் தெரிந்து, புரிந்தவர்களாக இருக்கின்றோம்.

**முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் பெண்கள் விடுதலைக்கு வழியமைத்தது**

அன்பிற்குரிய சகோதரர்களே! கடைசியாக நாங்கள் சொல்லும் செய்தி இதுதான். இந்த நாட்டில் தேசிய ஒற்றுமை அந்த தேசிய ஒற்றுமை என்பது மனித நேயத்தை அங்கீகரிக்கின்ற அடிப்படையில் இந்த நாட்டிலே ஏற்படுவதற்கு எங்களுடைய கட்சி உழைக்க வேண்டும். இவற்றை நாங்கள் செய்வதாக இருந்தால் நாங்கள்

எங்களுடைய கட்சியை, எங்களுடைய செய்தியை இந்த விடுதலை என்கின்ற இந்தத் தீபத்தை இன்னும் வேகமாக எடுத்துச் செல்ல வேண்டும். எங்களுக்கு மத்தியிலே இன்னும் தியாகிகள் உருவாக வேண்டும். எங்களுக்கு மத்தியிலே இன்னும் முழு நேர ஊழியர்கள் முன்வர வேண்டும். எங்களுடைய தாய்மார்கள் நாம் எப்போதும் பெருமைப்படுவது உண்டு முஸ்லிம் தாய்மார்கள், முஸ்லிம் ஆண்களை விடவும் எந்த விதத்திலும் இரண்டாம் தரத்தில் உள்ளவர்கள் அல்ல என்பதை நிரூபிப்பதைப் போன்று அவர்கள் மு. கா. மாநாடுகளிலும் முஸ்லிம் சமுதாயத்தின் விடுதலையிலும் காட்டுகின்ற அந்த ஆர்வத்தைக் காண்கின்ற போது, நான் பெருமைப்படுகின்றேன். இன்று நாங்கள் ஒன்றை சிந்திக்க வேண்டும். முஸ்லிம் சமுதாயத்தின் விடுதலை, அரசியல் விடுதலை முஸ்லிம் ஆண்களினால் மாத்திரம் சாதிக்கப்பட முடியாத ஒன்றாகும். ஒரு சமுதாயத்தின் இரண்டு கண்களைப் போன்று தான் ஆண்களும் பெண்களும் இருக்கின்றார்கள். முஸ்லிம் பெண்களை இன்னும் அரசியல் மயப்படுத்தி அவர்களுக்கு மத்தியிலே திரண்டு கிடக்கின்ற உறங்கிக் கிடக்கின்ற உணர்ச்சிகளையும் அவர்களுக்கு மத்தியிலே உறங்கிக் கிடக்கின்ற திறமைகளையும் நம்முடைய சமுதாயத்தின் மலர்ச்சிக்காக நாங்கள் மாற்ற வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆகவே தான் இந்த மாநாட்டிலே நாங்கள் சிந்தித்துக் கொண்டிருக் கின்றோம். இன்ஷா அல்லாஹ் அடுத்த வெளிச்சவீட்டை நாங்கள் கட்டுவதற்கு முன்பு, அடுத்த மாநாட்டுக்கு முன்பு இந்த நாட்டிலே வாழுகின்ற முஸ்லிம் பெண்களுக்காக பெண்கள் மாநாட்டை நடாத்துவதற்கு ஸ்ரீ. ல. மு. கா. தீர்மானம் எடுத்திருக்கின்றது என்பதையும் நான் சந்தோசமாக உங்களுக்கு சொல்லி வைக்க விரும்புகின்றேன். அது மட்டுமல்ல முஸ்லிம் வாலிபர்கள் முஸ்லிம் இளைஞர்கள் அவர்கள் இன்னும் பயிற்றுவிக்கப்பட வேண்டிய ஒரு அவசியம் இன்னும் எங்களுக்கு இருக்கின்றது. இப்போது தலைமைத்துவத்தில் இருக்கின்றவர்கள். எந்த நேரத்திலும் இல்லாமல் போகலாம் அதை நாங்கள் தெரிந்தவர்களாக, புரிந்தவர்களாக இருக்கின்றோம்.

**முஸ்லிம் தலைமைத்துவம் அஞ்சலோட்டம் போன்றது!**

ஆகவே எங்களுடைய சமுதாயத்தில் தலைமைத்துவ சங்கிலிகளை நாங்கள் ஏற்படுத்த வேண்டும். ஒருவர் போனால்

ஒருவர் மறைந்தால் ஒருவர் குண்டுகளால் சாகடிக்கப்பட்டால் அந்த இடத்திலே ஆயிரம் பேர் உருவாகக் கூடிய ஒரு தலைமைத்துவத்தை நாங்கள் உருவாக்க வேண்டியுள்ளது. ஆகவேதான் அடுத்த மகாநாட்டுக்கு முன்பு இன்ஷா அல்லாஹ் இந்த நாட்டிலே முஸ்லிம் இளைஞர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் இளைஞர் காங்கிரஸின் மூலம் இந்த நாட்டிலே முஸ்லிம்கள் அனைவருக்கு மத்தியிலும் முஸ்லிம் கலாச்சார விழா ஒன்றையும் ஏற்படுத்துவதற்கு தலைமைத்துவம் சிந்தித்துக்கொண்டிருக்கின்றது என்பதையும் நான் உங்களுக்கு சொல்லி வைக்க விரும்புகின்றேன். ஆகவேதான் இந்த அடிப்படையில் நாம் செல்ல வேண்டும். எங்களுடைய பாதையில் நிறைய இளைஞர்களை நாம் சேர்க்க வேண்டியிருக்கிறது.

அல்லாமா இக்பால் சொன்னார் "முஸ்லிம் இளைஞனே நீ யார் என்பதை மறந்து விட்டாய். நீ வெறும் பேச்சுக்காரனாக இருக்கின்றாய் உன்னுடைய பெருமைகளை உன்னுடைய மூதாதையர்களுடைய பெருமைகளை நீ மறந்து இருக்கின்றாய்" என்று முஸ்லிம் இளைஞனைப் பார்த்து அல்லாமா இக்பால் தட்டிவிட்டார். அதே அல்லாமா இக்பால் தான் சொன்னார் முஸ்லிம் இளைஞனைப் பார்த்து "முஸ்லிம் இளைஞனே வாள்முனையைப் பார் உன்னுடைய வரலாற்றைப் பார், நீ வாள்முனையில் பிறந்தவன் வாள்முனையின் கீழ் வாலிபம் அடைந்தவன் நீ. வானத்திலே இருக்கின்ற இளம் பிறையைப் பார் அதன் இரண்டு கூர்களும் வாளினைப் போன்று கூர்மையான அந்த கூர்களை நீ மறந்துவிடக்கூடாது" என்று அல்லாமா இக்பால் அவர்கள் சொன்னார்கள். அந்த வழியிலே முஸ்லிம் சமுதாயத்தை நாங்கள் கட்டியெழுப்ப வேண்டும். முஸ்லிம் பெண்களை இந்த விடுதலைப் பாதையில் இன்னும் துரிதமாக ஈடுபடுத்த வேண்டும். இன்ஷா அல்லாஹ் அடுத்த வருடம் பதினைந்தாவது மாநாடு மிகவும் சிறப்பாக பெரியதொரு வெளிச்ச வீடாக விளங்க வேண்டும். அந்த வெளிச்ச வீட்டிலே முஸ்லிம் சமுதாயம் உரிமைக்குரலை எழுப்ப வேண்டும்.

நாரே தக்பீர் அல்லாஹு அக்பர்! நாரே தக்பீர் அல்லாஹு அக்பர்! நாரே தக்பீர் அல்லாஹு அக்பர்!
அஸ்ஸலாமு அலைக்கும்!

# 15 ஆவது தேசிய மாநாட்டு தொடக்கவுரை

## 23 மே 1998 ஸ்டான்லி ஜான்ஸ் அரங்கில்

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்**

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய
அல்லாஹ்வின் பெயரால்,
அல்லாஹ்வின் திருத்தூதர் மீதும் அவரின் கிளையார் மீதும்
அல்லாஹ்வின் அருள் மாரி என்றென்றும் பொழிவதாக!!

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதன் 15ஆவது தேசிய மாநாட்டைக் கொண்டாடுகின்ற வரலாற்றுப் புகழ்மிக்க இவ்வேளையில் வரவேற்புரை வழங்குவதற்கான வாய்ப்பை எனக்குத் தந்த எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு நன்றி கூறுகின்றேன். இந்நிகழ்ச்சியை மாபெரும் வெற்றிகரமான ஒரு நிகழ்ச்சியாக்கும் பொருட்டு இங்கு வந்துள்ள உங்கள் ஒவ்வொருவரையும் வரவேற்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நாளாந்தம் நாம் காண்கின்ற அதிகரித்த ஆதரவு இலங்கையின் சமகால அரசியலிலும் எதிர்கால அரசியலிலும் தவிர்க்க முடியாத ஓர் அரசியல் சக்தியாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வளர்ந்து வருவதைக் காட்டுகின்றது.

முஸ்லிம்கள் பெருமளவில் பங்குபற்றுகின்ற முன்னைய மாநாடுகளைப் போன்றிராது இம்மகாநாட்டில் சிங்கள, தமிழ் மற்றும் பர்கர் சமூகத்தைச் சேர்ந்த பெருந்தொகையினரான முஸ்லிம் அல்லாத சகோதர சகோதரிகளை நாம் காண்கின்ற வகையில் இவ் 15ஆவது தேசிய மாநாடு தனிச்சிறப்புப் பெறுகின்றது. மலையகத் தமிழ் சமூகத்தின் பிரதிநிதித்துவத்தையும் இங்கு நாம் காண்கின்றோம். நாம் விழாக்காணும் இந்நந்நாளில் எம்மை வாழ்த்துவதற்காக சங்கைக்குரிய பௌத்த துறவிகளும், இந்து மதக் குருக்களும் கிறிஸ்துவ சமயத் தலைவர்களும் உலமாக்களும் இன்று எம்முடன் கூடியுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுக்கு மட்டுமான ஒரு கட்சியென்ற காலம் கடந்துவிட்டதைத்தான் இது காட்டுகின்றது. அது முஸ்லிம் அல்லாதவர்களின் மனதையும் கொள்ளை கொண்டுள்ளது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்

ஒரு தேசிய அரசியற் கட்சியென்ற வகையில் இலங்கையின் முஸ்லிம் அல்லாத சமூகங்களின் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றுமென்பதில் எனக்குச் சந்தேகமில்லை. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் குரலற்ற முஸ்லிம் சமூகத்தின் குரலாக ஆரம்பமான போதிலும் தேவைப்பட்ட சந்தர்ப்பங்களில் சமய, மொழி வேறுபாடின்றி இலங்கைச் சமூகத்தில் அடக்கி, ஒடுக்கப்படுகின்ற எல்லாப் பிரிவினரதும் குரலாக நாம் இப்போதும் எப்போதும் செயற்பட்டுள்ளோம். நாம் முஸ்லிம் சமூகத்தின் சுயமரியாதையையும், அரசியல் தனித்துவத்தையும் பேணிப் பாதுகாக்கின்ற அதே வேளையில் அடக்கி, ஒடுக்கிக் கொடுமைப்படுத்தப்படும் இந்நாட்டு மக்களின் குரலாக எமது பங்கைத் தொடர்ந்து ஆற்றுவோம்.

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தேசப் பற்று**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களாகிய நாம் எமது கட்சியை விட எமது தாய் நாட்டுக்குக் கூடிய முக்கியத்துவம் அளிக்கின்றோம். நாம் எவ்வகையான இனவாதத்தையும், பயங்கர வாதத்தையும், பேரினவாதத்தையும் பகிரங்கமாகக் கண்டிக் கின்றோம். அவை எல்லாவற்றையும் நிராகரிக்கின்றோம். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த நாம் இந்நாட்டிலுள்ள இலங்கையர் எல்லோரையும் இலங்கையின் பிள்ளைகளாகக் கருதுகின்றோம். எமக்கு அரசியல், மொழி அல்லது சமூக வேறுபாடுகள் இல்லை. எல்லா மக்களும், எல்லா மொழிகளும், எல்லாச் சமூகங்களும் சமமானவையே.

எமது நாட்டின் மிக நெருக்கடியான காலகட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இம்மாநாட்டை நடாத்துகின்றது. சகல அரசியல் தலைவர்களும் மக்களின் ஒற்றுமை பற்றிப் பேசிய போதிலும், எமது கட்சிகள் மீது எமக்குள்ள ஈடுபாடும் விசுவாசமும் எமது தாய் நாட்டின் மீது நாம் கொண்டிருப்பதை விட ஆழமானவையாக இருப்பதனால் தேசத்தைக் கட்டி யெழுப்புகின்ற பணியை நாம் சாதிக்க முடியாதுள்ளது. தேசத்தின் ஐக்கியம், சுபீட்சம், எதிர்காலம் ஆகியவற்றில் எமக்கு உண்மையான ஈடுபாடு இருக்குமாயின் எம்மத்தியிலுள்ள வேறுபாடுகள் பற்றி ஓயாது தர்க்கிப்பதற்கு இது நேரமல்ல. இந்த மனப்பான்மையுடன் தான் இன்றைய அரசியல் அரங்கில்

முக்கிய பங்கு வகிப்பவர்களையும் அரசியற் கட்சிகளின் எல்லா தலைவர்களையும் ஸ்ரீ லங்கா முஸ்லம் காங்கிரஸ் எமது விருந்தினர்களாக எமது மேடைக்கு அழைத்துள்ளது. வெவ்வேறு சமூகங்களினதும் தலைவர்கள் தற்காலிகமாகவேனும் தமது வேறுபாடுகளை ஒதுக்கித்தள்ளி விட்டு சகோதர சகோதரிகளாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மேடையில் ஒன்றாக அமர்ந்திருப்பதைக் கண்டு உண்மையில் நாம் பெரு மகிழ்ச்சி யடைகின்றோம்.

ஒற்றுமை இவ்வாறு வெளிப்படுத்தப்படுவது எமக்கு ஒரு ஆறுதல் உணர்வையும் சாதனை உணர்வையும் ஏற்படுத்துகின்றது. நிச்சயமாக அது ஏங்கிக் கொண்டிருக்கும் இந்நாட்டு மக்களுக்கு நம்பிக்கையூட்டும் சமிக்ஞைகளை அளிக்கும். மன நிறைவினைத் தருகின்ற இந்த உணர்வு இத்தருணத்துக்கு மட்டும் அல்லது இந்நாளுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதாக இருக்கக் கூடாது. இது நிரந்தரமானதோர் உணர்வாக இருப்பதற்கான வழிமுறைகளை நாம் திட்டமிட வேண்டும். எனவே இங்கு சமூகமளித்துள்ள ஒவ்வொருவரின் தோள்களிலும் பாரிய பொறுப்பொன்று சுமத்தப்பட்டுள்ளது. எமது உடனடியானதும் மிக அவசரமானதுமான பொறுப்பு தற்போதைய அவல நிலைமையிலிருந்து தேசத்தையும் மக்களையும் மீட்பதே. அரசாங்க முறைமையையும் பாராளுமன்ற விதிகளையும் மாற்றினாலன்றி இதனைச் செய்ய முடியாது.

மக்களின் பிரதிநிதிகளென்ற வகையில் தேசத்தைக் கட்டி யெழுப்புகின்ற பொதுவான இலக்கை நோக்கி ஒன்றாகப் பணியாற்ற வேண்டியது பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமையாகும். எல்லா வற்றிலும் சமத்துவத்தை நாம் எவ்வாறு வலியுறுத்துகின்றோமோ அவ்வாறே தேசத்தைக் கட்டியெழுப்பும் வாய்ப்பை உறுதிப்படுத்துவதும் எமது கடமையாகும். எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் இப்பொறுப்பிலிருந்து ஒதுக்கி வைக்கப்படக் கூடாது. ஆனால் தற்போதைய அரசாங்க முறைமையினாலும் பிரதான கட்சிகளின் இரு அரசியலினாலும், இவ்வேளை பிரதானமாகத் தேவைப்படும் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் எதிர் கட்சிக் ஆக்கபூர்வமாக பங்குபற்ற முடியாத நிலையில் இருக்கின்றது. இந்நடைமுறையில் துரதிர்ஷ்டவசமாக நாம் மக்களையும் பிரித்துவிட்டோம்.

இப்பிரிவினையை நாம் ஒரு முடிவுக்கு கொண்டு வருவோமாக, நாம் புதிதாகத் தொடங்கி, ஒரு மக்களாக ஒன்றிணைந்து பணியாற்றுவோமாக, தேசத்தைக் கட்டியெழுப்புகின்ற இவ்வேளையில் நாம் எம்மையே பிரித்துக் கொள்வது எம்மால் தாங்கிக் கொள்ள முடியாதது. எதிர்காலச் சந்ததிக்கு ஒரு சமாதானமான, சுதந்திரமான, சுபீட்சமான இலங்கையை அளிக்கும் பொருட்டு எமது வேறுபாடுகளைக் களைந்து விடுவோமாக.

மக்களின் பிரதிநிதிகளென்ற வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நட்புணர்வுடனும் பொறுப்புணர்வுடனும் ஒன்று சேர்ந்து பணியாற்றக் கூடிய வழி முறையொன்றை வகுப்போமாக,

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் 15 ஆவது தேசிய மாநாடு எமது சுதந்திரப்பொன் விழா ஆண்டில் நடைபெறுகின்றது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சுதந்திர இலங்கையை விட 35 ஆண்டுகள் இளமையென்பதை இது காட்டுகின்றது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் விரோத சக்திகள் கடந்த 10 ஆண்டுகளில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் வெற்றிகரமான வளர்ச்சியைத் தடுப்பதில் தோல்வியைத் தழுவியுள்ளனவென்பாரிய உண்மை இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. மு. கா. உதயமாகும் வரையிருந்த ஏனைய அரசியல் கட்சிகளும் தமது பங்களிப்பை சரியாக செய்யாததினால் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உதயமாவதற்கு வெற்றிடம் ஏற்பட்டது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்து வளர்ந்து கொண்டேயிருக்கும். இன்றேல் இவ்வெற்றிடம் மீண்டும் தோன்றித் தேசத்துக்கு ஈடு செய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தும். இக்கோட்பாடு எமது நாட்டில் புதிய அரசியற் கட்சிகள் எல்லாவற்றையும் நியாயப்படுத்துவதற்கும் அவற்றின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கும் ஏற்புடையதாகும். அவை தமிழ் அரசியல் கட்சிகளாக இருக்கலாம். அல்லது தமது அபிலாஷைகளை எய்துவதற்கான ஒரு வழி வகையாக வன்முறையை நாடிய சிங்கள அல்லது தமிழ் அரசியல் இயக்கங்களாகயிருக்கலாம்.

முஸ்லிம் இளைஞர்களும் துப்பாக்கிக் கலாசாரத்தினால் கவரப்படத்தொடங்கிய ஒரு நேரத்தில் தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உருவாகியது. சமூகத்தின் சுதந்திரத்தை உறுதிப் படுத்துகின்ற அதே வேளையில் பிரதான அரசியல்

நீரோட்டத்திலிருந்து அன்னியப்படுத்தப்படாத மாற்று அரசியல் பாதையொன்றை முஸ்லிம் இளைஞர்களுக்குக் காட்டுவதில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெற்றி கண்டதென்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இல்லாதிருப்பின் இன்று எமது நாடு ஏற்கனவே சிக்கலான அதன் அரசியல் நிலைமையுடன் மூன்றாவது பரிணாமமொன்றையும் சேர்த்துக் கொண்டதாக இருந்திருக்கும். தமிழ் இளைஞர்களினதும், சிங்கள இளைஞர்களினதும் பயங்கரவாத அச்சுறுத்தலுக்கும், வன் செயல்களுக்கும் மேலதிகமாக முஸ்லிம் இளைஞர்களின் வன்செயலும் நிச்சயமாகச் சேர்ந்திருக்கும்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெருமைப்படத்தக்க தனிச் சிறப்புக்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. அவற்றில் முதன்மையானது முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதமேந்துவதைப் பயனுறுதியுடன் தடுப்பதில் அது கண்டுள்ள வெற்றி. இதனைக் கூறிய கையோடு பிரதான கேள்விக்கு நான் மீண்டும் வருகின்றேன். சுதந்திரத்துக்குப் பிந்திய இலங்கையில் மேலும் மேலும் அரசியற் கட்சிகளும் வன்முறைக் கலாசாரமும் தோன்றியதற்குக் காரணம் என்ன?

இலங்கையில் 1948 முதல் அடுத்தடுத்துத் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் இரு கட்சி அரசியல் முறையின் ஊடாக ஏற்றுக்கொண்டு அமுல் செய்த குறுகிய பேரினவாதம் கொண்ட கொள்கைகள் தேசிய ஐக்கியம் சீரழிவதற்கும் இலங்கையின் சிறுபான்மை இனங்களின் பல்வேறு மொழி, மத, கலாசார விழுமியங்கள் அழியுண்டு போவதற்கும் படிப்படியாக வழிசமைத்தனவென ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த நாம் நம்புகின்றோம். இது ஜனநாயகத்தின் பெயரால் பெரும்பான்மைச் சமூகம் நிரந்தரமாகப் பிரிக்கப்பட்டமை இந்த நஷ்டத்தில் அடங்காது. வேறுவகையில் கூறுவதாயின் எமது மக்களின் அரசியல் நம்பிக்கையை நிறைவேற்ற நாம் கூட்டாகத் தவறிவிட்டோம். அரசியற் கட்சிகள் எமது நாட்டு இளைஞர்களைத் தொடர்ச்சியாக ஏமாற்றிவிட்ட வரலாறுதான் சுதந்திரத்துக்குப் பிந்திய எமது வரலாறு. மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களே! எமது சுதந்திரப் பொன் விழா நிகழ்ச்சியின் போது தேசத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் நீங்கள் உரையாற்றிய

வேளை உங்களுக்கே உரித்தான நாவன்மையுடனும் சுவை நயத்துடனும் இப்பிரதான கேள்விக்கு நீங்கள் பதிலளித்தீர்கள்.

தயவு செய்து நீங்கள் கூறியதை மேற்கோள் காட்டுவதற்கு என்னை அனுமதிக்க வேண்டுகின்றேன்,

"நாம் அடக்கத்துடன் எமது தோல்விகளையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். தேசத்தைக் கட்டியெழுப்புகின்ற இன்றியமையாத பணியில் நாம் தவறிவிட்டோம். ஆசியாவில் எமது அயல் நாடுகளும் பல நாடுகளும் பல்வேறு இன, மத மொழியைச் சார்ந்த சமூக மக்கள் அன்னியோன்யமாக வாழ்கின்ற வகையில் உறுதியான, ஒற்றுமையான தேசங்களாக முன்னேறியுள்ள அதே வேளையில் நாம் எமது பாதையில் தட்டுத் தடுமாறி அலைந்து திரிந்திருக்கின்றோம்."

உங்கள் உரையின் அடுத்த வசனம் கூடுதல் முக்கியமானது. "இந்த நிலைமைக்கான காரணங்களைத் தேடுகின்ற பொறுப்பும் அதற்கான பழியைச் சுமத்துகின்ற பொறுப்பும் வரலாற்றாசிரியர்களிடம் ஒப்படைக்கலாம்" இங்கு, இக்கருத்தில், மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களே, பணிவுடன் நான் உங்களுடன் உடன்பட முடியாமல் இருப்பதற்கு வருந்துகிறேன். தயவு செய்து அதற்காக என்னை மன்னிக்கவும். காரணங்களைத் தேடுவதற்கான பொறுப்பை நாமேன் வரலாற்றாசிரியர்களிடம் மட்டும் விட்டு விட வேண்டும்?

இக்காரணங்களை ஆராய்ந்து பார்ப்பதற்கு அரசியற் கட்சிகள் என்றவகையில் நாமே மேற்கொள்ள வேண்டிய கட்டாயக் கடமையென்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கருதுகின்றது. நிச்சயமாக அது வரலாற் றாசிரியர்களின் பொறுப்பல்ல. அரசியல் தலைவர்களென்ற முறையிலும் கட்சித் தலைவர்களென்ற முறையிலும் அத்தோல்விக்கான காரணங்களைக் கண்டறிய வேண்டியது எம்முடைய பொறுப்பாகும். நாம் இப்பொறுப்பைக் கைதுறக்கவோ வரலாற்றாசிரியர்களிடம் ஒப்படைக்கவோ முடியாது. தேசத்தைக் கட்டியெழுப்புவதில் நாம் கூட்டாகத் தோல்வியடைந்தமைக்கான காரணத்தை அரசியற் கட்சி களாகிய நாம் திட்டவட்டமாக தீர்மானிக்காவிட்டால் நாம் தொடர்ந்து தவறிழைக்கவும் தோல்வியுறவும் நேரிடும்.

## எதிர்க் கட்சியில்லாத ஜனநாயகம்

ஒற்றுமையான மக்கள் மத்தியில் ஜனநாயகம் செயற்பட முடியா தென்ற வகையில் தான் சுதந்திரத்துக்குப் பிந்திய இலங்கையின் நாம் ஜனநாயகத்தைக் கட்டிப்பிடித்து வந்திருக்கின்றோம். எமது நாட்டு மக்கள் கட்டாயமாகப் பரிக்கப்பட்டிருக்க வேண்டியது ஜனநாயகம் எஞ்சிப் பிழைப்பதற்கு இன்றியமையாதது என்ற வகையில் நாம் நடந்தி ருக்கின்றோம்.

எமது அரசியல் நிறுவனங்கள் ஏற்பாடுகள் சில அவற்றின் செல்லுபடித் தன்மையும் பயனுடைமையையும் கடந்து விட்டனவா என்ற கேள்வியை இன்று நாம் கேட்க வேண்டியுள்ளது. உதாரணத்துக்கு "வெஸ்ட்மினிஸ்டர்" மாதிரியிலான தற்போதைய அரசாங்க முறை அடுத்த தேர்தலில் அதிகாரத்தைக் கைப்பற்றுகின்ற வரையறுக்கப்பட்ட நோக்கத்துக்காக மக்களைத் தவறாக வழி நடத்தும் பொருட்டு அரசாங்கம் செய்கின்ற எல்லாவற்றையும் எதிர்க்கவேண்டுமென்பதற்காக எதிர்க்கின்ற எதிர் கட்சியின் அமைப்பு முறை. தேசத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்பை ஆளும் கட்சியிடம் மட்டும் ஒப்படைப்பது எதிர் கட்சி அமைப்பை குளிர் சாதனப் பெட்டிக்குள் போடுவதைப் போன்றதாகும். வேறுவகையில் கூறுவதாயின் இந்நடை முறையின் மூலம் கிட்டத்தட்ட பாராளுமன்றத்தின் அரைப்பங்கு உறுப்பினர்களைச் செயலிழக்கச் செய்கின்றோம்.

பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சி வாழ்க்கைக்கு உதவும் பொருட்டும் அதனைப் பாதுகாக்கும் பொருட்டும் ஆளுங் கட்சிக்கு ஒரு கண்ணாடி போல் தொழிற்பட வேண்டும். கண்ணாடியொன்று ஒரு விரோதியாக அல்லது கொலைக்கான ஒரு ஆயுதமாக இருக்க முடியாது. அவ்வாறு தான் எதிர்க் கட்சியும். ஆனால் எமது அரசியல் முறை எதிர்க் கட்சியை, தேசத்தைக் கட்டியெழுப்புவதில் ஒரு பொறுப்புள்ள பங்காளியாக ஆக்குவதற்குப் பதிலாக நிரந்தரமான ஒரு விரோதியாக்கிவிட்டது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசின் பிரதான அமைப்பையும் ஜனநாயக நிறுவனங்களையும் மீள்பரிசீலனை

செய்யும் படி இம்மாநாட்டின் ஊடாக தேசத்துக்கு வேண்டுகோள் விடுக்கின்றது. இன்றேல் எதுவும் சரிவருமென்று தோற்றவில்லை.

எதிர்க் கட்சியை ஒதுக்கிவிட்டு, பொருத்தமான திருத்தங்களுடன் நிறைவேற்றுக் குழுக்களைக் கொண்ட பாராளுமன்ற முறைக்கு திரும்பிச் செல்வது எமக்குப் பயனுடையதாக இருக்குமா? தற்போது உள்ளவாறு பாராளுமன்றத்தின் அரைப்பங்குக்கும் கூடுதலான உறுப்பினர்கள் வெறும் பார்வையாளர்களாகவும் ஒதுங்கி நிற்பவர்களாகவும் இருப்பதன் விளைவாகத் தீர்மானமெடுக்கின்ற செயல் முறையில் உண்மையாகப் பங்குபற்றாதவர்களாயிருக்கின்ற எதிர் நிலையானதும் அழிவுத் தன்மையுமான அணுகுமுறைக்குப் பதிலாக ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் கூடிய பொறுப்பானதும் ஆக்கபூர்வமானதுமான பங்கை வகிப்பதோடு நிறைவேற்று அதி காரத்தையும் பகிர்ந்துகொள்ளச் செய்கின்ற முறை நல்லதா?

**மொழிக் கொள்கை**

அடுத்த கேள்வி பிரிவினைப் போக்குகளுக்கு விதை விதைத்த எமது மொழிக் கொள்கை பற்றியது. இதன் விளைவு தான் எமது இளைஞர்களின் விலை மதிப்பற்ற உயிர்களைப் பலிகொண்டதும் இலங்கை தாங்கிக் கொள்ள முடியாத பெருஞ் செல்வத்தை அழித்ததுமான இன்றைய யுத்தம். யுத்தம் இல்லாதிருப்பின் இலங்கை தென் ஆசியா முழுவதற்கும் ஒரு மாதிரிப் பொருளாதாரமாக விளங்கியிருக்கக் கூடும். இன்னமும் காலம் கடந்து விடவில்லை. நாம் ஒரு தேசம் என்ற வகையில் மொழிக் கொள்கை தொடர்பான எமது மனப்பான்மையை மாற்றுவதற்கான துணிவும், உறுதியும் எமக்கிருக்குமாயின் இப்போதும் நாம் வெற்றியடையலாம். கவலையளிக்கின்ற அனேக மனப்பான்மை முதன்மையானது. சிங்கள மொழி சிங்கள மக்களினது மொழியாக மட்டும் இருக்க முடியாது. தமிழ் சிறுபான்மைத் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் மொழியாக மட்டும் இருப்பது இல்லாதொழிய வேண்டும். வேளை கடந்த இந்நேரத்தில் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டும் ஒவ்வொரு இலங்கையரதும் மொழியாக வருவதற்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்க வேண்டிய கடமை எமக்குண்டு. ஒவ்வொரு இலங்கையரும் இவ்விரு தேசிய மொழிகளிலும் சம

அளவில் பரிச்சமுடையவர்களாகவும் திறமையுடையவர்களாகவும் ஆக்கக் கூடியவாறு எமது கல்வி முறை மறு சீரமைக்கப்பட வேண்டும் என்பதோடு உடனடியாகப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இரு தேசிய மொழிகளும் தெரியாததன் விளைவாக எமது மக்களின் உற்பத்தி நேரம் பாரிய அளவில் இழக்கபப்படுவதைப் பாருங்கள். நாடு அதன் முழு நேரத்தையும் மொழி பெயர்ப்புகளிலும் உரை பெயர்ப்புகளிலும் விரயமாக்குகின்றது. மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களே, சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்டத்தில் நீங்கள் பேசிய பின்னர், தனிப்பட்ட உரையாடல் ஒன்றின் போது முன்னர் ஒரு முறை நான் இதனை உங்களுக்குக் கூறியிருக்கிறேன். ஆங்கிலத்தில நீங்கள் ஆற்றிய உரை தமிழிலும் சிங்களத்திலும் 40 நிமிடங்கள் மொழிபெயர்த்துக் கூறப்பட்டது. மொழி பெயர்ப்பில் இலங்கை மக்களால் விரயமாக்கப்படும் நேரம் பற்றி எப்போதும் விழிப்புடையவனாக நான் இருந்துள்ளதனால் அந்த நாற்பது நிமிடங்களில் தேசம் விரயஞ்செய்த மொத்த நேரத்தைக் கணக்கிட்டேன்.1.7 கோடி மக்களின் 40 நிமிடங்கள் 1294ஆண்டுகளாகின்றன. 40 நிமிடங்களுக்குள் நாடு அதன் உற்பத்தி நேரத்தில் 1294 ஆண்டுகளை இழந்துவிட்டது.

ஜேர்மனியர் அல்லது பிரெஞ்சுக்காரர் போன்ற வெளிநாட்டவர் ஒருவருடன் நடந்து கொள்ளும் போது மொழிபெயர்ப்பினதும் உரைபெயர்ப்பினதும் தேவையை ஒருவர் புரிந்து கொள்ளலாம். ஒரே மண்ணைச் சேர்ந்த இரு மக்கள் ஒருவரொருவருடன் தொடர்பு கொள்வதற்கு உதவி மொழிபெயர்ப்பாளர்கள் தேவைப்படுகின்றனரென்பது முரண் நகைப்புக்குரியதில்லையா? எவ்வாறு எந்த ஒரு மனிதனும் பிறிதொருவனுக்கு மேம்பட்டவன் இல்லையோ அவ்வாறே எந்தவொரு மொழியும் வேறொரு மொழிக்கு மேம்பட்டதல்ல என்பது தான் மொழி தொடர்பில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் மனப்பான்மை. எல்லா மொழிகளும் சமமானவை. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய எல்லா மூன்று மொழிகளிலும் அறிவும் மொழித் திறனும் தான் இலங்கை மக்கள் அனைவரினதும் முன்னேற்றத்திற்கான முக்கிய திறவுகோல்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் . தனிப்பட்ட மனிதனின் மேன்மையிலும் சுதந்திரத்திலும் நம்பிக்கை கொண்டுள்ளது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இலங்கைத் தனித்துவமொன்று உருவாக்கப்படுவதிலும் நம்பிக்கை வைத்துள்ளது. எமது நோக்கம் ஒரு நியாயமான சமூக, பொருளாதார, கலாசார ஒழுங்கை எய்துவது. நாம் நாட்டின் ஐக்கியத்திலும் ஒருமைப்பாட்டிலும் நம்பிக்கை வைத்துள்ளோம்.

எமது நாட்டில் எல்லாச் சமூகங்களுக்கிடையிலும் அன்னியோன்னியம் நிலைநாட்டப்படுவதை நாம் ஆவலுடன் எதிர் பார்க்கின்றோம்.

இலங்கையின் முஸ்லிம் சமூகம் அதன் நாட்டின் மீது வைத்துள்ள அன்பு வேறு எந்தச் சமூகத்தினதும் அன்பை விட எள்ளளவிலும் குறைந்ததல்ல. நாம் பிரஜைகளுக்கிடையில் சமத்துவத்தை மட்டுமன்றி எல்லா சமூகங்களது சமத்துவத்தையும் நம்புகிறோம். அதனால் தான் முஸ்லிம் சமூகத்தின் சுய மரியாதையையும் அரசியல் தனித்துவத்தையும் விட்டுக் கொடுக்காத வகையில் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வற்புறுத்துகின்றது.

வெவ்வேறு கருத்துக்களைக் கொண்ட அரசியல் கட்சிகள் ஒரு நட்புறவான சூழலில் எமது மேடையில் ஒன்று கூடி இருப்பதனால், இன்றைய நாள் இலங்கைக்கொரு மகிழ்ச்சிகரமான நாளாகும். எமக்கு மன உறுதியும் துணிவும் பெருந்தன்மையும் இருக்குமாயின் இந் நற்புறவுக்கான சூழல் இலங்கையை நிரந்தர சுபிட்சமாக்குவதில் நாம் வெற்றி பெற முடியும். அன்றைய தினத்தைத் தான் ஒவ்வொரு இலங்கையரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

எமது நாட்டைப் பற்றிய எமது கனவுகள் எல்லாம் எதிர்காலத்தில் நனவாக வேண்டும் என்றும் பிரார்த்திப்போமாக.

*இன்ஷாஅல்லாஹ்!*

Printed By: Unie Arts (Pvt) Ltd.